# ஒன்றான மெய் சபை

Louis Rushmore

ராஜநாயகம்

# The Church Divine (Tamil)

Copyright 2016 - Tamil World Soul Winning Campaign®

*First Impression* : *March, 2016*

*Copies* : *3000*

*Translation* : ***E.Z.S. Rajanayagam***

***&***

***B. Benny Martin***

*Published By :*

***TAMIL WORLD SOUL WINNING CAMPAIGN***

*86 - A, Dharapuram Road, Kangayam - 638 701.*

*Tamilnadu, India.*

*Ph : 04257 - 230030, 98427 30382.*

# பதிப்பாசிரியர் உரை

" கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் " ( I பேதுரு 3 : 15).

பேதுரு அப்போஸ்தலனின் இந்த வார்த்தைகளுக்கு ஒப்ப, பரிசுத்த வேதாகமம் அறுதியிட்டு வெளிப்படுத்தும் ஒன்றான மெய் சபையைக் குறித்து, கூரைமீது ஏறி நின்று கூவிக்கூவி உலகிற்கு உரக்க அறிவிக்க நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறோம்.

ஏனெனில், நாம் வாழுகின்ற உலகில் எண்ணில் அடங்காத சபைகள் விதவிதமான பெயர்களில் முளைத்து எழும்பி பரவிக் கிடக்கின்றன. இப்பிரிவுச் சபைகளில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான மக்கள், இவைகளுக்கு வேத ஆதாரம் இல்லை என்பதைக் குறித்துச் சற்றும் அக்கறைப்படாமல், " பிரபலமான சபை " என்பதற்காகவும், " பாரம்பரியம் உள்ள சபை " என்பதற்காகவும், " பெற்றோர்கள் அங்கம்வகித்த சபை " என்பதற்காகவும், " அருகாமையிலுள்ள சபை " என்பதற்காகவும், " பெரிய கட்டிடம் உள்ள சபை " என்பதற்காகவும், இன்னும் இப்படிப் பல அற்பக் காரணங்களுக்காகவும், அந்தந்த சபைகளில் அங்கம் வகித்து, தங்கள் பக்தி வாழ்வுக்கு அதுவே போதும் என்ற நினைப்போடு வாழ்ந்து வருகின்றனர். ஆயினும், இயேசு கிறிஸ்து சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறபடியால் (யோவான் 12 : 48), இந்நிலை தேவனுடைய பார்வையில் ஏற்புடையதாக இருக்காது.

ஆகவே, இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் தேவனுடைய நித்தியத் திட்டத்தின்படியான, இயேசுவானவர் வாக்களித்துக் கட்டின (மத். 16 : 18) ஒன்றான மெய் சபையாகிய கிறிஸ்துவின் சபையை அடையாளங் கண்டு, அதில் அங்கம் வகிக்க நாங்கள் ஊக்கமாக ஜெபிக்கிறோம்.

மேலும், இலக்கியப் பணியில் எங்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வரும் சகோதரி. **Betty Choate**, சகோ. **Jerry Bates**, சகோதரி. **Paula Bates** அவர்களுக்கும், மொழியாக்கப் பணியில் தோள் கொடுக்கும் சகோ. பென்னி மார்டின் அவர்களுக்கும், அச்சகப் பணியில் உதவிய சகோ. சாமிதுரை அவர்களுக்கும், என் பெலவீனங்களில் என்னை வெகுவாய்த் தாங்கி வரும் என் அன்பு மனைவி சகோ. ரேச்சல் நாயகம் அவர்களுக்கும், அச்சுப் பணியில் பேராதரவு காட்டிவரும் சன் பிரிண்ட் கிராப்ட்ஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

14. 3. 2016
காங்கயம்

ராஜ்ஜியத்தின் விரிவாக்கப் பணியில்

(EZS ராஜநாயகம்)

## Dedication - சமர்ப்பணம்

*Bonnie Sue Rushmore*

**பான்னி சூ ரஷ்மோர்**

Dec.25, 1956 - May 18, 2015



அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள, மிஸிஸிபி மாகாணத்தின் வினோனா என்னும் நகரை மையமாகக் கொண்டு இயங்கி வரும் " உலக ஊழியக் குழு " வின் அங்கமான சகோ. லூயிஸ் ரஷ்மோர் (Louis Rushmore) அவர்களின் மனைவிதான் சகோதரி பான்னி சூ ரஷ்மோர் (Bonnie Sue Rushmore) அவர்கள். கர்த்தரின் பெரிதான ஆசீர்வாதத்தால் இவர்கள் மூன்று பிள்ளைச் செல்வங்கள் இவர்களுக்குண்டு. கடந்த 2015 - ம் ஆண்டு மே-18ல், அடுத்த வாழ்வுக்கு இவர் தேவனால் அழைத்துக் கொள்ளப்பட்டார்.

தன் கணவரோடு வாழும்படி கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட 42 ஆண்டுகளில் ஒப்பற்ற வாழ்க்கைத் துணையாகவும், சிறந்த தாயாகவும், நம்பிக்கைக்குரிய அறிவுரையாளராகவும், ஆத்தும பாரம் உடையவராகவும், இயேசு கிறிஸ்துவுக்காக அயராது பாடுபடுகிறாகவும் இருந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இவர் ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் மற்றும் பேச்சாளர். தன் எழுத்துத் தாலந்தாலும், பேச்சுத் திறனாலும் உலகெங்கிலுமுள்ள அநேகருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். இவர் அடுத்த வாழ்வுக்குள்ளாகப் பிரவேசித்தபோது, நூற்றுக்கணக்கில் வந்து குவிந்த இரங்கல் செய்திகள் இதற்கு மிகச்சிறந்த சான்று.

பக்திமிகு இச்சகோதரிக்கு இந்நூல் சமர்ப்பிக்கப்படுகிறது.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதிப்பாசிரியர் உரை | 3 |
| 2. | சமர்ப்பணம் | 4 |
| 3. | ...தேவன் வெளிப்படுத்தித் தந்த பெயரைக் கொண்டுள்ளது | 9 |
| 4. | ...தேவனால் ஆரம்பிக்கப்பட்டது | 13 |
| 5. | ... தேவன் தந்த ஆளுகை அமைப்பைக் கொண்டுள்ளது | 21 |
| 6. | ...தொழுகையில் தேவ திட்டத்தின்படியானது | 26 |
| 7. | ...உபதேசத்தில் தேவ திட்டத்தின்படியானது | 33 |
| 8. | ...ஒற்றுமையில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது | 38 |
| 9. | ...ஊழியத்தில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது | 45 |
| 10. | ...ஞானஸ்நானத்தில் தேவத்திட்டத்தின்படியானது | 51 |
| 11. | ...ஒழுங்குபடுத்துவதில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது | 59 |
| 12. | ...தேவத்துவத்தில் தெய்வீகத் தன்மையுள்ளது | 66 |
| 13. | ...ஐக்கியத்தில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது | 75 |
| 14. | ...ஆவியில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது | 82 |
| 15. | ...அன்பில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது | 89 |

## தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளிலிருந்து உங்களுக்கு விருப்பமான பெயரைத் தெரிந்து கொள்ளுங்கள்

என்னுடைய சபை - மத். 16 : 18

ஜீவனுள்ள தேவனுடைய சபை - I தீமோ. 3 : 15

கிறிஸ்துவின் சபை - ரோமர் 16 : 16

சபை - அப். 2 : 47; 8 : 12

தேவனுடைய சபை - I கொரி. 1 : 2

கிறிஸ்துவின் சரீரம் - எபே. 4 : 12

கிறிஸ்துவின் மணவாட்டி - எபே. 5 : 21 - 32; வெளி. 22 : 17

தேவனுடைய ஆலயம் - I கொரி. 3 : 16


அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியம் - கொலோ. 1 : 13

தேவனுடைய வீடு - I தீமோ. 3 : 15

சபை பெயர்

கூடும் இடம்

# தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளிலிருந்து உங்களுக்கு விருப்பமானதைத் தெரிந்து கொள்ளுங்கள்



அதிகாரம் – 1

# புதிய ஏற்பாட்டு சபை
# தேவன் வெளிப்படுத்தித் தந்த பெயரைக் கொண்டுள்ளது

**ப**ரிசுத்த வேதாகமத்தில் எல்லோராலும் வாசிக்கப்படக்கூடிய சபை, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டுள்ள சபை (அப்.20:28; எபே.5:27), இயேசு கிறிஸ்து தலையாயிருக்கிற சபை ( எபே.5:23 ), பல வேதாகமப் பெயர்களால் அறியப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர்கள் எல்லாம் தேவனால் கொடுக்கப்படவைகளாயிருந்து, தேவனையோ அல்லது இயேசு கிறிஸ்து வையோ எப்பொழுதும் மகிமைப்படுத்துகிறது. அது போலவே, புதிய ஏற்பாட்டு சபையில் இருக்கும் அங்கத்தினர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கர்த்தருடைய சபைக்கான மற்றும் சபை அங்கத்தினர்களுக்கான வேதாகமப் பெயர்களை அறிந்து கொள்ளும்போது இன்றைக்கு நடைமுறையில் சபைகளுக்கும், அதன் அங்கத்தினர்களுக்குமுள்ள பெயர்கள் தேவனால் கொடுக்கப்பட்டவைகளா அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளா என்பதைச் சுலபமாக அறிந்து கொள்ள முடியும்.

### சபைக்கான வேதாகமப் பெயர்கள்

கண்டிப்பாகச் சொல்லவேண்டுமானால், கர்த்தருடைய சபைக்கென்று பெயர் இல்லை. ஆயினும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள, சபைக்கான வேதாகமப் பெயர்களெல்லாம் அதை விவரிப்பதற்கான பதங்கள் மட்டுமே. இப்பதங்கள் ஒவ்வொன்றும் சபையின் தன்மையையோ அல்லது தேவனோடும், இயேசு கிறிஸ்துவோடும் அதற்கிருக்கும் உறவையோ ஒருவகையில் விவரிக்கிறது.

பொதுவாகப் பெயர்கள் என்பது ஒரு வியாபாரத்திற்கான உற்பத்திப் பொருளை பிற உற்பத்திப் பொருள்களிலிருந்து அடையாளப்படுத்துகிறது. ஒரேயொரு உற்பத்திப் பொருள் மாத்திரம் இருக்குமானால், ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்கான வேறு பெயர்கள் தேவையில்லை. அந்தப் பொருளானது அது எப்படி இருக்கிறதோ அப்படியோ அல்லது அதை உற்பத்தி செய்தவரோடு சம்பந்தப் படுத்தியோ அழைக்கப்பட முடியும்.

கத்தோலிக்க சபை மற்றும் பிரிவினைச் சபைகள் உருவாகி எழும்பும்முன், சபைக்காக வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள பதங்கள் எவ்வித குழப்பத்திற்கும் இடமின்றி அந்த ஒன்றான மெய்ச்சபையை அடையாளப்படுத்தியது. வெளிப்படுத்தப்பட்டுள்ள பெயர்களெல்லாம் அந்த ஒரு சபையையோ அல்லது அதைக் கட்டினவரோடு உள்ள உறவையோ சம்பந்தப்படுத்தி விவரிப்பதாகவே உள்ளது. இருப்பினும், இன்றைக்கு லட்சக்கணக்கான பிரிவினைச் சபை மக்கள், நாங்கள் சார்ந்திருக்கும் சபைகளை, ஒன்றிலிருந்து மற்றதை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, வேதவசன ஆதாரம் எதுவுமில்லாமல் விதவிதமான விநோத பெயர்களால் அழைத்துக் கொள்ளுகிறார்கள்.

ஆகையால், கர்த்தருடைய சபைக்கான வேதாகமப் பெயர்கள் ஒன்றை அடையாளப்படுத்தும் குறியீட்டுப் பெயர்கள் அல்ல. மாறாக, ஏராளமாயிருக்கிற பிரிவினைச் சபைப்பெயர்கள் குறியீட்டுப் பெயர்களாகத்தான் இருக்கின்றன. கர்த்தராகிய இயேசு மரித்து, ஏற்படுத்தியது அவருடைய ஒன்றான சபையைத் தான் (மத். 16 : 18). ஆனால், பிரிவினைச் சபையைச் சார்ந்தவர்கள் வைத்துள்ள குறியீட்டுப் பெயர்கள், ஒரு மதத்திலிருந்து தங்களை அடையாளப்படுத்திக் காட்டு வதற்கும், இன்னொரு பிரிவினைச் சபையிலிருந்து தங்களை அடையாளப் படுத்திக் காட்டும்படியாகவும் உள்ளதே தவிர, வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள ஒன்றான சபையையும், எளிமையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தையும் அடையாளப்படுத்துவதாக இல்லை.

வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கர்த்தருடைய சபைக்கான விவரிப்புப் பதங்கள் இவைகளை உள்ளடக்கியிருக்கின்றன. **என் சபை** (மத். 16 : 18), **சபை** (அப். 2 : 47; 8 : 1), **தேவனுடைய சபை** (I கொரி. 1 : 2), **கிறிஸ்துவின் சபை** (ரோமர் 16 : 16), **கிறிஸ்துவின் சரீரம்** (எபே. 4 : 12), **ஜீவனுள்ள தேவனுடைய சபை** (I தீமோ. 3 : 15) **தேவனுடைய ஆலயம்** (I கொரி. 3 : 16), **கிறிஸ்துவின் மணவாட்டி** (எபே. 5 : 21 - 32; வெளி. 22 : 17), **அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியம்** (கொலோ. 1 : 13) மற்றும் **தேவனுடைய வீடு** (I தீமோ. 3 : 15). வேதாகமம் சொல்லுகின்ற அந்த ஒன்றான மெய் சபைக்கு வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள பெயரைத் தரித்துக்கொள்வது ஒரு முக்கியமான அடையாளக் குறியாக இருந்தாலும்கூட வேதாகமப் பெயரைத் தரித்துக்கொள்வது மட்டும் கர்த்தருடைய சபைக்கான பண்பியல்பாகிவிடாது.

**கர்த்தருடைய சபை அங்கத்தினர்களுக்கான வேதாகமப் பெயர்கள்**

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் தேவனுடைய ஜனங்களுக்கு

வித்தியாசமான விவரிப்புப் பெயர்களைக் கொடுக்கிறது. பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள பல பதங்கள் புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இருந்தபோதிலும். புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்களுக்கு குறிப்பிடத்தக்கதும், புதியதுமான ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் தேவஜனங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு, புதிய ஏற்பாட்டிலும் கொடுக்கப்பட்டுள்ள பதங்களாவன: **அவயவங்கள்** (I கொரி. 12 : 27 ). **சீடர்கள்** (அப். 6 :1; 20 : 7), **விசுவாசிகள்** (அப். 5 : 14), **பரிசுத்த வான்கள்** (அப். 9 : 13 ; I கொரி. 1 : 2), **சகோதரர்கள்** (ரோமர் 8 : 14) மற்றும் **தேவனுடைய புத்திரர்** (I யோவான் 3 : 1 – 2), அத்தோடு இந்தப் பதங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; **தேவனுக்குப் பிரியமானவர்கள்** (ரோமர் 1 : 7), **தேவனுடைய சுதந்திரர்** " (ரோமர் 8 : 7), **ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்** (I பேது 2 : 9).

செயல்வடிவம் பெறுவதற்கு வெகுகாலத்துக்கு முன்பாகவே தீர்க்க தரிசனங்களில் சொல்லப்பட்ட இன்னொரு பெயரும் புதிய ஏற்பாட்டில் தேவ ஜனங்களுக்காக உள்ளது. புறவினத்தார் சபையாகிய ராஜ்ஜியத்தில் அங்கமாகி அதன் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்போது, எல்லா தேவ ஜனங்களும் **கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் அழைக்கப்படுவார்கள்** (ஏசாயா 62 : 1, 2 ; 56 : 5 ) என்று ஏசாயா தீர்க்கன் போதித்துள்ளார். கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் சபைக்குள்ளாக வந்ததற்குப் பிறகு, **கிறிஸ்தவர்** என்னும் புதுப்பெயர் வழங்கப்பட்டது (அப். 26 : 28 ; I பேதுரு. 4 : 16), " கிறிஸ்தவன் " என்னும் பதம், தன்னை மீட்டுக் கொண்டவரோடு இருக்கும் தனித்துவமான உறவை விவரிக்கிறதாக உள்ளது.

**முடிவுரை**

தேவனால் கொடுக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவர்கள் மட்டுமே அங்கமாக இருக்கமுடியுமென்பதைச் சரியான முறையில் புரிந்துகொண்டு, நன்மை, தீமை அறியத்தக்க வயது வந்த ஒவ்வொருவரும் கிறிஸ்தவராக மட்டும் இருக்கும்படி முயற்சிக்க வேண்டும். பிரிவினைச் சபையாரின் மற்ற பெயர்களெல்லாம் மனித ஆரம்பங்களைக் கொண்டதாயிருந்து, தேவன் தந்த பதத்தைக் கெடுத்துப் போடும். ஆகவே, கிறிஸ்தவர்களுக்கு வேறே குறியீட்டுப் பெயர்கள் இல்லை. ஒன்று, ஒருவன் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க முடியும் அல்லது உண்மையில்லாத கிறிஸ்தவனாக ஒப்புக்கு இருக்க முடியும்.

## ஒரே விதமான அமைப்புகள்
## ஆகவே, சபையும், ராஜ்ஜியமும் ஒன்றே

**கிபி 65**
சபை / ராஜ்ஜியம் இருந்தது
I தீமோ.3:15;கொலோ.1:13

**கிபி 96**
யோவான் ராஜ்ஜியத்தில்
இருந்தார் வெளி.1:9

இப்பொழுது! ராஜ்ஜியத்தின்
ராஜா
I கொரி. 15:24-28
சபையின் தலைவர் கொலோ. 1: 8

**கிபி 45**
ராஜ்ஜியத்தில் புறவினத்தார்
ஏசா.66:2; அப்.10,11

**கிபி 40**
சபை பரவுகிறது
ஏசா.2:3; அப்.1:8 ; 8:1

**கிபி 33**
சபை பலத்தோடே
வந்தது அப்.1:8; 2:1-4

**கிபி 33**
வாழ்கிற காலத்தில்
ராஜ்ஜியம்
மாற்கு.9 : 1

**கிபி 33**
சபை ஆரம்பமாகிறது
அப்.2 : 41, 47

**கிபி 33**
நான்காம் ராஜ்ஜியம்
தானி.2:31-45

**கிபி 33**
கிறிஸ்து உயர்த்தப்பட்டார்
அப்.2:33

**கிபி 33**
எருசலேமில்
ஏசா.2:2,3; லூக்கா
24:47

**கிபி 33**
கடைசி நாட்கள்
அப்.2:16,17

**கிபி 33**
காத்திருந்தார்கள்
மாற்கு 15:43

**கிபி 33**
வரும்
லூக்கா 22:18

**கிமு 760**
கடைசி நாட்களில்
ஏசா.2:2,3; யோவேல்
2:28

**கிமு 600**
அந்த ராஜாக்கள்
தானி 2:44

**கிமு 555**
பழங்காலத்தில்
தானி 7:13,14

**கிபி 30**
சமீபம்
மத்.3:2; 4:17

**கிபி 32**
பெலத்தோடே வரும்
மாற்கு 9:1

**கிபி 32**
கட்டுவேன்
மத்.16:18

கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தின்
சிலுவையானது, கிறிஸ்து
சபையின் சிலுவை
யாகவும் உள்ளது

**கிபி 31**
இதற்காக
ஜெபிக்கப்பட்டது
மத்.6:9-10

தேவனுடைய நித்திய நோக்கத்தில் சபை : எபே.3:10,11
ஆகையால் : **சபை = ராஜ்ஜியம்**

ஒரே விதமான திறவுகோல்கள்!
ராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் சபையின் கதவைத் திறந்தது (மத் 16:18,19; அப் 2)
ஆகையால் : ராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் = சபையின் திறவுகோல்கள் & ராஜ்ஜியம் = சபை

# புதிய ஏற்பாட்டு சபை தேவனால் ஆரம்பிக்கப்பட்டது

இயேசு கிறிஸ்து மாத்திரமே தலைவராயிருந்து, தேவனால் கொடுக்கப்பட்ட பெயர்களைக் கொண்டுள்ள அந்த ஒரு சபை ( அதிகாரம் 1 - ஐ பார்க்கவும் ) தேவனால் ஆரம்பிக்கப்பட்டதாக உள்ளது. இதற்கு ஆதாரமாக இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. (1) உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே தேவனுடைய மனதில் சபை இருந்ததாக வேத வசனங்கள் கூறுகிறது. ( 2 ) பரலோகத்தின் அதிகாரத்தையும், வல்லமையையும் கொண்டு, தேவக்கரம் இதைத் திட்டமிட்டு ஆரம்பித்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளைக் கவனமாகப் படித்தால், மத உலகில் சபையைப் பற்றிய ஏராளமான குழப்பங்கள் இருந்தாலும், வேதாகமம் அடையாளப்படுத்தும் சபை எது என்பதை ஓர் உண்மையான வேதாகம மாணவனால் அதிக சிரமமில்லாமல் புரிந்துகொள்ள முடியும்.

## தேவனுடைய சிந்தையில் ஆரம்பம்

இயேசு கிறிஸ்துவை மேசியா என்று யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததினால், ஒரு பின் யோசனையாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று தான் சபை என்று அநேகர் தவறாக நம்புகின்றனர். சபை மற்றும் ராஜ்ஜியம் என்பது ஒன்றுக்கொன்று மாற்றான பதங்கள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் (மத். 16 : 16 - 19 ) ராஜ்ஜியத்திற்கான மாற்று ஏற்பாடுதான் சபை என்றும் எண்ணுகின்றனர். அப்படிச் சொல்வதும், நினைப்பதும் தேவன் மற்றும் கிறிஸ்துவின் சர்வவல்லமையையும், சர்வ ஞானத்தையும் கேள்விக்கிடமாகவும், கேலிக்கிடமாகவும் மாற்றிவிடும்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில், மனிதனுக்கான தேவனுடைய மீட்பின் திட்டமானது சபையின் மூலமாகத் தெரிய வந்தது என்று விளக்கியுள்ளார் ( எபே. 3: 3-12 ). 3-5 வசனங்களில், முற்காலங்களில் அது ஒரு " இரகசியமாயிருந்தது " என்று குறிப்பிட்டுள்ளார். அந்த இரகசியம் தனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார். இந்த

இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. இந்த இரகசியம், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய் ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய் கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்கள் என்பது ( வ.3 ) யூதர்களாலும், பொதுவாக எல்லோராலும் கவனிக்கப்படாமலிருந்தாலும், அநேக தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய திட்டத்தின்படியான பலன், யூதர் மற்றும் புறஜாதிகள் ஆகியோரை சேர்த்தே தேவனால் திட்டமிடப்பட்டதாகச் சொல்கிறது (ஆதி. 12 : 3 ; 22 : 18 ; ஏசா. 62 : 2; யோவேல் 3 : 1 - 2; லூக்கா 2 : 25 - 32 ).

தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடும் விளக்கமும், முதலில் **இரகசியம்** என்றழைக்கப்பட்டது. இங்கே **நற்செய்தி** என்று சொல்லப்பட்டுள்ளது. அது சபைக்குக் கட்டளையாக உள்ளது. மேலுமாக, சபையானது **நித்திய நோக்கம்** என்றும், **தேவனுடைய சிந்தை** என்றும் கூறப்பட்டுள்ளது.

தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதித் தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது (எபே. 3 : 9 – 11). இன்னும், தீத்து 1 : 1 – 3 மற்றும் I பேதுரு 1 : 18 – 20 ஆகிய வசனங்கள் மனிதனுடைய மீட்புக்கான தேவனுடைய திட்டம் பற்றிப் பேசுகிறது. அவை, சபை ஆரம்பமானதற்குப் பிறகு தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சபையானது, தேவனுடைய திட்டம், மாறாக மனிதனுடைய திட்டமல்ல. உலகமும், மனிதனும் உண்டாக்கப்படுவதற்கு முன்னமே, தேவன் சபை கட்டப்படுவதைத் திட்டமிட்டார். கிறிஸ்து தான் சபையின் தலைவராகவும், இரட்சகராகவும் இருக்கும்படியாகத் தீர்மானித்தார் (எபே.5:23). விழுந்துபோன மனிதனை சபையின் மூலமாக மீட்க வேண்டுமென்பது எப்பொழுதும் தேவத்திட்டமாக இருந்துள்ளது. ஆகவே, இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தராலே சபையில் சேர்க்கப்பட்டார்கள் ( அப்.2:47 ). ஆகையால், கர்த்தருடைய சபை இரட்சிக்கப்பட்டவர்களின் சரீரமாயிருக்கிறது.

**தேவனால் நிறுவப்பட்டது**

உலகத் தோற்றத்துக்கு முன்பாக தேவன் தமது சிந்தையில் சபையை நிறுவியதோடல்லாமல், அந்தத் தெய்வீக அமைப்பைப் பூமியில் ஏற்படுத்து வதற்குத் தனக்கென ஒரு நேரத்தைத் தெரிந்துகொண்டார். தேவனுடைய சிந்தையில் இருந்த சபையை பூமியில் ஏற்படுத்தும்படியான மாற்றத்திற்கு ஒத்தாசையாக இருந்தவை : 1. அந்தத் தெய்வீக அமைப்பிற்கு சபை மற்றும் ராஜ்ஜியம் என்னும் இரண்டு பதங்கள் ஒரே பொருளைக் கொடுப்பவையாக இருந்தது. 2. ஆகையால், ராஜ்ஜியம் நிறுவப்படும் என்பது சம்பந்தமான எல்லா தீர்க்கதரிசனங்களும் சமமான அளவில் சபையோடு சம்பந்தமுடைய தாயிருந்தன. 3. ராஜ்ஜியம் ( சபை ) பற்றின தீர்க்கதரிசனம் பூமிக்குரிய தன்மையுடையதாயிராமல், ஆவிக்குரிய தன்மையுடையதாய் இருக்கிறது.

சபை மற்றும் ராஜ்ஜியம் என்னும் வார்த்தைகள் ஒரே அமைப்பைக் குறிக்கக்கூடிய வார்த்தைகள் என்று சொல்வது, தேவன் மீது உண்மையான பக்தி கொண்ட அநேக மக்களுக்கு நகைப்புக்கிடமான ஒன்றாக உள்ளது. ஆயினும், இது சம்பந்தமான வேத பகுதிகளை நாம் கவனமாகப் படித்தால் இந்த வேதாகம உண்மைகள் வெளிப்படும்.

ராஜ்ஜியம் மற்றும் சபை என்னும் வார்த்தைகள் கர்த்தரால் அவரது உரையாடலில் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஏற்கனவே கண்டோம் (மத். 16 :18-19). அந்த வேத பகுதியில், இயேசு " ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை ( கட்டவும், கட்டவிழ்க்கவுமான அதிகாரம் ) முதல் நற்செய்திப் பிரசங்கத்தில் பயன்படுத்தினார் ( அப்.2 ). அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் சபையின் பிறந்த நாளை அறிவிக்கிறது. அதுமுதற்கொண்டு, சபை பற்றியவை எல்லாம் நிகழ்காலம் பற்றியதாகவே உள்ளது. எதிர்காலம் பற்றியதாக இல்லை. சபையைத் திறந்து வைப்பதற்கு பேதுரு ராஜ்ஜியத்திற்கான திறவுகோல்களைப் ( வசனங்களை ) பயன்படுத்தினபடியால், சபையும், ராஜ்ஜியமும் ஒரே அமைப்பாகவே உள்ளன.

இன்னும் அப்போஸ்தலர்கள் சபைக்கும், ராஜ்ஜியத்துக்கும் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை. கொரிந்துவிலிருந்த தேவனுடைய சபையின் கிறிஸ்தவர்களைப் பவுல் **பரிசுத்தவான்கள்** என்றழைத்தார் (I கொரி 1 : 2) அத்தோடு, கொலோசே பட்டணத்தில் **ராஜ்ஜியத்தின்** அவையவங்களாக இருந்த கிறிஸ்தவர்களையும் **பரிசுத்தவான்கள்** என்று குறிப்பிட்டுள்ளார் (கொலோ. 1 : 2, 13). அப்போஸ்தலன் யோவானும் தன்னை ராஜ்ஜியத்தின் அங்கம் என்று எழுதியுள்ளார் (வெளி. 1 : 9). இவர்களெல்லாரும் எவ்வித கேள்விக்கும் இடமின்றி புதிய ஏற்பாட்டு சபையின் அங்கத்தினர்களாகவும், ராஜ்ஜியத்தின் அங்கத்தினர் களாகவும் இருந்துள்ளார்கள். அவர்களனைவரும் " ஒரே சரீரத்தின் "

அங்கங்கள் (எபே. 4 : 4). அந்த ஒரே சரீரமானது " சபை " (எபே. 1 : 22, 23) என்றும், " தேவனுடைய ஆலயம் " (I கொரி. 3 : 16) என்றும், " தேவனுடைய வீடு " என்றும் ( I தீமோ. 3 : 15 ) மற்றும் " ராஜ்ஜியம் " ( கொலோ. 1 : 1) என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் ஒரே அமைப்பைக் குறிக்கக் கூடிய தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பதங்கள்.

வேதாகமத்தின்படி ராஜ்ஜியமும், சபையும் ஒற்றுக்கொன்று மாற்றான பதங்களாக இருக்கிறபடியால், ராஜ்ஜியம் நிறுவப்படும் என்று முன்னறிவிக்கும் ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் சபையைக் குறிக்கிறதாகவே உள்ளது. ராஜ்ஜியம் அல்லது சபை ஸ்தாபிக்கப்படும் என்று சொல்லப்பட்ட ஏராளமான தீர்க்க தரிசனங்களின் முழுமையான நிறைவேறுதல் தேவனால் சபை ஸ்தாபிக்கப் பட்டதென்பதற்கான மறுக்கமுடியாத சாட்சியாக உள்ளது. சபையைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின்படி அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திற்குப் பிறகான சபைகள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டவைகள் என்று கண்ணை மூடிக் கொண்டு சொல்லிவிடலாம். பல காலங்களுக்கு முன்னான தீர்க்கதரிச னங்களின்படி, " முதல் சபை " கட்டப்படும்படியாக தேவன் செய்தார். மேலும், அவர் " ஒரே சபையைத்தான் " நிறுவினார்.

ஏசாயா 2: 1-5; யோவேல் 2:28-3:2 மற்றும் மீகா 4:1-3 ஆகிய வசனங்கள் " ராஜ்ஜியம் " அல்லது " கர்த்தருடைய ஆலயம் " தோற்றுவிக்கப்படுவதற்கான இடமாக எருசலேம் பட்டணத்தை அடையாளப்படுத்துகின்றன. தானியேல் 2:31-45 வசனப்பகுதியானது கர்த்தருடைய ராஜ்ஜியம் **நான்காம் உலகப் பேரரசின்** காலத்தில் ஆரம்பிக்கப்படும் என்று போதிக்கிறது. பொதுவாக, மத உலகத்தால் **ரோமப் பேரரசு** தான் நான்காம் உலக வல்லரசு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கி.பி.33ல் எருசலேம் பட்டணத்தில் சபையானது ஸ்தாபிக்கப்பட்டதோடு, தீர்க்கதரிசனங்களில் ராஜ்ஜியம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்ட இடமும், காலமும் ஒத்துப்போகிறது. மேலும், இயேசுவானவர் தம்முடைய ஊழிய நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று சொன்னார். (மாற்கு 9:1). கர்த்தர் சொன்ன இந்தக் காரியம் தீர்க்கதரிசனங்களோடும், சபை ஸ்தாபிக்கப்பட்டதோடும் ஒத்துப்போகிறது.

மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்ட சபைகளைப் போலில்லாமல், வேதாக மத்தின் சபை கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி கட்டப்பட்டுள்ளது (அப். 20 : 28). தீர்க்கதரிசனமானது " ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்தது " என்று சொல்லுகிறது (தானி. 2 : 44). அந்தக் கல்தான் மத்.16:16-18 வசனங்களில், இயேசு தம்முடைய சபையைக் கட்டுவேன்

என்று சொன்ன வாக்குத்தத்ததிலுள்ள " பாறை " ( கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்னும் அறிக்கை ). அந்த சபையின் அஸ்திபாரமாக கிறிஸ்து இருக்கிறார் (I கொரி 3:11). " ஜீவனுள்ள கல்லாகிய " இயேசு, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட " பிரதான மூலைக்கல்லாக " இருக்கிறார் ( I பேதுரு 2:4-8; அப்.4:11 ). அத்தோடு, இயேசு சபையின் தலையாகவும், ராஜ்ஜியத்தின் ராஜாவுமாக இருக்கிறார் (I கொரி.15: 24-28).

ஒட்டுமொத்த யூதர்கள் எண்ணுவது போலும், இன்றைக்கு ஏராளமானவர்கள் நினைப்பது போலும், பூமிக்குரிய ராஜ்ஜியத்தை ஏற்படுத்தும்படியாக இயேசு வரவில்லை ( யோவான் 18:36,37 ). எருசலேமில் பூமிக்குரிய ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவது இயேசுவுக்கு நோக்கமாக இருந்திருக்குமானால், இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிலாத்து " இவனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை " என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்க முடியாது (யோவான் 18:38 ). அப்படி பூமிக்குரிய ராஜாவாவது அவருடைய விருப்பமாக இருந்திருக்குமானால் அவரைப் பலவந்தமாக ராஜாவாக்கும்படி முயற்சித்தபோது அதை அவர் தவிர்த்திருக்கமாட்டர் (யோவான் 6:15). அவர் விரும்பியிருந்தால் அவருக்கு இன்னுமொரு சிறந்த வாய்ப்பும் கிடைத்தது. ஆம், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும், அவைகளின் மகிமையையும், அவருக்குக் காண்பித்து, சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்தால் இவைகள் கொடுக்கப்படும் என்றான் (மத் 4: 8,9). ஆனால், இயேசு மறுத்தார். இங்கே பிசாசுக்கு அந்த வல்லமை இல்லை என்பது இயசேுவுக்குத் தெரியும் என்பது உண்மையாக இருந்தாலும் அவருக்கு அப்படிச் சொல்லப்பட்டது.

பரிசுத்த ஆவியினாலே திருமுழுக்குப் பெறுவதற்கு முன் (அப். 2 : 1 - 4) கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் தன்மை குறித்து சீடர்களுக்கும் குழப்பம் இருந்தது. கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாகவும் (மத். 24 : 1 - 3), இயேசு பரமேறுவதற்கு முன்பாகவும் (அப். 6 : 1 - 9), கர்த்தருடைய ராஜ்ஜியம் பற்றிய அவர்களுடைய தவறான எண்ணம் பளிச்செனத் தெரிந்தது. இயேசு ராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய தன்மை பற்றி போதித்தபோது, அவரைப் பின்பற்றின அநேகர் பின் வாங்கிப் போனார்கள். ஆயினும், அப்போஸ்தலர்கள் அவருடனே இருந்தார்கள் (யோவான் 6 : 22 - 29).

சகரியா மற்றும் எபி.7:14; 8:1-4 ஆகிய வசனங்களை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், இயேசு பூமியில் ஆளுகை செய்யவில்லை என்பதும், எருசலேமிலே இருந்து பூமியில் ஒருபோதும் ஆளுகை செய்யப்போவதில்லை என்பதும் நிரூபணமாகும். சகரியா தீர்க்கன் " கிறிஸ்து தம்முடைய சிங்காசனத்தின் மேல்

ஆசாரியராகவும் இருப்பார் " என்று கூறியுள்ளார். இருந்தபோதிலும், கர்த்த ராகிய இயேசுவைக் குறித்து எபிரெயர் ஆசிரியர் " பூமியில் இவர் இருப்பா ரானால் ஆசிரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசிரியர்கள் இருக்கிறார்களே " என்றார் (எபி. 8 : 4). பின்னாட்களில் இயேசு எவ்விதமாக இருப்பார் என்பது சம்பந்தமான வசனங்கள் சொல்லும் உண்மை யாதெனில் " ஆகாயத்தில் மேகங்கள் மேல் " என்பது தான் (அப். 1: 9 - 11; I தெச 4 : 16, 17 ; வெளி. 1: 7).

**முடிவுரை**

மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட சபைகளனைத்தும், தேவனுடைய பரிசுத்த குமாரனைக் கொண்டு ஆரம்பிக்கப்படாமல், அழிந்துபோகும் மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தப் போலி சபைகளெல்லாம் எருசலேமில் கர்த்தருடைய சபை நிறுவப்பட்டதற்குப் பிறகு, ரோம சாம்ராஜ்ஜியத்தின் செல் வாக்கைக் கொண்டு தவறான காலத்தில், தவறான இடத்தில் ஆரம்பிக் கப்பட்டவை . இச்சபைகள் கர்த்தரால் ஸ்தாபிக்கப்படும் என்று சொல்லப் பட்டுள்ள தீர்க்கதரிசனங்களோடு ஒத்துப்போவதில்லை. மாறாக, இச்சபைகள் புதிய ஏற்பாடு சொல்லும் ஒன்றான மெய் சபையைப் போன்றே ஒரு போலியான தோற்றத்தைக் கொடுக்க முடியும். வேதாகமம் விவரிக்கும் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்துவின் சபைகளையும் ( ரோமர் 16 : 16 ) அறுவடை செய்வதற்கான விதைகள் கலப்படமற்ற தேவனுடைய வார்த்தைகள் தான் (லூக்கா 8 : 11). தேவ வார்த்தைகள் அல்லாத வேறு ஏதாகிலும் மனிதர்களுடைய இருதயங்களில் நடப்படுமானால் அந்த வித்தியாசமான நாற்றுக்களைக் குறித்து இயசே " பரமபிதா " நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும் என்று கூறி இருக்கிறார்.

## உள்ளூர் சபை ஆளுகை, அதிகாரம் பற்றிய விளக்கப்படம்

தேவத்துவம்

அப். 17 : 29 ; ரோமர் 1 : 20 ; கொலோ 2 : 9


பிதா | குமாரன் | ப.ஆ

மத். 28 : 19

மத். 28 : 18

I யோவான் 4 : 9 — **குமாரன் இயேசு கிறிஸ்து** — யோவான் 12 : 48

அப்போஸ்தலர்கள்



மத். 18 : 18

**நற்செய்தி**



மத். 7 : 21 ; ரோமர் 1 : 16 ; கலா. 1 : 6 – 9

**மூப்பர்கள்**

தீத்து. 1 : 5 – 11 ; அப். 20 : 28 ; I பேதுரு 5 : 1 – 2

ஊழியர்கள்
II தீமோ 4 : 1 – 8

உதவிக்காரர்கள்
பிலி. 1 : 1 ; I தீமோ 3 : 8 – 13

போதகர்கள்
யாக். 3 : 1

மற்ற அப்போஸ்தலர்கள்
எபி. 13 : 7, 17

## உலகளாகிய சபை ஆளுகை, அதிகாரம் பற்றிய விளக்கப் படம்

தேவத்துவம்

அப். 17 : 29 ; ரோமர் 1 : 20 ; கொலோ 2 : 9

பிதா | குமாரன் | ப.ஆ

மத். 28 : 19

I யோவான் 4 : 9 — குமாரன் இயேசு கிறிஸ்து — யோவான் 12 : 48

அப்போஸ்தலர்கள் 

மத். 18 : 18

**நற்செய்தி**



மத். 7 : 21 ; ரோமர் 1 : 16 ; கலா. 1 : 6 - 9

- எங்காவது இருக்கும் சபை கி.பி. 33
- எங்காவது இருக்கும் சபை கி.பி. 1800
- எங்காவது இருக்கும் சபை கி.பி. 2045
- இப்போது இங்கே இருக்கும் சபை
- அங்கே இருக்கும் சபை

அதிகாரம்-3

# புதிய ஏற்பாட்டு சபை
# தேவன் தந்த ஆளுகை அமைப்பைக் கொண்டுள்ளது

இன்றைக்குள்ள அநேக பிரிவினைச் சபைகளைப் போலில்லாமல், புதிய ஏற்பாடு விளக்கும் கிறிஸ்துவின் சபைக்கு, மேல்நிலை அதிகாரம் பெற்றவர்களிலிருந்து, கீழ்நிலை வரைக்கும் காணப்படும் தொடர் அதிகார வரைமுறை இல்லை. இதற்கு குருமார்களோ மற்றும் பூமிக்குரிய தலைமையிடமோ அல்லது மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களோ இல்லை. ஒவ்வொரு உள்ளூர் சபையும் தன்னாட்சி உடையதாய் வேறெந்த சபையையும் சார்ந்திராமல் இயங்குகிறது. இந்தப் புதிய ஏற்பாட்டு சபையானது தேவனுடைய உபதேசச் சட்டத்தின்படி மூப்பர்களால் கண்காணிக்கப்பட்டு, உதவிக்காரர்களால் சேவை செய்யப்பட்டு பிரசங்கிகள் மற்றும் போதகர்களால் போதிக்கப்பட்டு, ஏனைய எல்லா அங்கத்தினர்களாலும், பொருளாதரத்திலும் மற்றெல்லாக் காரியங்களிலும் தாங்கப்படுகிறது.

### பரலோக தலைமையிடம்

பூமிக்குரிய ஒரு நபரோ அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவோ சபைக்குத் தலைமையாக இல்லாமல், இயேசு கிறிஸ்துவை மட்டுமே கர்த்தருடைய சபை தலைமையாகக் கொண்டுள்ளது. வானத்திலும், பூமியிலும் இயேசுவுக்குச் சகல அதிகாரமும் உள்ளது (மத். 28 : 18). மேலுமாக, சபையாகிய சரீரத்திற்குக் கர்த்தர் தலையாக உள்ளார் (எபே. 1 : 22, 23). இயேசு கிறிஸ்து தம்முடைய சிங்காசனத்தை விட்டுக் கொடுக்காமல் இப்பொழுது ஆளுகை செய்து கொண்டுள்ளார் (I கொரி. 15 : 24 - 28) பூமியிலிருந்தல்ல. மாறாக, பரலோகத் தலைமையிடத்திலிருந்து, சபையின் மீது தமது தலைமைத்துவத்தை இயேசு செயல்படுத்தி வருகிறார் (எபே.1 : 3 ; பிலி. 2 : 9 - 11 ; 20 - 23; எபி. 8 : 1; அப். 7 : 55 ). இயேசு எங்கிருந்து மற்றும் எந்தளவு தமது அதிகாரத்தைச் செயல்படுத்துகிறார் என்பது எபே 1 : 20 - 23 வசனப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. **எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில்**

தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

**பன்மைப் பொருளில் மூப்பர்கள்**

புதிய ஏற்பாட்டு காலத்தில் **இரண்டு** அல்லது **அதற்கு மேற்பட்ட மூப்பர்கள்** முழுமையான ஆளுகை அமைப்பைப் பெற்ற சபைகளில் ஏற்படுத்தப்பட்டனர் (அப். 14 : 23 ; தீத்து 1 : 5). ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் மூப்பர்கள் பன்மைப் பொருளில் குறிப்பிடப்பட்டு, எந்தச் சபையில் அவர்கள் ஏற்படுத்தப் பட்டார்களோ அந்தந்த சபையில் தங்கள் மூப்பர் பணியைச் செய்து வந்தனர். சபையில் மூப்பர்களை ஏற்படுத்துவது போகிற போக்கில் நடைபெறுகிற ஒன்றாக இல்லாமல், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தகுதியாம்சங்களைப் பெற்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சபையானது உறுதி செய்த பிறகே சம்பந்தப்பட்ட வர்கள் மூப்பர்களாக ஏற்படுத்தப்பட்டனர் (I தீமோ. 3 : 1 – 7 ; தீத்து. 1 : 5 – 11). கிறிஸ்துதான் சபைக்குத் தலையாக இருக்கிறார். மூப்பர் களுக்கான தகுதிகள் பரிசுத்த எழுத்துக்களில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அந்த மூப்பர்கள் சபைக்கான சட்ட திட்டங்களை உருவாக்க முடியாது. புதிய ஏற்பாட்டு உபதேச காரியங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்வது அவர்கள் வேலை. வேதாகமத்தில் சொல்லப்படாத காரியங் களில் மூப்பர்களும், சபையாரும் இணைந்து தீர்மானம் எடுக்க உரிமை பெற்றி ருக்கிறார்கள். வேத வசனங்கள் இவர்களைக் " கண்காணிகள் " (I தீமோ. 3 : 1; அப் - 20 : 28). " மூப்பர்கள் " (I தீமோ. 4 : 14) " மேய்ப்பர்கள் " (எபே. 4 : 13; I பேதுரு. 5 : 1 – 4) " என்று அழைக்கிறது.

**உதவிக்காரர்கள் ; சிறப்பு வேலையாட்கள்**

கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் சபை அங்கத்தினர் களில் மற்றும் அங்கத்தினரல்லாதவர்களின் தேவைகளுக்கு ஊழியம் செய்வது அவசியம் என்றாலும், உதவிக்காரர்கள் ஒரு சபையின் சிறப்பு வேலைக்காரர்க ளாக உள்ளார்கள். மூப்பர்களைப் போலல்லாமல், அவர்களுடைய பொறுப்புக ளின் அளவு குறிப்பிட்ட தன்மை கொண்டதாகவும், சேவையை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கும். உதாரணத்திற்கு, உதவிக்காரர்கள் எல்லோரும் ஒரே வேலையைச் செய்யாமல் தானதர்மம், காணிக்கை, சபை வளாகத்தின் தேவைகள், ஊழியம், வேதாகமப்பள்ளி மற்றும் சபையின் தேவையினடிப்படை யில் அவைகளைச் செய்கிறவர்களாக இருப்பர். இவர்களும் தகுதியினடிப்படை யிலேயே இப்பணிக்குத் தெரிந்தெடுக்கப்படுவர் (அப். 6 : 1 – 6; I தீமோ. 3 : 8 – 13).

## பிரசங்கிகளும், போதகர்களும்

நற்செய்திப் பிரசங்கிகள் ( ரோமர் 10 : 14 – 15 ), " சுவிசேஷகர்கள் " ( எபே. 4 : 13 ; II தீமோ 4 : 5), " ஊழியர்கள் " (I கொரி. 3 : 5) என்றும் அழைக்கப்பட்டு, " சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு புத்திசொல்லு " (II தீமோ. 4 : 2) என்று கட்டளையிடப் பட்டுள்ளனர். பிரசங்கிப்பது ஒரு முக்கியமான வேலை. ஆம், பிரசங்கிப்பவர் தன் ஆத்துமாவைத் தொடுவதோடு, கேட்பவர்களின் ஆத்துமாக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார். ஆகவே தான், வேதாகமம் பிரசங்கிப்பவர்களையும், போதிப் பவர்களையும் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிப்பதோடு ( யாக். 3 : 1) கள்ள உபதேசம் செய்து கபடமில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிற வர்களை விட்டு விலக வேண்டுமென்றும் கூறுகிறது " (ரோமர் 16 : 17, 18).

குழந்தைப் பருவத்தில் இருந்த முதல் நூற்றாண்டு சபை அற்புதமான முறையில் ஏவப்பட்டுப் போதிப்பவர்களைக் கொண்டிருந்தது (எபே 4 : 11 – 13). மேலும், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச் சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொ ருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீர மாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை மேய்ப்ப வராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

அப்போஸ்தலர்கள் இப்பொழுது பூமியில் இல்லை. ( இந்நாட்களில் சிலர் தங்களை அப்படி அழைத்துக் கொண்டாலும் வேதாகமத்தின் அடிப்படையில் அப்படிப்பட்டவர்கள் இல்லை). தற்காலிகமான அளவில் கொடுக்கப்பட்ட அற்பு தங்கள் குறைந்த அறிவுள்ளவைகள் வெளிப்படுத்தப்பட்ட வேதவசனங்களைக் கொண்டு எடுத்துப்போடப்பட்டது (I கொரி. 13 : 8 – 13; யாக். 1 : 25). அத்தோடு ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளும் இந்நாட்களில் இல்லை. இருப்பினும், மூப்பர்கள், பிரசங்கிகள், போதகர்கள் போன்ற வேதாகமத்தால் அழைக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் . அவர்கள் " பரிசுத்தவான்கள் சீர்பொருந்துவதற்கும் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி யடைவதற்காகவும் கட்டளை பெற்றிருக்கிறார்கள்.


## முடிவுரை

இன்றைக்கு உலகத்தில் காணப்படும் சபைகளுக்கும், வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள சபைக்கும் ஆளுகை அமைப்பில் உள்ள வேறுபாடு மிகவும்

கவனிக்கத்தக்க ஒன்றாக உள்ளது. இந்த முக்கிய வேறுபாட்டை கொஞ்சம் ஆத்துமாக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். தேவனால் கொடுக் கப்பட்ட பெயர் ( அதிகாரம் 1), தேவனால் கொடுக்கப்பட்ட ஆளுகை அமைப்பு (அதிகாரம் 2) போன்றவை இரத்தத்தால் வாங்கப்பட்ட (அப். 20 : 28) கிறிஸ்து வின் சபைக்கு முக்கிய வேறுபாடாக உள்ளன. இன்னும் தேவனுக்கான தொழு கை (அதிகாரம் 4) மற்றும் " தேவனால் கொடுக்கப்பட்ட உபதேசம் (அதிகாரம் 5), இயேசுவால் கட்டப்பட்ட சபைக்கு மேலும் அழுத்தமான அடையாளங்களாக உள்ளன. இன்றைக்கு உலகெங்கிலுள்ள கிறிஸ்துவின் சபைகள், ஆதித் திருச்சபையின் மணம் மாறாமல், இன்றைய நூற்றாண்டில் முதல் நூற்றாண்டு சபையின் மாதிரியை அப்படியே நடைமுறைப்படுத்துகிறது.

## புதிய ஏற்பாட்டு தொழுகை

**கூட்டலும், குறைத்தலும் அற்ற ஐந்து பங்குகள் கொண்ட தொழுகை**



அதிகாரம் - 4

# புதிய ஏற்பாட்டு சபை தொழுகையில் தேவ திட்டத்தின்படியானது

தேவனைத் தொழுதுகொள்வதற்கு, புதிய ஏற்பாடு தேவனுடைய மாதிரியைக் கொண்டுள்ளது. யூதாயிசத்தின் ஆரம்பத்தின்போது, தேவன் தன்னுடைய மக்களுக்கு ஆசரிப்பு க்கூடாரம் கட்டுவது, அதன் பணிமுட்டுகள் மற்றும் இதர பொருட்கள், இன்னும் அவர்களுடைய தொழுகை போன்றவைகளுக்கு மாதிரி தந்தார் (யாத். 25 : 9 ; எசே. 43 : 10 ; எபி. 8 : 5 ; 9 : 23). பழைய ஏற்பாட்டில் தேவனை ஆராதிப்பதற்குக் கொடுக்கப்பட்ட வழிமுறைகளை விட, புதிய ஏற்பாட்டில் ஒன்றும் குறைவாகக் கொடுக்கப்படவில்லை. யோவான் 4 : 24. **தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவி யோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்** என்று சொல்லுகிறது. தேவனை ஆவியோடு தொழுதுகொள்ளுவது என்பது சரியான மனநிலையோடு தேவனை ஆராதிப்பதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் தேவனை உண்மையோடு தொழுதுகொள்வதென்பது இப்போது நடைமுறையிலிருக்கிற ஆராதனைக்கான **தெய்வீகப் பிரமாணத்தின் மாதிரியைப் பின்பற்றி** தேவனை ஆராதிப்பதைக் குறிக்கிறது. இன்று புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிற்குப் மாற்றாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், இன்று எல்லோரும் ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படிய வேண்டிய சட்டமாக புதிய ஏற்பாடு உள்ளது (எபி.8 : 6 – 13 ; எபே. 2:15).

பழைய ஏற்பாட்டு ஆராதனை முறைமைக்கும், புதிய ஏற்பாட்டு ஆராதனை முறைமைக்குமிடையே ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் உள்ளன. உதாரணமாக, புதிய ஏற்பாட்டு ஆராதனையில் மிருக பலிகள், குத்துவிளக்கு, தூபகலசம் போன்றவைகளை அங்கீகரிப்பதில்லை. தேவன் இந்த சுவிசேஷக் காலத்தில் வாழும் மக்கள் தம்மை எப்படியாக ஆராதிக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள ஒருவர் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்ப வேண்டும். புதிய ஏற்பாட்டில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆராதனையில் ஐந்து பங்குகள் மூலமாக இன்று தேவன் ஆராதிக்கப்பட விரும்புகிறார். வாரத்தின் முதல் நாளில் ஏறெடுக்கப்படும் கிறிஸ்தவ ஆராதனையில் இந்த

ஐந்து பங்குகளும் இடம் பெற வேண்டும் (அப். 20 : 7 ; I கொரி. 16 : 1 - 2).

**இசை**

கிறிஸ்துவின் சபை ஆராதனையில் பயன்படுத்தும் இசைக்கும் மற்ற சபைகள் ஆராதனையில் பயன்படுத்தும் இசைக்குமிடையே வெளிப்படையாகத் தெரிகிற வித்தியாசம் என்னவென்றால், இசைக்கருவிகளைக் கொண்டு இசைக்கும் இசைதான். இதில் புதிய ஏற்பாடு எதை அங்கீகரிக்கிறதோ அதை மிகத்துல்லியமாக நடைமுறைப்படுத்த கிறிஸ்துவின் சபைகள் எடுத்துக்கொண்ட நேர்மறையான முயற்சியின் விளைவுதான் இது. இசை இரண்டு வகைப்படும், ஒன்று வாய் வழியான குரல் இசை. மற்றொன்று கருவிகளால் வரும் இசை. புதிய ஏற்பாடு வாய் வழியான இசை அல்லது வெறும் பாடலைத்தான் கட்டளையிடுகிறது (எபே .5 : 19, கொலோ. 3 : 16). புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தப்பட்ட இசையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படவில்லை என்பதற்கு நமக்கு ஆதாரங்கள் உள்ளன. (மத். 26 : 30), (அப்போது சபை ஸ்தாபிக்கப்படவில்லை); அப். 16 : 25 ; ரோமர். 15 : 9 ; I கொரி. 14 : 15 ; எபி. 2 : 12 ; யாக். 5 : 13).

மேலும், வெளிப்படுத்தப்படும் வித்தியாசமான சப்தங்களில், பாடல்களால் மாத்திரமே போதிக்கவும், புத்தி சொல்லவும் முடியும் (கொலோ. 3 : 16). முணுமுணுத்தல், சத்தமிடுதல் மற்றும் வாயினால் ஏற்படுத்தப்படும் வேறு சப்தங்களால் போதிக்கவும் புத்திசொல்லவும் முடியாதபடியால் அவைகள் வசனத்திற்கு எதிரானவைகள். ஆகவே, அவைகளை ஆராதனை வேளையில் பயன்படுத்துவது பாவமாகும்.

தேவன் பழைய ஏற்பாட்டில் அனுமதித்தவைகள் அல்லது தேவன் பரலோகத்தில் அனுமதிக்கக்கூடிய காரியங்கள் புதிய ஏற்பாட்டை கடைப் பிடிக்கும் மக்களுக்குப் பொருந்தாது. இப்போது நடைமுறையிலிருக்கும் தேவசட்டம் புதிய ஏற்பாடுதான். மனிதன் பழைய பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறான் ( ரோமர் 7 : 6-7; கொலோ 2:14 ). இருந்தபோதிலும், மனிதன் இப்பூமியில் வாழும் போது பரலோகச் சட்டங்கள் அவனுக்குப் பொருந்தாது.

உதாரணத்திற்கு, பல்வேறு நாடுகளில் சாலை விதிகளைக் கவனிக்கலாம். சில நாடுகளில் சிக்னலில் சிவப்பு விளக்கு எரியும் போது கூட முழுமையாக நின்று வலது பக்கமாக வண்டியை ஓட்டிச் செல்லலாம். இப்போது அந்த ஓட்டுனர் எந்த அதிகாரத்தின்படி சிவப்பு விளக்கு எரியும்போது வலதுபக்கமாக ஓட்டிச் சென்றார்? இது பெரும்பாலான ஓட்டுனர்களுக்கு பொதுவான ஓர் அனுபவந் தான். வெளிப்படையாகவே, ஒவ்வொரு ஓட்டுனரும், அந்தந்த தேசங்களில் சாலை விதிகளுக்கு கட்டுப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், இன்று வாழும் மக்கள்

புதிய ஏற்பாட்டு போதனை முற்பிதாக்களின் காலத்திலோ அல்லது யூத மார்க்கத்திலோ ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள். மேலும், பரலோகத்தில் சட்டதிட்டங்கள் வித்தியாசமாக இருந்தாலும்கூட இன்று இப் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லோரும் புதிய ஏற்பாட்டு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

ஆராதனையில் பாடல் பாடுவது என்னும் கட்டளை (கொலோ 3 : 16 ; எபே. 5 : 19 ) பாடலோடு இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதை நீக்கிப் போடுகிறது. தேவன், தாம் எவ்வகையான இசையை விரும்புகிறார் என்று குறிப்பிட்டுச் சொல்லாதிருந்தால் மனிதன் தன் விருப்பப்படி செய்யலாம். ஆனால், தேவன் தம்முடைய விருப்பத்தை, தெரிந்துகொள்ளுதலை எற்கனவே தெரிவித்து விட்டார். அதுபோலவே, கர்த்தருடைய பந்தியில் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் தேவன் தெரிந்துகொண்டிருக்கிறபடியால் வேறெந்தப் பொருளையும் பயன்படுத்தக்கூடாது.

சிலர் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் பாடல் பாடுவதை விட இசைக் கருவிகளைப் பயன்படுத்திப் பாடுவது உற்சாகமாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மனித இனம் தனக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் எவ்வித சந்தேகமுமின்றி கிறிஸ்தவ ஆராதனையையும், கிறிஸ்தவத்தையும் மாற்ற முயலுகிறது. மார்க்கப்பிரிவினைக் கூட்டங்களில் இம்முயற்சி மிகத்துல்லியமாக காலங்காலமாக எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், நம் ஆராதனையின் மையமாகிய தேவனை அவர் விரும்பும் வகையில் ஆராதிப்பதுதான் ஏற்றதாயிருக்கிறது. ஆராதனை என்பது ஒருபோதும் ஆராதிப்பவரின் பொழுது போக்கிற்காக உத்தேசிக்கப்படவில்லை. வேதாகம ஆராதனையானது தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. ஆகவே, ஆராதனையில் இசையைப் பொறுத்தவரை தேவன் தெளிவாக நமக்கு என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதற்கப் பதிலாக நம் தனிப்பட்ட விருப்பங்களை நாம் புகுத்தவே கூடாது.

**கர்த்தருடைய பந்தி**

இயேசு கிறிஸ்து பஸ்கா போஜனத்துக்கு பிறகு பந்தியை ஏற்படுத்தினார். (மத். 26 : 17 – 30). கர்த்தர் பந்தியை ஏற்படுத்தினபோது இது என்னுடைய சரீரமாயிருக்கிறது. இது உன்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று சொன்னபடியால் அவரை நினைவுகூரும்படியாக நாம் தொடர்ந்து அதைச் செய்ய வேண்டும். (லூக்கா. 22 : 19). அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தருடைய பந்தியை ஐக்கிய பந்தி என்று சொல்லுகிறார் (I கொரி.10:16). கொரிந்து சபையில் கர்த்தருடைய பந்தியை அவர்கள் தவறாகப் பயன்படுத்தியபோது அவர்களைப் பவுல்

கண்டித்து கர்த்தருடைய பந்தியை லேசாக எடுத்துக்கொள்ளக்கூடாது. பந்தியை அனுசரிக்கும்போது கர்த்தருடைய மரணத்தைத் தெரியப்படுத்துங்கள் என்று சொன்னார். அப்.20:7 ல் அப்போஸ்தலருடைய அங்கீகாரத்தினால் எத்தனை நாளுக்கு ஒருமுறை ஆதித் திருச்சபை கர்த்தருடைய பந்தியை அனுசரித்தது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. வாரத்தின் கடைசி நாளில் யூதர்கள் ஓய்வு நாளை அனுசரித்ததை விட சிறப்பாக ஆதி திருச்சபை வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியை தவறாமல் அனுசரித்து வந்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை (யஸத். 20 : 8 - 11). ஆதி திருச்சபை வாரத்தின் முதல் நாளில் காணிக்கை சேகரிப்பதைப் போலவே வாரத்தின் முதல்நாளில் கர்த்தருடைய பந்தியை அனுசரித்து வந்திருக்கிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை (I கொரி.16:1,2).

**கொடுத்தல்**

பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவன் யூதமார்க்க வளர்ச்சிக்காக காணிக்கை கொடுக்கும்படி ஜனங்களுக்கு கட்டளையிட்டார். இன்று புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் ஜனங்களுக்கு கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்காக ஜனங்கள் கொடுக்கவேண்டுமென்கிற கட்டளையில் ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. யூத மார்க்கத்தில் உற்சாக பலிகள் வரவேற்கப்பட்டன (உபா. 12 : 6 ; யாத். 25 : 2, 35 : 29 ). அதே நேரத்தில் ஜனங்கள் தங்கள் விளைச்சலில் தசமபாகம் அல்லது பத்தில் ஒரு பங்கை தேவனுக்கு கொடுக்கவேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருந்தார்கள் ( லேவி. 27 : 30 - 34). புதிய ஏற்பாட்டில் தேவன் பழைய ஏற்பாட்டு தசமபாகத்தைத் தொடரும்படி ஜனங்களுக்கு கட்டளையிடவில்லை. மாறாக, புதிய ஏற்பாட்டு கொடுத்தல் : 1. மன விருப்பத்தோடு கொடுக்கக்கூடிய உற்சாகக் காணிக்கையாகவும் (II கொரி. 8 : 12 ). 2. விசனமாயும், கட்டாயமாயும் அல்ல உற்சாகமாகக் கொடுக்கும் காணிக்கையாகவும் (II கொரி. 9 : 7). 3. அவனவன் தன்தன் வரவுக்குத்தக் கதாகக் கொடுக்கும் காணிக்கையாகவும் கட்டளையிடப்பட்டிருக்கிறது (I கொரி. 16 : 1, 2). I கொரி. 16 : 1, 2 ம் வசனங்களில், காணிக்கை சேகரிக்கும் நாள் வாரத்தின் முதல் நாள் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வாரத்தின் மற்ற நாட்களில் தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்கென்று கொடுத்தாலும் கூட அதாவது, எப்படி ஜெபம், பாடல் மற்றும் பிரசங்கம் போன்றவைகள் மற்ற நாட்களில் இருந்ததோ அதேபோல இருந்தாலும்கூட, கொடுத்தல் என்பது புதிய ஏற்பாட்டு ஆராதனையின் பங்கில் ஒன்றாகவும் இருக்கிறது. இது வாரத்தின் முதல் நாளில் செய்யும் ஒரு செயலாகவும் இருக்கிறது.

**ஜெபம்**

ஜெபம் என்பது எப்போதுமே தேவனை ஆராதிக்கும்போது செய்யும் ஒரு

அடிப்படை காரியமாக இருந்து வருகிறது. புதிய ஏற்பாட்டிலும் காரியங்கள் அப்படியாகத்தான் இருந்து வருகிறது. ஆதித் திருச்சபை எப்படி ஒழுங்கும் கிரம முமாக ஜெபங்களை ஏறெடுத்தது என்பதற்கு ஆதரவாகப் பல வேத வசனப் பகுதிகள் உள்ளன. மேலும், நாம் ஜெபிக்கும்படியாக புத்திமதிகள் பல நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன (அப். 2 : 42; I தீமோ. 2 : 1 - 3; I பேதுரு 3 : 12) நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே, அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்தி ருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோ மென்றும் அறிந்திருக்கிறோம். (I யோவான் 5 : 14, 15).

தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதான ஜெபத்தில் முக்கியமான காரியம் **அவருடைய சித்தத்தின்படி** என்பதாகும். எல்லா ஜெபங்களுக்கும் பதில் தேவனுடைய சித்தத்தின்படி தான் தரப்படுகின்றன. நம்முடைய விண்ணப் பங்கள் தேவனுடைய சித்தத்தோடு ஒத்திருக்கும்போது, நம் ஜெபங்களுக்கு அவர் " ஆம் " என்று பதிலளிக்கிறார். இல்லையென்றால், நம் ஜெபங்களுக்குப் பதில் " இல்லை " என்று வரலாம் அல்லது சூழ்நிலைகளைப் பொறுத்து " பின்னர் " என்று வரலாம். பொதுவாக, நாம் நம் விண்ணப்பங்களுக்கு நாம் விரும்பிய அளவிற்கேற்ப, நாம் விரும்பிய காலத்தின்படி பதில் கிடைக்கவில்லையென் றால், தேவன் நம்முடைய விண்ணப்பங்களுக்குப் பதில் அளிக்கவில்லை யென்று நாம் முறையிடுகிறோம். தேவன் எல்லா ஜெபங்களுக்கும் பதில் தருகிறார். சில வேளைகளில் அவருடைய பதிலை நாம் விரும்புவதில்லை.

**பிரசங்கமும், போதனையும்**

பிரசங்கமும் போதனையும் எப்படி யூதமார்க்கம் ஸ்திரப்படுத்தப்படுவ தற்கும், பராமரிக்கப்படுவதற்கும் அவசியமாக இருந்ததோ அதேபோல் கிறிஸ்தவம் ஸ்திரப்படுத்தப்படுவதற்கும், பராமரிக்கப்படுவதற்கும் பிரசங்கமும் போதனையும் அவசியமாயிருக்கிறது. யூதமார்க்கம் என்பது யூதர்களின் மத மல்ல, அது அவர்களுடைய வாழ்க்கை முறையாக இருந்தது. அதாவது, அவர் கள் வீட்டிலும், பொது இடங்களிலும் தேவனை ஆராதிப்பதற்கான வாழ்க்கை முறையாக இருந்தது. யூதர்களுக்கு தேவனுடைய வார்த்தை சிறு வயதிலிருந்து முதிர்வயது வரை போதிக்கப்பட்டது. (நெகே. 8:1-8).


" அதற்குப் பின்பு அவர் நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும் சாபமுமாகிய சகல வார்த்தை களையும் வாசித்தான். மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா, இஸ்ர

வேலின் முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும், பிள்ளைகளுக்கும், அவர்களுக்குள் நடமாடி சஞ்சரித்த அந்நியர்களுக்கும் முன்பாக, ஒரு வார்த்தையும் விடாமல் வாசித்தான்.

தேவனுடைய பிள்ளைகளை பக்திவிருத்தியடையச் செய்வது கர்த்தருடைய சபையின் பிரதானமான தேவைகளுள் ஒன்றாக இருக்கிறது (I கொரி. 14 : 12 ; எபே. 4 : 11, 12). சுவிசேஷ ஊழியம் சபையின் பணிகளுள் ஒன்றாக இருக்கிறது ( மத். 28 : 18 – 20; II தீமோ. 2 : 2) இந்த இரண்டு பரிசுத்தமான பணிகளுக்கும் பிரசங்கமும், போதனையும் அவசியமாயிருக்கிறது. பிரசங்கம் பண்ணுவதையும், உபதேசம் பண்ணுவதையும் தனியாக வீடுகள் தோறும் செய்ய முடியும் அல்லது பொதுவான ஆராதனையிலும் செய்ய முடியும் (அப். 20 : 20). அப். 20 : 7 - ல் ஆதித் திருச்சபை எப்போதெல்லாம் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கும்படி கூடினார்கள் என்று மட்டும் குறிப்பிடாமல், பிரசங்கம் கர்த்தருடைய நாளின் ஆராதனையில் ஒரு பங்காகவும் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. " வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் ".

## முடிவுரை

பெரும்பாலும் சமகால சபைகள் தங்கள் ஆராதனை முறைமைகளை யூதமார்க்கத்தின் கீழிருந்த சில குழப்பமான நடைமுறைகளிலிருந்தும், புதிய ஏற்பாட்டு ஆராதனையிலிருந்த சில செயல்பாடுகளையும், தங்கள் தனிப்பட்ட முக்கியத்துவத்தை உட்புகுத்திப் பின்பற்றுகிறார்கள். எல்லா ஜீவ ஆத்துமாக்களும், புதிய ஏற்பாட்டுக்கு கட்டுப்பாட்டு இருக்கிறார்கள். மேலும், புதிய ஏற்பாட்டின் மூலமாகத்தான் எல்லா ஆத்துமாக்களும் ஒரு நாளில் நியாயந் தீர்க்கப்படுவார்கள் ( யோவான் 12 : 48 ). ஆகவே, ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் ( யோவான் 4:24 ). கிறிஸ்துவின் சபையின் ஆராதனை முறைகள் வித்தியாசமாக இருக்க வேண்டுமென்பதற்காக தோற்றுவிக்கப்படவில்லை. தேவன் புதிய ஏற்பாட்டு மூலமாக எதை அங்கீகரிக்கிறாரோ அதற்கான அடையாளமாக இருக்கிறது.


வேறொன்றோடும் சேராதது
மீட்பிற்கானது
ஏவப்பட்டது
நோக்கமுடையது
மாறாதது
ஒரு
கொள்கை
நற்செய்தி மட்டும்
நற்செய்திப் பணிக்கானது
அதிகாரமிக்கது
முழுமையானது
ஊக்கப்படுத்தக்கூடியது
தர்மசகாயம் பற்றியது
ஒரு புதிய உடன்படிக்கை

# புதிய ஏற்பாட்டு சபை உபதேசத்தில் தேவ திட்டத்தின்படியானது

முதல் ஏற்பாட்டு சபையானது ஒரு கட்டத்தில் மனித கோட்பாடுகளுக்குச் சாய்ந்து போகும் நிலை வரும் என்று போதிக்கப்பட்டது. யூத மதத்தின் கீழாக தேவனுடைய உபதேசங்களுக்குப் பதிலாக மனிதருடைய கற்பனைகள் புகுத்தப் பட்டது என்று இயேசு அறிவித்தார் (மத்.15 : 9). " மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் " என்று. மனிதர்களுடைய இரட்சிப்புக்கு நற்செய்தி மட்டுமே வழிநடத்துகிறதென்று பவுலடியார் மனப்பூர்வமாகப் போதித்தார் ( ரோமர் 1 : 16 ; கலா. 1 : 6 - 12 ). நற்செய்தியானது ( புதிய ஏற்பாடு ) கீழ்க்கண்டவைகளைக் கொண்டுள்ளது. 1). போதனை (உபதேசம் அல்லது போதிப்பது ). 2 ). மனிதனுடைய இரட்சிப்புக்காக தேவனாலே வெளிப்படுத்தப்பட்ட திட்டம் 3 ). சபையின் சிறப்பான செயல்பாட்டுக்காக தேவனால் கொடுக்கப்பட்டவழிகாட்டு நெறிகள்.

**புதிய ஏற்பாடு: சபைக்கான ஒரு கொள்கைப் புத்தகம்**

மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கைகள், உலகெங்கிலும் காணப்படும் மார்க்கப் பிரிவினையாளர்களின் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. மனித கொள்கை, கோட்பாடுகள் காலத்திற்கேற்ப மாறக்கூடியவை. ஆனால், புதிய ஏற்பாட்டுக் கொள்கைகள் மாறாதவை. மனித கண்ணோட்டத்தில் பார்த்தால்கூட, இயேசுவானவர் ஜெபித்த ( யோவான் 17 : 20, 21) ஒற்றுமைக் காக, புதிய ஏற்பாட்டு உபதேசங்களைக் கொள்கையாக ஏற்றுக்கொள்வதுதான் ஒரே வழி. மாற்று யோசனைகளும், முயற்சிகளும் எவ்விதத்திலும் பயன ளிக்காது.

இறுதிநாளில் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, அவரவர் வாழ்ந்த காலகட்டத்தில் தேவனால் என்ன உபதேசம் கொடுக்கப்பட்டதோ அதனடிப் படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள் ( வெளி. 20 : 12 - 15 ). மனிதர்களால் போதிக்கப்பட்ட குறைவான நீதியின்படி யாரும் நீதிமானாக முடியாது (ரோமர் 10 : 1 - 3 ; மத். 7 : 21 - 23). அதுபோலவே, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்கிறவர்கள், நம்மைக் கட்டுப்படுத்தாத பழைய பிரமாணத்தின் கொள்கைகளைக் கொண்டு

நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள் (கொலோ. 2 : 14 ; எபே. 2 : 15 ; ரோமர் 7 : 6, 7 ; எபி. 8 : 6 -13 ). பழைய ஏற்பாட்டின் கீழாக வாழ முயற்சிக்கிறவர்கள் தேவனுடைய இரட்சிக்கும் கிருபைக்கு அப்பாற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள் ( கலா. 5 : 1 - 5). மார்க்க காரியத்தில், புதிய ஏற்பாடு மட்டுமே முழுமையானதும், எல்லா அதிகாரமும் கொண்ட ஒன்றாக மனிதனுக்கு உள்ளது. இது ஒருவர் சக மனிதனோடு எப்படி வாழ்வது, எப்படி தேவனைத் தொழுது கொள்வது, எப்படி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வது, எப்படிப் பரலோகம் போவது என்பனபற்றிப் போதிக்கிறது.

**மீட்பு**

மீட்பு என்பது கர்த்தருடைய சபையில் பிரிக்க முடியாத அளவில் அங்கத்தினர்களோடு கட்டப்பட்டதாயிருக்கிறது. மீட்கப்பட்வர்களை அல்லது இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்க்கிறார் ( அப். 2 : 47 ) இருப்பினும், குழம்பிப் போயிருக்கிற கிறிஸ்தவ சமுதாயமானது, மீட்புக்கான உபதேசத்தை வித்தியாசமான கொள்கைகளோடும், சபைகளோடும் தொடர்பு படுத்தி, ஆத்துமாக்களை மத வணிக வளாகங்களின் மலிவுப் பொருளாக்கி விட்டது. ஆயினும், சத்தியத்தை நாடுவோர் மிகச் சிரமத்துடன் பிரயாசப்பட்டு மனித உபதேசங்களை அடையாளம் கண்டு, கர்த்தராலே சேர்க்கப்படக்கூடிய சபை மற்றும் தேவனுடைய மீட்பின் திட்டம் போன்றவைகளை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நேர்மையான மனதுடையவர்களின் உள்ளங்களில் விதைக்கப்படும் “ விதையானது ” பிரிவினையற்ற கிறிஸ்தவர்களையும் கர்த்தருடைய ஒன்றான மெய் சபையையும், தேவனுடைய வார்த்தைகளையும் மட்டும் விளையச் செய்யும் (லூக்கா. 8 : 11).

நற்செய்தி அல்லது புதிய எற்பாடானது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பல வேத பகுதிகளில் பேசுகிறது. கிறிஸ்தவ உலகத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் இரட்சிப்புக்கு முன் நிறைவேற்றப்பட வேண்டியவைகள் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று ஒத்துக் கொள்கிறார்கள். ஆயினும், இரட்சிப்பின் திட்டம் சம்பந்தமாக வேதாகமம் சொல்லுபவைகளிலிருந்து தங்களுக்கு வேண்டியவைகளை ஏற்றுக்கொள்வதும், வேண்டாதவைகளைத் தள்ளிவிடுவதுமான நிலை காணப்படுகிறது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்துக்கு : 1. தேவனுடைய வார்த்தைகளை மடடும் கேள்விப்பட வேண்டும் (ரோமர் 10 : 17) 2. கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் (யோவான் 8 : 24; யாக். 2 : 20, 24, 26) 3. கடந்தகாலப் பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் (அப். 17 : 30 - 31) 4. கர்த்தரை கிறிஸ்து என்று அறிக்கையிடுதல் (ரோமர் 10 : 9, 10). பாவங்கள் கழுவப்படும்படியாகத் தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் (ரோமர். 6 : 3 - 5; அப். 22 : 16) மற்றும்

மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் (வெளி. 2 : 10) போன்றவை அவசியம். இதன்பிறகு, தவறு செய்கின்ற தேவனுடைய பிள்ளை தன் தவறுக்காக மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும் (அப். 8 : 22 ; I யோவான் 1:9).

**ஊழியம், தர்மசகாயம் மற்றும் பக்திவிருத்தியடைதல்**

வேத வசனங்கள், ஒரு சபையானது ஊழியம், தர்மசகாயம், பக்திவிருத்தி யடையச் செய்தல் போன்றவைகளில் முனைப்புடன் ஈடுபடவேண்டுமென்று அறிவுறுத்துகிறது. இம் மூன்றின் கீழ் வராத ஒரு காரியம் சபையின் பொறுப்பாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வேறு ஏதாவது ஒரு செயல்பாடு வேத வசனங்களின் அங்கீகாரம் பெற்றதாக இருந்தாலும், சபையின் செயல் பாடுகளுக்கு நேரிடையான சம்பந்தம் இல்லாததாக இருக்கக்கூடும். உதார ணத்திற்கு, அப்படிப்பட்ட செயல்பாடு ஒரு குடும்பப் பொறுப்போடு தொடர்பு டையதாக இருக்கலாம். குடும்பம் என்பது தேவனுடைய இன்னொரு ஸ்தாபனம், ஆயினும், சபை மற்றும் குடும்பம் இவைகளின் செயல்பாடு ஒன்றோடொன்று சம்பந்தமுடையதாக இருந்தாலும் ஒன்றல்ல.

பிரதான கட்டளையானது (மத். 28 :18-20; II தீமோ.2:2) அடிப்படையில், உள்ளூர் அளவில் உண்டான சபை சம்பந்தமுடையதாக உள்ளது. இது நற்செய்தி ஊழியத்தை உள்ளூர் சபையின் ஒரு பிரதான வேலையாக்குகிறது. இருப்பினும் சபையானது தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுமளவிற்கு வளர்ந்து, பக்திவிருத்தியடைந்து பக்குவப்பட வேண்டும் (கொரி. 14 : 12; எபி. 5 : 12 - 6 : 2) கர்த்தருடைய சபை சக மனிதர்களிடத்தில் உட்சபட்ச அன்பை வெளிப்படுத்தி அதைச் செயல்படுத்த வேண்டும் (மத். 22 : 37 - 40 ; யாக்.1 : 27 ; கலா. 6 : 10). இது தேவன் மனிதர்கள் மீது காட்டின அன்பைக் காட்டுவதற்காக ஒரு சீரிய வழியாக இருக்கும். தர்ம சகாயத்தைக் கடைபிடிப்பது சபையின் மீது சமுதாயத்தின் நல்லெண்ணத்தைப் பெறுவதாக அமைந்து, நற்செய்தி ஊழியம் செய்வதற்குச் சிறந்த அடித்தளத்தையும், தொடர்பையும் ஏற்படுத்தித் தரும்.

இயேசு தாம் பரமேறுவதற்கு முன், தம்முடைய அப்போஸ்தலர்கள் செய்யும் படியான ஒரே ஒரு வேலையைக் கொடுத்தார் (மாற்கு 16 : 15,16) அது உலகத் திற்கு நற்செய்தியை எடுத்துச்செல்ல வேண்டுமென்பது. கிறிஸ்தவர்களும், சபையும் புதிய ஏற்பாட்டு தேவ அறிவுரைகள் சம்பந்தமாக பல பொறுப்புகளை உடையவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெங்கிலும் எடுத்துச் செல்வது ஒவ்வொரு கிறிஸ்தவரின் பிரதான கடமையாக உள்ளது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், ஆராதனை, கிறிஸ்தவ வாழ்க்கை, கிறிஸ்துவின் உபதேசம் போன்றவற்றில் உண்மையுள்ளவர்களாக இருப்பது

அவசியம். ஒருவேளை, இவைகளெல்லாவற்றையும் செய்துவிட்டு, கிறிஸ்து அவருடைய சீடர்கள் செய்யவேண்டுமென்று சொல்லியுள்ள ஒரு கட்டளையைச் செய்யாவிட்டால், அதாவது, சபையின் வேலையாகச் சொல்லப்பட்டிருப்பதைச் செய்யாவிட்டால், மொத்தத்தில் அவன் தோல்வியுற்றவனாக இருப்பான்.


**முடிவுரை**

கிறிஸ்துவின் சபையானது, உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான உள்ளூர் சபைகளைக் கொண்டதாகவும், பல லட்சம் அங்கத்தினர்களைக் கொண்டதாகவும் உள்ளது. ஒவ்வொரு உள்ளூர் சபையும் சுய ஆளுகை உடையதாக இருப்பதால் எண்ணிக்கையைக் கூறமுடியாவிட்டாலும், கிறிஸ்துவின் சபை சகோதர, சகோதரிகள் புதிய ஏற்பாடு தவிர வேறு உபதேசங்கள் இல்லை என்பதை உறதிபடச் செயல்படுத்துகிறவர்களாக உள்ளனர்.

புதிய ஏற்பாட்டு காரியங்களை மட்டும் பின்பற்றுவது, கர்த்தருடைய சபை உபதேசக் காரியங்களிலிருந்து விழுந்துபோவதைத் தடுத்துப் பாதுகாக்கிறது. ஒரு சில தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் அல்லது ஆங்காங்கே ஒரு சில உள்ளூர் சபைகளும் புதிய ஏற்பாட்டு உபதேசத்திலிருந்து வழுவிப் பின்வாங்கிப்போவது, உலகெங்கிலுமுள்ள ஏனையக் கிறிஸ்துவின் சபைக்கான ஆபத்தாகப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, மனிதக் கோட்பாடுகளால் கட்டப்பட்டுள்ள பல பிரிவினைச் சபைகள் அந்தக் கோட்பாடுகள் என்ன சொல்லுகிறதோ, அவைகளைப் பின்பற்றிச் செல்லுவது தான் கிறிஸ்துவின் உபதேசக் கோட்பாடுகளுக்கு எதிரான சவாலாக உள்ளது. இன்றைய கிறிஸ்தவ உலகில் காணப்படும் அவலம் இதுதான். **மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள்** (நீதிமொழிகள் 14:12).

**கணித சமன்பாடு**

1 + 2 + 3 = 6        1 + 2 + 4 ≠ 6




**வேதாகம சமன்பாடு**

**கிறிஸ்தவன் + வேதாகமம் + கிறிஸ்தவன் = ஒற்றுமை**

**கிறிஸ்தவன் + வேறு எதாவது + கிறிஸ்தவன் ≠ ஒற்றுமை கலா 1 : 6 – 9**

**கிறிஸ்தவன் + வேதாகமம் + கிறிஸ்தவரல்லாதவன் (அ) உண்மையற்ற கிறிஸ்தவன் ≠ ஒற்றுமை (எபே. 5 : 11 ; II யோவான் 9 – 11**

# புதிய ஏற்பாட்டு சபை ஒற்றுமையில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது

உண்மையான ஒற்றுமை புதிய ஏற்பாட்டு சபையின் சிறப்பாக உள்ளது. ( யோவான் 17 : 20-23). இன்று மதம் சம்பந்தமான அல்லது மார்க்கம் சம்பந்தமான காரியங்களுக்கு இறுதியான, முழுமையான அளவுகோல் சுவி சேஷம் மட்டுமே என்று ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப் படுத்தும்போது மாத்திரமே தெய்வீக ஒற்றுமை ஏற்படும் (ரோமர் 1: 16 ; லூக்கா 6 : 46 ; யோவான் 6 : 68). வேதாகம ஒற்றுமை என்பது ஊழியத்தின் காரியங்களில் ஏதோ ஒன்றில் ஒருமித்துச் செயல்படுவதோ அல்லது நாங்கள் ஒன்றுபட்டிருக்கிறோம் என்று சொல்வதோ அல்ல. ஆமோஸ் தீர்க்கத்தரிசி இத்தகைய ஒற்றுமை பற்றிச் சொல்லும்போது மாயையான ஒற்றுமைகள் என்று சொல்கிறார். " இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களா? (ஆமோஸ் 3 : 3). பதிலை உள்ளடக்கிய இக்கேள்விக்கான பதில் எவ்வித சந்தேகமுமின்றி " இல்லை " என்பதாகும். புதிய ஏற்பாட்டு சபையின் அங்கமாக இருக்கும் ஒற்றுமை வெறுமனே இருவர் இணைவதைக் குறிக்காது.

## பொதுவான உபதேசம் அவசியமாயிருக்கிறது

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கட்டின சபையை வழிநடத்தும் ஒரே உபதேசம் புதிய ஏற்பாடாயிருக்கிறது (யோவான் 2 : 48 ; யூதா 3) . புதிய ஏற் பாட்டுக்குப் பதிலாக அல்லது அதற்குக் குறைவாக அல்லது அதற்குக் கூடுதலாக ஏதாவது இருந்தால் மார்க்க ஒற்றுமைக்கான அது ஆதாரமே அல்ல (வெளி. 22 : 18, 19 ; கலா. 1 : 6 – 9) . சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் (எபே . 4 : 3) என்னும் வசனத்திற்கும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி ( 4 : 11) என்னும் வசனத்திற்கும் இடையே புதைந்து கிடப்பதுதான் ஏழு ஒன்றுகள். அவைகள் மீதுதான் கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒற்றுமை நிலைத்திருக்கிறது.

' உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு .

அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு ; ஒரே கர்த்தரும் , ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் , எல்லாருக்கும் ஒரே தேவனும் , பிதாவும் உண்டு ; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லா ருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே . 4 : 4 – 6) .

வேதாகம ஒற்றுமையை அடைவதற்கான ஒரு வழி இவ்வசனப் பகுதியின் 14 – ம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது இனிக்குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமுமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர் களாயிராமல்!!.

**தேவன் என்ன சொல்கிறார், தேவன் சொல்லாததை அல்ல**

மார்க்க சம்பந்தமான நம்பிக்கைகளை உடையவர்கள் எல்லோரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகச் சிந்தித்தாலும் கூட வேதாகம அதிகாரத்தை முற்றிலும் மாறுபட்ட முறையில் அணுகும்போது அவர்களை வேறுபட்ட குழுக்களாகப் பிரித்து விடுகின்றன. வேதவாக்கியங்களை வியாக்கியானம் செய்யும் கண்ணோட்டத்தில் ஒவ்வொரு குழுவும் மாற்றத்தைக் கொண்டுவராத பட்சத்தில் ஒற்றுமை என்பது சாத்தியமில்லாத ஒன்றாகவே இருக்கும் (I ராஜா. 18 : 21; யோதவா 4 : 20) எல்லா மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களும் சேர்ந்து எங்க ளிடையே காணப்படும் மார்க்கப் பேதங்கள் ஒரு பொருட்டே அல்ல என்று பாசாங்கு செய்து ஒருமித்த கருத்துக்கு வந்தாலும் உண்மையான ஒற்றுமைக்கு வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் அல்லது ஆதரவாகப் பேச மறுக்கிறார்கள். இன்று மனிதனுக்குத் தேவன் தம் முடைய உடன்படிக்கையைக் கொடுத்துவிட்டார். இந்த உடன்படிக்கையின்படி மட்டுமே மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு வகையான வாய்ரீதியான வாசகங்கள் மார்க்கரீதியான ஜனங் களை இணைப்பதற்குப் பதிலாகப் பிரித்து விடுகின்றன. கிறிஸ்தவ உணர்வு என் னும் வாய்ரீதியான வாசகத்தைத் தூக்கிப்பிடிப்பவர்கள் வேதாகமம் எங்கே பேசு கிறதோ அங்கே நாங்கள் பேசுகிறோம் , வேதாகமம் எங்கே அமைதியாக இருக்கி றதோ அங்கே நாங்கள் அமைதியாக இருக்கிறோம் ; வேதாகம காரியங்களை வேதாகமப் பெயர்களைக் கொண்டு அழைக்கிறோம் (I பேதுரு 4 : 11) என்று சொல்பவர்களை எதிர்க்கிறார்கள். முதல் வகையினர், தேவனுடைய வார்த்தை யைத் தங்களுக்குச் சம்பந்தமான , உணர்வுப்பூர்வமான ஒன்றாகக் கருது கிறார்கள் . தேவனுடைய வார்த்தையை அவர்கள் அந்தவிதமாக வியாக்கி யானம் செய்கிறார்கள். இரண்டாவது வகையினர், தேவனுடைய மாதிரியை, வகையை, விதிகளை, வாக்கியங்களை, கட்டளைகளை சமகால உணர்வுகளால்

கறைந்து போகாத ஒன்றாகக் கருதுகிறார்கள்.

வேதவாக்கிய வியாக்கியான முரண்பாடுகளால் கிறிஸ்தவ சபை என்றும், கிறிஸ்துவின் சபை என்னும் பிரிவினை உண்டாக்குவதால், " கிறிஸ்தவ ஆராதனையில் எவ்வகையான இசை தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது " என்றும் கேள்வி எழுகிறது. வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே நாங்கள் பேசுகிறோம் என்று சொல்பவர்கள், " சங்கீதங்களினாலும் , கீர்த்தனைகளினாலும் , ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி " (எபே . 5 : 19) போன்ற வசனங்களைக் காட்டி ஆராதனையில் பாடல் மாத்திரமே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட இசை என்று உறுதியாய்ப் பிடித்துக் கொள்கிறார்கள். மேலும், இவர்கள் " கிறிஸ்தவ வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக ; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து , புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி, போன்ற வசனங்களையும் தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்துகிறார்கள் (கொலே. 3 : 16).

மற்ற கிறிஸ்தவ சபை ஆராதனையில் இசைக்கருவிகளுடன் பாடல் பாடப்படுகிறது. இசையைப் பற்றிய இதன் வியாக்கியானம் சபைகளில் இசைக்கருவிகளுடன் கூடிய இசை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, நடைமுறைப்படுத்தப்பட்டது போல் தெரிகிறது. மேலும், இம்மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார் எபேசியர் மற்றும் கொலோசெயர் நிருபங்களில் இடம் பெற்றுள்ள போதனைகளின் சாரம் சத்தைக் குறைக்கும் விதத்தில் பல்வேறுபட்ட தடுப்பு யுத்திகளைப் பிரயோகப் படுத்துகிறார்கள். கிறிஸ்தவ சபை மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தின் இசையைப் பற்றிய வியாக்கியானம், அவர்களை உறுதிப்படுத்த திரும்பத் திரும்ப சித்தரிக்கப்பட்டு சூழ்நிலைக்கேற்ப மாற்றப்படுகிறது. மேலும், கிறிஸ்தவ சபைகள் என்று சொல்லிக் கொள்ளுகிற மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார், தேவன் இசையைப் பற்றிச் சொல் லியிருக்கிற காரியங்களோடு கூட்டியும், தேவன் சொல்லிய காரியங்களிலிருந்து மாறுபட்டும் போதித்து வருகின்றனர். ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிப்பது தேவன் சொல்லியவைகளை அலட்சியப்படுத்தி ( வேதாகம அதிகாரம் ) தேவன் சொல்லாதவைகளுக்கு ஆதரவாகவும் பேசுகிறது ( வேதாகம அதிகாரம் இதற்கு இல்லை ) .

ஆயினும், தேவனுடைய வார்த்தையும் அதன் பயன்பாடும் என்றென்றும் மாறாது. " வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து , அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் " (கொலோ.

3 : 17). சங்கீதங்களினாலும் , கீர்த்தனைகளினாலும் , ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி " என்னும் வசனத்திற்கு அடுத்த வசனம் கிறிஸ்துவின் அதிகாரத்தினால் கிறிஸ்தவர்கள் எல்லாவற்றையும் செய்யலாம் என்று புத்தி சொல்லுகிறது . கிறிஸ்தவ உணர்வினால் தேவனை ஆராதிக்கும்போது இசைக் கருவிகளுடன் பாடல்கள் பாடலாமா ? கிறிஸ்தவ ஆராதனையில் பாடல்கள் என்று தேவன் குறிப்பாகச் சொன்னது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறதா ? எனவே, ஆராதனையில் , தேவன் சொன்னவைகளோடு , குறிப்பாக பாடல் சம்பந்தமாக சொல்லியுள்ளவைகளோடு ஒன்றைக் கூட்டும் போது கர்த்தருடைய பந்தியில் மாம்சத்தையும் , முட்டையையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றிவிடும் அல்லவா ? சுருக்கமாகச் சொன்னால், தேவன் ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிக்கும்படியாகத் தம்முடைய வார்த்தையில் கட்டளையிடவே இல்லை . தேவன் தம்முடைய தாசனாகிய பவுல் மூலமாக கிறிஸ்தவ ஆராதனையில் பாடல் என்னும் ஒருவகையான இசையைத்தான் இரண்டுமுறை கட்டளையிட்டிருக்கிறார். ஆராதனையில் தேவன் அங்கீகரித்த இசையை நடைமுறைப்படுத்த வழிவகுக்கும் வியாக்கியானம் அதே முக்கியத்துவத்துடன் ஒட்டுமொத்த புதிய ஏற்பாட்டையும் பார்க்க வழிவகுக்கிறது.

**பிரிவினை ஒற்றுமைக்கு எதிரானது**

தேவனை, ஒரு சொத்து பிரிப்பது போல் பங்குபோட முடியாது. மார்க்க சம்பந்தமான மக்கள் தங்களைப் பல்வேறுபட்ட மக்களாகப் பிரித்துக் கொள்வதை அவர் கண்டும் காணாதவர் போலில்லை. அவர்கள் தேவனையே தங்களுக்குள் பல பங்குகளாகப் பிரித்துக் கொண்டிருப்பதையும் தேவன் கண்டும், காணாதவர்போலில்லை. ஒற்றுமைக்காக இயேசுகிறிஸ்து ஜெபித்த ஜெபம் தேவமகத்துவத்தின் வெளிப்பாடாயிருக்கிறது." நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல் லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான். 17:20,21)

இயேசு கிறிஸ்து ஒரே சபையைத் தான் கட்டினார். அது ராஜ்ஜியம் என்றும், சரீரம் என்றும் அழைக்கப்படுகிறது (மத்.16 : 18, 19; அப். 2 : 47; கொலோ. 1 : 13 : 18 ). நித்திய ராஜ்ஜியத்திற்கான வாசல் இடுக்கமானது; துரதிஷ்டவசமாகப் பலர் தங்களுக்கு ஆச்சரியம் ஏற்படும்படி அந்த ராஜ்ஜியத்தை இழந்துபோவார்கள்

(மத். 7 : 13, 14). பக்தியுள்ள எல்லோரும் பரலோகம் போவார்கள் என்ற எண்ணம் தவறானது (மத். 7 : 21 – 23). இயேசு கிறிஸ்து ஸ்தாபிக்காத அவர் தலைவராக இல்லாத மத அமைப்புகளெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத். 15 : 13 ). கொரிந்து சபை வகுப்புவாதத்தின் விதையை மனதில் விதைத்தபோது, அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

“ சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர், நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன் ” (I கொரி. 1 : 10 – 13)

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துப் பட்டணத்திலிருந்த விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமைக்கு அழைப்பு விடுத்தார். இன்று எல்லோரும் ஒரே காரியத்தைப் பேசினால், பிரிவினையை நிராகரித்தால், ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருந்தால் ஒற்றுமை ஏற்படும். வகுப்புவாதம் என்னும் பிரிவினையை, பிரிவினைக் கூட்டத்தார் ஏற்படுத்துகிறபடியால் அவர்கள் வேதாகம ஒற்றுமைக்கு எதிரானவர்கள்.

**முடிவுரை**

மார்க்க ரீதியான காரியங்களில் சுவிசேஷம் மாத்திரமே இறுதியான, முழுமையான அதிகார அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப்படும் போதுதான் உண்மையான ஒற்றுமை ஏற்படும். இது கர்த்தருடைய சபையின் தெய்வீகக் குணாதிசயங்களுள் ஒன்றாக இருக்கிறது. மனிதன் தன் தந்திரத்தினால் பிரிவினைவாதக் கொள்கைகளை வகுத்து, வேதத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளோடு கூட்டி வகுப்புவாதத்திற்கு வழிவகுத்துவிடுகிறான். இக்காலத்தில் மத ஒற்றுமைக்கு ஒரே ஆதாரம் புதிய ஏற்பாடு தான் (கலா. 1 : 6 – 9 ; யூதா. 3). நமக்கு ஒரே சபை (சரீரம்) ஒரே தேவன், ஒரே விசுவாசம் ( உபதேசம் அல்லது போதனை ) ஒரே கர்த்தர் ( சபையின் தலைவர்) போன்ற ஒன்றுகள் தான் (எபே. 4 : 4 – 6) வசனங்களில் ஒன்றன் பின் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருப்பவைகளுக்கு எதிரான சபைகளோடு, பலவித தேவர்களோடு, விசுவாசத்தோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தடை செய்யப்பட்டிருக்கிறது ( I யோவான் 9 – 11 ). மேலும், தேவனோடு ஐக்கியம் வைத்திருப்பவர்களிடத்தில் ஐக்கியம்

கொள்ளும்படி கிறிஸ்தவர்களாகிய நமக்கு புத்தி சொல்லப்பட்டிருக்கிறது ( I யோவான் 1:37).

வேதாகம அதிகாரத்தின் பொருள் வேதாகமத்தை அப்படியே பின் பற்றவேண்டுமென்று வலியுறுத்துகிறது. நாம் வாழ்கின்ற இக்காலத்தில் புதிய ஏற்பாட்டை மாத்திரம் நாம் பின்பற்றும்படி மேலும் அறிவுறுத்துகிறது. இல்லையென்றால் அதிகாரமே இல்லை என்று தான் பொருள். மார்க்க ரீதியான காரியங்களில் கிறிஸ்தவ அணுகுமுறை என்பது முற்றிலும் உணர்வுப் பூர்வமானதும், மார்க்க ரீதியான எந்த ஒரு அதிகாரத்தையும் பெயரளவில் அறிந்திருக்கிறதாகவுமே இருக்கும். ஆயினும் உண்மையில் பார்க்கப்போனால், அதிகாரம் என்பது கட்டுப்படுத்துகிறதாகவே இருக்கிறது. இல்லையென்றால் அது அதிகாரமே அல்ல!

இயேசு கிறிஸ்து ஒருபோதும் பிரிவினைக்காக ஜெபிக்கவில்லை. மாறாக, அவர் ஒற்றுமைக்காக ஜெபித்தார். பிரிவினை சபைகளெல்லாம் பிரிவினையின் பன்முகங்களாக உள்ளன. இயேசு கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ, எந்த சபையைக் கட்டினாரோ, எந்த சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களைச் சேர்க்கி றாரோ அந்த சபையின் குணாதிசயமாக ஒற்றுமை இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் ஏதாவது புதுமை இருக்கிறதா? (அப். 20 : 28 ; மத்.16 : 18,19; அப். 2 : 47 ). அதேபோல், மனிதக்கொள்கைளால் உருவாக்கப்பட்ட மனித சபைகள் வேதாகம ஒற்றுமையில்லாமலிருப்பதிலும் ஏதாவது புதுமை இருக்கிறதா?

## புதிய ஏற்பாட்டு சபை ஒற்றுமையில் தெய்வீகத் தன்மையுடையது!



**நம்பிக்கையுடன்**

சகோ. ஏபில் அவர்களே, ஊழியப் பணி உங்களுடையது.

ஏற்றுக்கொள்ள முடிவு செய்வீர்களா?

**" ... உங்கள் ஊழியம், கிறிஸ்தவர்களே**

**நீங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் ... "**

**~ ஊழியம் ~**

**~ பக்திவிருத்தி ~**

**~ தானதர்மம் ~**



" ... நீங்கள் உலகமெங்கும் போய் ... " மாற்கு (16 : 15, 16)

அதிகாரம் - 7

# புதிய ஏற்பாட்டு சபை ஊழியத்தில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது

**பு**திய ஏற்பாட்டுப் பக்கங்களில் நாம் வாசிக்கிற சபை தெய்வீகத் தன்மையைக் கொண்டுள்ளது. இந்த ஊழியம் மூன்று விதமானது. மேலும் இவ்வூழியத்தைக் கொண்டுள்ள ஒரே அமைப்பு கர்த்தருடைய சபைதான். மனிதனால் உருவாக்கப்பட்ட சபைகள் இத்தெய்வீக ஊழியத்தில் பங்கெடுக்க முயற்சித்தாலும்கூட இந்த ஊழியத்தை அவைகளால் நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால், அவைகள் கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ, எந்த சபையைக் கட்டினாரோ, எந்த சபையினிடத்தில் இப்பொறுப்பைக் கொடுத்தாரோ அந்தச் சபையைச் சார்ந்தவைகள் அல்ல.

சபையின் தெய்வீக ஊழியம் அரசியலை உள்ளடக்கியதல்ல. ஆனால், நாட்டை ஆளும் பொறுப்புள்ள அரசாங்கத்திற்கு இசைவானது. இன்னும் சொல்லப் போனால் சபையின் ஊழியம் அதன்மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். சபையின் ஊழியம் தனிப்பட்ட உறவுகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாலும்கூட, இது பிரதானமாக சமூகத்தன்மையைக் கொண்டதல்ல. ஆனால், சமூக பொருளாதார நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். மேலும், இந்த ஊழியம் பொருளாதாரம் சம்மந்தப்பட்டதல்ல. ஆனால் இவ்வூழியம் நிறைவேற்றப்பட பொருளாதாரம் தேவைப்படுகிறது. சபையின் தெய்வீக ஊழியம் ஆவிக்குரிய காரியங்களை உள்ளடக்கியது. மேலும், இது இயேசு கிறிஸ்து செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கிய காரியங்களின் தொடர்ச்சியாயிருக்கிறது (அப். 1 : 1). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எது ஊழியமாக இருந்ததோ (லூக்கா 19 : 10) அது அப்போஸ்தலர்களின் ஊழியமாக இருந்தது (மத். 28 : 18 - 20). அது ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது ( II தீமோ.2:2 ). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முதல் நூற்றாண்டு ஊழியத்தின் வரலாற்றுப் புத்தகமாக இருக்கிறது. இப்புத்தகம் சபை ஊழியம் எப்படியாகச் செய்யப்பட்டது என்பதை அடையாளப்படுத்துகிறது.

## சாத்தியமான ஊழியம்

கர்த்தருடைய சபை தேவனால் கொடுக்கபட்ட சாத்தியமான ஊழியத்தைக் கொண்டுள்ளது. இந்த ஊழியம் சாத்தியமானது மட்டுமல்ல, இந்த ஊழியத்தை ஏற்றுக்கொள்ள சபை கடமைப்பட்டிருக்கிறது.

சபையின் தெய்வீகத் தன்மையின் நேக்கம் இழந்துபோனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதாகும். இழந்துபோனவர்களில் கிறிஸ்தவரல்லாதவர் களும், வழிவிலகிப்போன கிறிஸ்தவர்களும் உள்ளடக்கம் (மாற்கு. 16 : 15 - 16; யாக். 5 : 19, 20). சுவிசேஷ ஊழியத்திற்கு ஒரு பெரிய அங்கீகாரம் இல்லா விட்டாலும்கூட சுவிசேஷ ஊழியம் வேதாகம சபையின் குணாதிசயங்களில் ஒன்றாகவும், மிகவும் இன்றியமையாத ஒன்றாகவும் இருக்கிறது. சுவிசேஷ ஊழியத்தைக் கண்டுகொள்ளாமல் அதை அலட்சியப்படுத்தும் எந்தவொரு சபையும் புதியஏற்பாட்டு சபையாகத் தன்னை அடையாளப்படுத்த முடியாது.

இயேசு கிறிஸ்து இப்பூமியில் தம்முடைய ஊழியம் முடிந்து, ஒரு தலை முறைக்குள் இவ்வுலகம் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள் ளும் என்று சொன்னார் (மத். 24 : 14). கொலோசெயர் நிருபத்தின் முதல் அதிகா ரத்தில் இரண்டு முறை அப்போஸ்தலனாகிய பவுல், நம் கர்த்தரின் தீர்க்கத ரிசனம் நிறைவேறியதாக உறுதிப்படுத்துகிறார் (கொலோ. 1: 6, 23). முதல் நூற் றாண்டில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஊடகங்கள் குறைவாக இருந்தபோதே சுவிசேஷ ஊழியம் சாத்தியமான ஒன்றாகத் தான் இருந்தது. இன்று உலகம் கோடிக்கணக்கான மக்கள் தொகையைக் கொண்டிருந்தாலும்கூட, மிக நவீன ஊடகங்கள் நமக்கிருப்பதால் ஒவ்வொரு தலைமுறைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் திறனை சபை பெற்றுள்ளது. சுவிசேஷம் இப்போதும் சபையின் சாத்தியமான பணிதான். அது மாத்திரமல்ல, சுவிசேஷம் அறிவிப்பது சபை மீதும், ஒவ்வொரு கிறிஸ்தவன் மீதும் விழுந்த தலையாயக் கடமையாயிருக்கிறது.

சபையை பக்திவிருத்தி அடையச் செய்வதும் (I கொரி. 14 : 12) பாவி களுக்கும், பரிசுத்தவான்களுக்கும் நற்கிரியைகளைச் செய்வதும் (கலா. 6 : 10 ; அப் 6 : 1 - 7) சபையின் மூன்று விதமான ஊழியங்களில் இரண்டை அடை யாளப்படுத்துகின்றன. இந்த இரண்டு வகையான ஊழியங்களும் சுவிசேஷ ஊழியத்திற்கு மறைமுகமாகத் தங்கள் பங்களிப்பைச் செய்கின்றன. சபையின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு ஊழியமும் சபையின் மூன்று விதமான ஊழியத்தோடு தொடர்புடைய ஒன்றாகவே இருக்கிறது.

பக்திவிருத்தி அல்லது ஆவிக்குரிய முதிர்ச்சி சபையின் நலனுக்கும் சபையின் ஒட்டுமொத்த ஊழிய வெற்றிக்கும் அவசியமாயிருக்கிறது. துரதிஷ்ட வசமாக முதல் நூற்றாண்டைப் போல இன்று பல கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தில்

முதிர்ச்சியடையத் தவறுகிறார்கள் ( எபி.5:11-6:2 ). ஒவ்வொரு ஆத்துமாவும் முதிர்ச்சியடையவும், பக்திவிருத்தியடையவும் வழிமுறைகள் இருக்கின்றன. " இப்பொழுதும், சகோதரரே நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் " ( அப். 20 : 32 ). ' 'நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் " ( I பேதுரு 2 : 2 ). குறிப்பாக, கிறிஸ்துவின் கிருபையும், பொதுவாக வேதவாக்கியங்களும் நம்மை பக்திவிருத்தியடையச் செய்கின்றன (I பேதுரு 1 : 5 - 10 ; I தீமோ. 3 : 16, 17). ஒருவர் தான் நன்றாகப் பக்திவிருத்தியடைந்த பிறகு சக கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தன்னுடைய பங்களிப்பை அளிக்கலாம். அதன் பிறகு, கிறிஸ்தவரல்லாதவர்களுக்குப் பதில் அளிக்கலாம் (I பேதுரு 3 : 15).

சபையிலிருப்பவர்களுக்கும் சபைக்கு வெளியே இருப்பவர்களுக்கும் நற்கிரியை அல்லது கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்தும் விதம் முதல் நூற்றாண்டு சபையில் சந்தோஷமாகத் தாங்கிப் பிடிக்கப்பட்டது. சபை ஆரம்பிக் கப்பட்ட பிறகு புதிய கிறிஸ்தவர்களின் தேவைகள் எருசலேமிலிருந்த உதாரத்து வமான கிறிஸ்தவர்களால் சந்திக்கப்பட்டது (அப். 2 : 44, 45 ; 4 : 34, 35). அந்தி யோகியாவிலுள்ள சபை, யூதேயாவில் பஞ்சம் ஏற்பட்டபோது, அங்கிருந்த யூதேயா சபைக்குத் தாராளமாக உதவிசெய்து தங்கள் கிறிஸ்தவ அன்பை வெளிப் படுத்தியது (அப். 11 : 27 - 30). அதேபோல், மக்கெதோனியாவிலும், அகாயா விலும் இருந்த சபைகள் எருசலேமிலிருந்த பரிசுத்தவான்களுக்கு அவசியம் ஏற்பட்டபோது நற்கிரியைகளைச் செய்து (ரோமர் 15 : 25, 26) கலா 6 : 10ல் எல்லோருக்கும் அதாவது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்றும் கட்டளையிடுகிறது. " ஆகையால் நமக்கிருக்கும் சமயத்திற் குத்தக்கதாக, விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்.

**சில காரியங்கள் சபையின் ஊழியம் அல்ல**

வேறு சில காரியங்கள் சபையின் ஊழியம் அல்ல. ஏனென்றால், அது மற்றுமொரு தெய்வீக அமைப்பாகிய இல்லத்தின் ஊழியமாக அல்லது பணியாக இருக்கிறது. உதாரணமாக, பொழுதுபோக்கு இல்லத்தின் பணியாக, செயலாக இருக்கிறது. அதேபோல், கல்வி, திருமணம், ஈமச்சடங்கு போன்றவை களெல்லாம் இல்லத்தின் பணியாக, இல்லத்தைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன. இருந்தபோதிலும் இல்லத்தை சபை கூடிவருவதற்காகப் பயன்

படுத்துவதைத் தடை செய்யாது. சபை என்பது சிமெண்ட், கல் மற்றும் மரத்தை உள்ளடக்கிய கட்டிடம் அல்ல. மாறாக, ஜனங்களின் தொகுப்பு தான் சபை.

இன்னும் சில காரியங்கள் சபையின் பணிஅல்ல. ஏனென்றால், அவைகள் தனிநபர், அரசாங்கம் அல்லது மற்ற அமைப்புகளின் பணியாயிருக்கிறது. அவைகளைச் செய்யும்படியாக வேதவாக்கியங்களில் கர்த்தருடைய சபைக்கு கட்டளையிடப்படவில்லை. புதிய ஏற்பாட்டு சபை, ஆத்துமாக்கள் கொடுக்கும் காணிக்கை மூலமாக தேவக்காரியங்களைக் கையாளும்படி கட்டளையிடப் பட்டிருக்கிறது. (I கொரி. 16 : 1, 2 ; II கொரி. 9 : 6, 7).

**மனுஷருடைய சபைகளுக்கு தெய்வீகப் பணி இல்லை**

இயேசு கிறிஸ்து தன்னுடைய நாட்களில் வாழ்ந்த யூத தலைவர்கள், யூத மார்க்கத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் மாற்ற முயற்சித்ததை வன்மையாகக் கண்டித்தார். அந்த யூத தலைவர்கள் மனித விருப்பத்தின்படி தங்கள் மார்க்கத்தை மாற்ற முயற்சித்தார்கள். தேவனால் கொடுக்கப்பட்ட மார்க் கத்தை மாற்றியமைக்க முயற்சித்த யூதர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து " என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் " என்று சொன்னார் ( மத். 15 : 13 ). இதற்கு சில வசனங்களுக்கு முன்பாகத் தான், இயேசு, தேவன் கொடுத்த யூதமார்க்கத்திலிருந்து வழிவிலகிச் செல்லக் காரணமாயிருந்த மனித உபதேசத்தைக் கடுமையாகச் சாடினார். " இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணு கிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷ ருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லி யிருக்கிறான் " (மத். 15 : 8, 9) என்றார்.

வேதாகம அடிப்படையில் பேசுகிறேன். ஒரே ஒரு சபைதான் இருக்கிறது! சபையை ஒரு சரீரத்தோடு ஒப்பிட்டு அதைப்பற்றிய உண்மைகளை விளக்கும் பல வேத வாக்கியங்கள் உள்ளன (ரோமர் 12 : 4, 5; I கொரி. 12 : 12, 13) இந்த வசனங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சபை, சரீரமாக அழைக்கக்கப்படுகிறதையும், அது ஒன்றே ஒன்று தான் என்பதையும் உறுதி செய்கின்றன (எபே. 4 : 4)ம் வசனம் வெளிப்படையாகவே இந்த உண்மையை அறிவிக்கிறது. " உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு". மேலும், கிறிஸ்து ஒரே சபையைக் கட்டுவதாகத்தான் வாக்குத்தத்தம் செய்தார் (மத். 16 : 18 ). இந்த ஒரே சபையானது பல்வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறது (எபேசியர் ஒன்றாம் அதிகாரத்தைப் பார்க்கவும்). இந்த

ஒன்றான சபை தேவனுடைய மனதில் தோன்றியது (இரண்டாம் அதிகாரத்தைப் பார்க்கவும்). மார்க்கப் பிரிவினை சபைகளும், உலக மதங்களும், மற்ற எல்லாப் பிரிவுகளும் மனித ஞானத்தினால் விளைந்தவைகள், தேவனுடைய அந்த தீர்மானத்தினால் உண்டானவைகளல்ல ( எபே. 3 : 10,11 ). தெய்வீக ஆதாரங்களைக் கொண்ட சபைக்குத் தான் தெய்வீகப் பணி உண்டு! புதிய ஏற்பாட்டிற்கு விரோதமாகவும், அது போதிக்கின்ற புதிய தெய்வீக சபைக்கு எதிராகவும் உள்ள மனித சபைகள் தெய்வீகப் பணியைச் செய்ய முடியாது. மேலும், மனித சபைகள், தெய்வீக சபைக்கு எதிராக இருந்துகொண்டு அதே நேரத்தில் உண்மையாக சுவிசேஷத்தை அறிவிப்பதாகச் சொல்லி சுவிசேஷத்தை மீறமுடியாது. அவைகள் வெறுமனே இருந்துகொன்டு தேவனுடைய வார்த்தைகளுக்கு அடையாளமாக இருக்கவும் முடியாது.


**முடிவுரை**

புதிய ஏற்பாட்டு சபையும், அதில் இடம்பெற்றிருக்கும் கிறிஸ்தவர்களும் தெய்வீக ஊழியத்தைப் பெற்றிருக்கிறார்கள். கர்த்தருடைய சபையின் ஊழியத்தைச் செய்ய முயற்சி செய்யும் உரிமையோ அதில் பங்குபெறும் உரிமையோ யாருக்கும் கிடையாது. இன்று தேவனுடைய ஜனங்கள் இப்பொறுப்பை ஏற்றுச் செய்யாவிட்டால் வேறுயாரும் செய்யமாட்டார்கள்; வேறுயாரும் செய்ய முடியாது!

இப்பொழுதே சபையின் ஊழியத்தைச் செய்யும் வேளையாயிருக்கிறது! கிறிஸ்தவர்கள் ஒரு காரியத்தை நாளையோ அல்லது நாளை மறுநாளோ செய்ய வேண்டுமென்று கட்டளைபெறவில்லை. வேதாகமத்தில் விவரிக்கப் பட்டிருக்கிற சபையின் ஊழியம் மிகவும் அவசரத் தேவையாயிருக்கிறது. சபையானது இப்போதே செயல்படவேண்டும், ஏனென்றால், அதன் ஊழியம் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது; பாவநோயால் மரித்துக்கெண்டிருக்கிறவர்கள் இரட்சிக்கப்பட வேண்டிய அவசரத் தேவையில் சபை இருக்கிறது. உன்னதத்திலிருந்து தேவனுடைய அழைப்பும் உலகத்திலிருந்து மனிதனுடைய அழைப்பும் ஒரு பக்கம் இருந்தாலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆத்துமாக்கள் இரட்சிக்கபடவேண்டுமென்ற உள்ளார்ந்த ஆசையால் நிரப்பப்பட வேண்டும்.

நாம் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து உறுதியாக, "ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படடேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது (ரோமர் 1 : 15,16) என்று கூளுரைக்க வேண்டும்.

## இன்றைக்கு ஒரு ஞானஸ்நானம் தான் சரியானது



அதிகாரம் - 8

# புதிய ஏற்பாட்டு சபை ஞானஸ்நானத்தில் தேவத்திட்டத்தின்படியானது

**வே**தாகமம் ஒன்றுக்கும் மேலான ஞானஸ்நானங்கள் பற்றிப் பேசுகிறது. அவைகள் ஒவ்வொன்றும் அதினதின் காலத்தில் சரியானதாக இருந்து, அவைகளுக்கான நோக்கம் கொண்டிருந்தது. அவைகளுள் இன்றைக்குச் சரியானதாக இருக்கும் ஞானஸ்நானம் எது? இன்றைய கிறிஸ்தவ உலகில் இந்த ஞானஸ்நானம் தான் தேவை என்று கூறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் ஞானஸ்நானங்கள் ஒன்றுக்கொன்று மாறுபடுகிறது. ஆகவே, இவைகளுள் வேத வசனங்களோடு இசைந்து போகக்கூடிய சரியான ஞானஸ்நானம் எது? இன்றைக்கு கிறிஸ்தவ உலகில் உண்மையாகவே பக்தியாய் வாழ பிரயாசப்படும் பலர் வேறுசில ஞானஸ்நானங்களை அதிகம் வாஞ்சிக்கின்றனர் (உதாரணமாக பரிசுத்த ஆவி, அக்கினி); இந்த நூற்றாண்டில் எத்தனை ஞானஸ்நானங்கள் உண்டு? அவை யாவை? இப்படியும் ஒருவர் கேட்கலாம். "ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? அல்லது இந்த ஞானஸ்நானம் தான் சரியானது என்பதற்கு வேதாகமம் ஏதாவது குறிப்பான காரணத்தையோ/ காரணங்களையோ கொடுக்கிறதா? " என்று.

### ஞானஸ்நானத்திற்கான விளக்கம்

ஞானஸ்நானம் என்ற தமிழ் வார்த்தையானது, மூல மொழியாகிய கிரேக்கத்திலிருந்து ஆங்கில மொழிக்கு மொழியாக்கம் செய்யப்படாமல், அந்த மூலமொழி வார்த்தையாகிய babtizo என்பது அப்படியே ஆங்கில உச்சரிப்போடு மாற்றப்பட்டது. மாறாக, மொழியாக்கம் செய்யப்பட்டிருந்தால் முழுகுதல் தண்ணீருக்குட்படுத்துதல், அமுக்குதல் என்று பொருள் தரும் வார்த்தைகள் வந்திருக்கும். உருவக ரீதியில் மூலமொழி வார்த்தை சில நேரங்களில் " வெற்றி கொள்ளுதல் " என்றும் பொருளைத் தரும்.

மூலமொழி விளக்கத்தின்படியாகவும், வேத வசனங்களின் விவரிப்பின் படியாகவும் வேதாகம ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் மூழ்குதல் என்று ஒருவர் திட்டமாக அறிந்துகொள்ள முடியும். யோவான் ஸ்நானகன் " மிகுதியான

தண்ணீர் " இருந்த இடத்தில் ஞானஸ்நானம் கொடுத்துள்ளார் ( மத். 3 : 11; யோவான் 3 : 23; அப். 1 : 5) இந்த ஞானஸ்நானமானது அடக்கம் அல்லது நடப் படுதல் என்று பொருள் தருகிறது. (ரோமர் 6 : 3 – 5; கொலொ. 2 : 12) தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தவர்களில், யோவான் ஸ்நானகன் மற்றும் அவருடைய சீடர்கள் (மத். 3 : 11 ; 9 : 14), இயேசுவின் சீடர்கள் (யோவான் 4 : 1, 2), அப்போஸ் தலர்கள் மற்றும் சபை ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு வேறு பலரும் இதில் அடங்குவர் (அப். 2 ; 8 : 12, 38 ; 16 : 13, 15 ; 18 : 8 ; 19 : 5 ; I கொரி. 1 : 14 – 16).

## தண்ணீர் ஞானஸ்நானங்கள் அன்றும், இன்றும்

யூத யுகத்தின் கடைசி காலகட்டத்தில், தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாகிய யோவானால் ஆரம்பிக்கப்பட்டபடியால், “யோவான் கொடுத்த ஞானஸ்நானம்” ( அப். 18 : 25) என்றும், “யோவானுடைய ஞானஸ்நானம்” என்றும் சொல்லப்பட் டது. இந்தத் தண்ணீர் ஞானஸ்நானமானது, யோவான் ஸ்நானகன், அவனு டைய சீடர்கள் மற்றும் இயேசுவின் சீடர்களால் செயல்படுத்தப்பட்டது. தண்ணீர் ஞானஸ்நானம் உட்பட யோவான் ஸ்நானன் செய்த ஒவ்வொன்றும் மேசியாவுக் கும், அவருடைய ராஜ்ஜியத்திற்குமான வழியை ஆயுத்தப்படுத்துவதாக இருந்தது (மத். 3 : 1 – 6). யோவான் ஸ்நானன் 1. மனந்திரும்பி பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளும்படியாகவும் (மாற்கு. 1 : 4) 2. தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்படியாகவும் ( அப். 19 : 4 ) ஜனங்களைத் துரிதப்படுத்தினார். ஆயினும், இந்த ஞானஸ்நானம் ஆயத்தத்திற்கான தாகவும், தற்காலிகமானதாகவுமே இருந்தது. சபையானது ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்பு இது செயல்பட்டிருந்திருக்குமானால் மட்டுமே இது ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாக இருந்து ( அப். 19 : 1, 5 ). யோவான் கொடுத்த ஞானஸ்நான மானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை எதிர்நோக்கிய பாவ மன்னிப்புக்கானதாக இருந்தது. அதாவது, முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள் (ஆதாம், நோவா, ஆபிரகாம்) போன்றோருக்கு இயேசு கிறிஸ்து மூலமாக மீட்பு உண்டாகும் என்னும் எதிர்பார்ப்பில் பாவ நிவர்த்தி பலி எப்படிச் செலுத்தப்பட்டதோ அதைப் போன்றதுதான் இது (எபி. 9 : 15 ; 10 : 4).

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு யோவானின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பாவ மன்னிப்படைந்து சில நிபந்த னைகளோடு கர்த்தருடைய சபையில் அங்கத்தினருமானார்கள். இயேசுவின் பிரதான கட்டளைப்படி அவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பண்ணப்பட வில்லை. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்திற்குப் பிறகு தண்ணீர் ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருப்பது பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானமாகும். அப். 19:1-6 ல் உள்ளது விதிவிலக்கானது. அங்கே சில

சீடர்கள் யோவானின் ஞானஸ்நானத்தைத் தவறாகப் பெற்று மீண்டும் பிரதான கட்டளையின்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

யோவான் மூலமாக இயேசுவானவர் பெற்றுக்கொண்ட இன்னொரு தண்ணீர் ஞானஸ்நானமானது தனித்துவம் வாய்ந்தது. யோவான் ஸ்நானனிடம் மனந்திரும்புதல் நிமித்தமும், பாவங்களை அறிக்கையிட்டதினிமித்தமும் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், இயேசுவானவர் மனந்திரும்புவதற்கோ அல்லது அறிக்கையிடுவதற்கோ எவ்வித பாவத்தையும் கொண்டிருக்கவில்லை. இயேசு அங்கே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்கான காரணம் மத். 3 : 13 - 17 வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது, " எல்லா நீதியையும் நிறைவேற்ற " என்று. ஞானஸ்நானம் பெற விரும்புகிறவர்கள் இயேசுவின் மாதிரியைப் பின்பற்ற விரும்பினாலும், பாவத்திற்கான மனந்திரும்புதல் இல்லாமல், எல்லா நீதியையும் நிறைவேற்றும் ஞானஸ்நானத்தை யாராலும் பெறமுடியாது. இயேசுவின் ஞானஸ்நானம் தனிச்சிறப்பிற்குரியது. இந்தக் காரணத்தினிமித்தமாகவும், இன்றைக்கு நடைமுறையில் இல்லாத யோவான் கொடுத்த ஞானஸ்நானமாக இருப்பதினிமித்தமாகவும், இயேசுவானவர் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானமானது இன்றைக்குத் தேவைப்படும் " ஒரே ஞானஸ்நானம் " ( எபே. 6 : 5) அல்ல.

இயேசுவின் பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானமானது அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தின் முதலாவது பிரசங்கிக்கப்பட்டது. (அப். 28 : 18 - 20 மாற்கு. 16 : 15, 16 ; லூக்கா. 24 : 46, 47). புதிய ஏற்பாடு முழுவதும் இது பிரசங்கிக்கப்பட்ட ஒரு செய்தியாக இருந்தது (அப். 2 : 38 ; 8 : 36 - 38 ; 10 : 47, 48 ; 26 : 16; I பேதுரு 3 : 20, 21).ஆகையால், சபை ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு, இன்றளவும் நடைமுறையில் இருப்பது பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானம் தான். ( பாவ மன்னிப்புக்காகத் தண்ணீரில் முழ்குவது ). இந்த ஒரு <u>ஞானஸ்நானம்</u> தான் தேவனுடைய அதிகாரத்தின்படி இன்றைக்கு நடைமுறையில் உள்ளது. இது எப்படிப் பெறவேண்டுமென்ற போதனை புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகிப் பெறப்படும் ஞானஸ்நானம் தான் இன்றைக்குச் சரியான ஞானஸ்நானம்.( பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானம்). இந்த ஞானஸ்நானத்தின் நோக்கம், ஆத்துமாவை மீட்கவும், ஒருவனை இரட்சிக்கவும் செய்கின்ற பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம் வேறுபல நோக்கங்களுக்காக அல்லது ஒருவனை ஏதாவது ஒரு சபைக்குள்ளாகக் கொண்டுவரும்படி முதல் நூற்றாண்டுக்குப் பிறகு நடைமுறைக்கு வந்த ஞானஸ்நானங்கள் சத்தியத்தின்படி சரியானவைகள் அல்ல. புதிய ஏற்பாட்டின் நாட்களில் அவைகள் அப்படி இருக்கவில்லை.

**உருவக நடைமுறையிலான ஞானஸ்நானங்கள்: கடந்த மற்றும் எதிர்காலத்தில்**

I கொரிந்தியர் 10:2, இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டு வந்ததைக் குறிக்கும் உருவக நடைமுறையிலான ஞானஸ்நானமாக உள்ளது. " எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் ". ஞானஸ்நானம் என்பதற்கு மூலமொழி விளக்கத்தின்படியான ஒரு பொருள் " மேற்கொள்ளுதல் " என்பது. (ஏற்கனவே பார்த்துள்ளோம் ). அங்கே இஸ்ரவேலர்கள், நேரடியான பொருளில் அல்ல உருவகமுறையில் செங்கடலின் தண்ணீரை இரண்டு பக்கவாட்டிலும் கொண்டு, தண்ணீர்த் துளிகளும், தண்ணீர்ப் புகையும் தங்கள் தலைக்கு மேலிருக்கும் படியாகக் கொண்டு முழுகுதல் என்ற மனதோடு, மேற்சொல்லப்பட்ட நிலையில் கடந்து வந்தார்கள். இதை வைத்துக்கொண்டு இன்றைக்கு ஞானஸ்நானம் இப்படியும் கொடுக்கப்படமுடியும் என்று கூறிவிட முடியாது.

பாடுகளின் ஞானஸ்நானத்திற்குள்ளாக முதலாவது இயேசுவும், பிறகு அவருடைய அப்போஸ்தலரும், அதன்பிறகு பல இரத்தசாட்சிகளும் கடந்து சென்றார்கள். இந்த உருவக ஞானஸ்நானம் குறித்து மாற்கு 10:38,39-ம் வசனங்களில் இயேசு பேசியுள்ளார்.

> " இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள் " (மத். 20 : 22, 23 ; லூக்கா. 12 : 50) பார்க்கவும்.

ஆயினும் எபேசியர் 4:5-ல் கூறப்பட்டுள்ள சரியானதும், இன்றைக்கு நடைமுறைப்படுத்தத்தக்க ஒரே ஞானஸ்நானம் இதுவல்ல.

உருவக நடையில் கூறப்பட்டுள்ள இன்னொரு ஞானஸ்நானம் <u>அக்கினி ஞானஸ்நானம்.</u> அறியாமையினிமித்தம் அநேகர் அக்கினி ஞானஸ் நானத்திற்காக இன்று ஜெபிக்கின்றனர். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத் தோடு சம்பந்தமுடைய ஒன்றாகத் தவறான முறையில் அக்கினி ஞானஸ் நானமானது மக்களின் மனதில் பதிந்திருக்கிறது. இரண்டு காரணங்க ளினிமித்தம் இது சந்தேகத்திற்கிடமற்றதாகக் காணப்படுகின்றது. 1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும், இந்த அக்கினி ஞானஸ்நானமும் ஒரே வேத

பகுதியில் இடம்பெற்றிருப்பது (மத்.3:11). 2. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, அக்கினிமயமான நாவுகள் போல் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள் மேல் வந்தமர்ந்தது ( அப் 2:3,4 ). இருப்பினும், மத்.3:10-12 வசனங்கள் **அக்கினி** என்பதை எதிர்மறையான பொருளோடுதான் சொல்லுகிறது.

" இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், **அக்கினியினாலும்** உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றார் "(மத் 3:10-12).

இவ்வசனங்களில் அக்கினி சம்பந்தமான மூன்றுமே அழிக்கும் தன்மை கொண்ட அக்கினியைக் குறிப்பதாகவும், நித்திய நரக அக்கினி பற்றிக் குறிப்ப தாகவும் உள்ளது. யோவான் இவ்வாக்கியத்தைச் சொன்னபோது அங்கிருந்த வர்களில் 1. தங்கள் தவறுகளினிமித்தம் மனந்திரும்பி யோவானாலே ஞானஸ்நானம் பெற்றவர்கள் (வசனம் 5, 6). 2 . அவர்களில் அப்போஸ்தலரும் உண்டு. 3 . மனந்திரும்பாத பரிசேயர் மற்றும் சதுசேயர். மத். 3 : 11, மூன்று ஞானஸ்நானங்கள் பற்றிப் பேசுகிறது. 1. பாவமன்னிப்புக்கென்று, பாவத்திற் காய் மனந்திரும்பி, அறிக்கை செய்வதினிமித்தம் யோவானால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம். 2. அப்போஸ்தலர்களுக்கு மட்டும் இயேசுவாலே வருங் காலத்தில் கொடுக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் 3. உலகத்தின் முடிவின் போது இயேசுவால் நிறைவேற்றப்படும் அக்கினி ஞானஸ்நானம் (II தெச. 1 : 7 - 9 ; மத். 25 : 41 - 46 வெளி. 20 : 15). இதைச் சரியாகப் புரிந்துகொண்டால் அக்கினி ஞானஸ்நானத்தை ஒருவரும் விரும்ப மாட்டார்கள்.

**பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கடந்த காலத்தில் :**

எண்ணிலடங்கா கிறிஸதவ சமுதாயத்தார் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை மிக ஆசையோடு விரும்புகிறார்கள், தாங்கள் அதற்குத் தகுதியான வர்கள் என்று எண்ணிக்கொண்டு மேலும், நம் காலத்தில் வாழும் அநேகர்

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும், அத்தோடு அற்புதங்கள் செய்யும் வல்லமையையும், புதிதான தெய்வீக வெளிப்பாட்டையும் பெற்றுக் கொண்ட தாகக் கூறுகிறார்கள். இருப்பினும் இன்றைக்கு மனிதர்களுடைய விருப்பம் அதுவாக இருந்தாலும், அவர்களால் நடந்ததாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்க தாக இருந்தாலும், புதிய ஏற்பாடு தெள்ளத் தெளிவாகக் கூறுகிறதே உண்மை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இன்றைக்கு இல்லை, இனிமேலும் இல்லை. மேலுமாக, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று பெந்த கொஸ்தேகாரர்கள் கூறிக்கொள்வது வெற்றானதாகவும், விவரிக்க முடியததாகவும், அவர்கள் பெற்றுக்கொண்டோம் என்று பெருமைபட்டுக்கொள்ளும் இயற்கைக்கு மாறான சக்தி பற்றிக்கேட்கும்போது 100 சதவீதம் பதில் சொல்ல முடியாமல் திணறி, நழுவித் தப்பித்துக் கொள்ளக்கூடியதுமாயிருக்கிறது.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றி இயேசு வாக்களித்தபோது அங்கி ருந்தவர்கள் அப்போஸ்தலர்கள் மட்டுமே (யோவான் 14 - 16; அப். 1 : 1 - 8). அவர்கள் மட்டுமே அந்த வாக்குத்தத்தத்தை அடைந்தார்கள் (அப். 1 : 26 - 2 : 4, 7, 14, 42). அப். 2 : 1 - 4 ல் சொல்லப்பட்டிருப்பவர்கள் அப்போஸ்தலர் 1 : 26-ல் உள்ள அப்போஸ்தலர்களே. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட அனைவரும் கலிலேயர்கள் (வச. 7) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நா னத்தின் மூலமாகப் பேசும்படி நின்றவர்கள் பேதுருவும், மற்ற பதினொருவரும் மட்டுமே (வச. 14). பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் விளைவாகக் கொடுக் கப்பட்ட உபதேசங்கள் " அப்போஸ்தலருடைய உபதேசம் " என்றே அழைக் கப்பட்டது (வச. 42).

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட வல்லமை, முதல் நூற்றாண்டுக் காலத்தில், வேறுசில வழி முறைகள் மூலம் மற்றவர்கள் அற்புத வல்லமையைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்விதத்திலும் தடையாயிருக்கவில்லை (அப். 8 : 14 - 27 ; 19 : 1 - 6; அப். 10, 11 ஆதி). அப்போஸ்தலர்கள் பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்ட (அப். 2 : 16 - 21; 3 : 6 - 39) யோவேல் தீர்க்கத்தரிசியின் தீர்க்கதரிசனம் பற்றி (2 : 28 - 3 : 2) விளக்கமளிப்பது இப்பாடத்தின் நோக்கமல்ல.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (மற்றும் வேறுபல அற்புத வல்லமை) இப்பூமியில் தற்காலிகமாக இருக்கும்படியாகவே திட்டமிடப்பட்டது என்று சொல்லுவது போதுமானதாக இருக்கும். அப்போஸ்தலர்களுக்கு மட்டும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது மற்றும் அப்போஸ்தலர்களாலே மற்றவர்களுக்குஅற்புத வல்லமை கொடுக்கப்பட்டது போன்றவை, <u>புதிதாக</u>


ஆரம்பிக்கப்பட்டு குழந்தை பருவத்தில் இருந்த சபைக்கான தேவனுடைய திட்டமே. அற்புதங்களுக்கான நோக்கம் நிறைவேறியவுடன் ( மாற் 16 : 20 ) அற்புதங்கள் நின்று போயிற்று ( I கொரி. 13 : 8 - 13 ; எபே. 4 : 11 - 14 ). பரலோகத்தின் தேவனால் புதிய ஏற்பாடு முழுமையான அளவில் வெளிப் படுத்திக் கொடுக்கப்பட்ட பிறகு, தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட துண்டு துண் டான குறைவானதான வெளிப்பாடுகள் அவசியமில்லாமல் போயிற்று அற்புதங்களால் ஒத்தாசை பெற்ற அப்போஸ்தலர்களும், மூப்பர்களும், பிரசங் கிகளும், போதகர்களும் முடிவாக வேதவசனங்கள் முழுமையான அளவில் வெளிப்பட்ட பிறகு, அவைகளினாலே ஒத்தாசை பெற்றனர். அந்த தேவ வார்த்தைகள் தான் இன்றைக்கு நமக்கிருக்கிறது.

**முடிவுரை**

புதிய ஏற்பாட்டு சபை ஞானஸ்நானத்தில் தேவ திட்டத்தைப் பின்பற்றுகிறது. வேதவசனங்களில் இடம்பெற்றுள்ள பல ஞானஸ்நானங்களில் ஒன்று மட்டும் இன்றளவில் சரியானதாக இருக்கிறது. கிறிஸ்துவின் காலத்தில், அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு கிறிஸ்துவின் பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானம் ( பாவமன்னிப்புக்காகத் தண்ணீரில் முழுகுதல் ) மட்டுமே வேதவசனங்களின் அதிகாரமுடைதாயிருக் கிறது. மேலுமாக, ஒருவனை இரட்சிக்கக்கூடிய ஒரே ஞானஸ்நானம் இதுதான் (I பேதுரு. 3 : 29. சமீப காலங்களில் புகுத்தப்பட்ட மற்ற பல ஞானஸ்நானங்கள் சத்தியத்தின்படியாகத் தவறானவைகள்.

யோவானின் ஞானஸ்நானம், இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம், பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானம், செங்கடல் மோசேயைக் கொண்டு மேகத்தினாலே கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், மனிதர்களால் புகுத்தப் பட்ட பலவித ஞானஸ்நான முறைகள் என்று எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்க்கும்போது **இன்றைக்கு ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் சரி** என்று வேதவசனங்கள் திட்டமாகக் கூறுகிறது (எபே. 4 : 5) அது எது? பாவமன்னிப்பு கென்று தண்ணீரில் முழுகிப் பெறப்படும் ஞானஸ்நானமே ( அப். 10 : 48 ; மாற்கு 16 : 16 ; அப். 2 : 38 ). ஆம், வேதவசனங்களெல்லாம் இதையே உறுதிசெய்கிறது. " இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் " ( அப். 22:16).

## ஒழுங்குபடுத்துவதில் தெய்வீகத்தன்மை



அதிகாரம் - 9

# புதிய ஏற்பாடு சபை ஒழுங்குபடுத்துவதில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது

**நா**ம் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் வாசிக்கும் சபையின் தனித்துவம் வாய்ந்த குணாதிசயங்கள் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன் பெயர், ஆரம்பம், ஆளுகை, அமைப்பு, ஆராதனை, உபதேசம், ஒற்றுமை, ஊழியம் மற்றும் ஞானஸ்நானம் போன்றவை இதில் அடக்கம். அதேநேரத்தில், வேதாகம சபையானது மேற்கொள்ளவேண்டிய ஒழுங்கு நடவடிகைகளைப் பற்றி குறைவாகச் சொல்லப்படவில்லை. பொதுவாக ஒழுங்குபடுத்துதல் என்பது இனிமையற்ற தன்மையையும், தண்டனை நடவடிக்கையையும் உள்ளடக்கிய ஓர் எதிர்மறையான வார்த்தையாகப் பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும், ஒழுங்குபடுத்துதலை வலியுறுத்தும் தேவ வார்த்தைகள் இதற்கு இன்னும் மேலான பயன்பாடு இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதைக் குறிக்கின்றன, ஒழுங்குபடுத்துதல் என்பது போதகத்தை உள்ளடக்கிய ஒன்றாகவும், சீஷத்துவத்தில் ஒருங்கமைந்த ஒன்றாகவும் இருக்கிறது.

## நேர்மறையான ஒழுங்குபடுத்துதல் :

ஒழுங்குபடுத்துதல் என்பது சுயக்கட்டுப்பாடு மற்றும் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு வழிமுறை. அதாவது, குறிப்பாக வேதாகமத்திற்கு இசைவான வாழ்க்கையைத் தானாக முன்வந்து நடப்பிப்பதைக் தொடர்புபடுத்துகிறது. எனவே, ஒழுங்குபடுத்தப்படுதல் என்பது பிறருடைய திணிப்பு இல்லாமல் ஒருவரிடத்தில் தானாக ஏற்படுகின்ற நேர்மறையான விளைவாயிருக்கிறது. இவ்வகையான ஒழுங்கு கிறிஸ்தவ முறையாகிய சீஷத்துவத்தை உள்ளடக்கியது. இது கிறிஸ்துவைத் தங்கள் கர்த்தராகக் கொண்டிருக்கிறவர்களிடத்தில் தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. " அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் ; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக

உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12 : 1, 2).

தேவனுடைய வார்த்தைக்கு இசைவான ஒரு வாழ்க்கைக்கு தானாகவே முன்வந்து வாழ்வது சுய ஒழுங்காக இருக்கிறபடியால் அது நேர்மறையானது தான். இருந்தபோதிலும் பலவீனமான அல்லது தவறு செய்கிற கிறிஸ்தவனை தேவனுடைய வார்த்தைக்கு இசைவான ஒரு வாழ்க்கையை வாழச் சொல்லி உற்சாகப்படுத்துவது, நோக்கத்தில் நேர்மறையானதாகவும் விரும்பிய விளைவை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. ஒழுங்குபடுத்துதல் உண்மையான கிறிஸ்தவத்தை நடைமுறைப்படுத்த வழிவகுததினால் அது நேர்மறையான ஒழுங்குபடுத்துதலாகவே இருக்கிறது.

**வீடும், சபையும்:**

பொதுவாக எடுத்துக்கொண்டால்,சபையில் ஒழுங்கு நடவடிக்கை என்பது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது போன்றதாகும். ஒரு கிறிஸ்தவ தகப்பன் தன் பிள்ளைகள் சம்பந்தமாக எவைகளையெல்லாம் செய்கிறாரோ அது நேர்மறையான கண்ணோட்டத்தில் இருந்தாலும் சரி, எதிர்மறையான கண்ணோட்டத்தில் இருந்தாலும் சரி அது குழந்தைகளின் நலன் கருதி எடுக்கப்படும் முடிவாகத்தான் கருதப்படவேண்டும். தகப்பன் மனதில் எப்போதும் குழந்தைகளின் நலன்தான் இருக்கும் (எபே. 6 : 4). அப்போஸ்தலனாகிய பவுல் இந்தத் தகப்பன் பிள்ளைகள் உறவுமுறையைத்தான் தெசலோனிக்கே பட்டணத்து சபையாரோடு கொண்டிருந்த ஆவிக்குரிய உறவு முறையை விளக்குவதற்காகப் பயன்படுத்தியிருக்கிறார். மேலும், தம்முடைய ராஜ்ஜியத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் (1 தெச. 2 : 11 - 18) ஒப்புக்கொடுத்தலைப் பொருத்தவரை வீட்டில் எப்படி இருகிக்கிறதோ அப்படியே சபையிலும் இருக்கிறது. அதாவது, இங்கே பவுல் தெசலோனிகேக் பட்டணத்து சபையில் ஒழுங்கற்று நடந்த அங்கத்தினர்களை எச்சரிக்கவும் செய்தார். அவர்களுக்குப் புத்திமதியும் சொன்னார். வீட்டிலும் நாம் இப்பணியைத் தான் நம் பிள்ளைகளிடத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுங்குபடுத்துதல் என்பது நேர்மறையாக (சிட்சித்தல்) இருந்தாலும் அது மற்றவர்களின் நலன் கருதிதான் இருக்கிறது. இது குறிப்பாக, சபையைப் பொருத்தவரை ஒருவருடைய ஆவிக்குரிய நலன் கருதிதான் இருக்கிறது.

மேலும், எவ்வேளையிலும் ஒரு கிறிஸ்தவ தகப்பனுக்கும், கிறிஸ்தவ

பிள்ளைகளுக்கும் இடையே உற்சாகப்படுத்தப்படும் உறவு பெரும்பாலும் பிள்ளைகளின் நடத்தையைச் சார்ந்திருக்கிறது. நிச்சயமாகவே, ஒரு தகப்பன் தன் பிள்ளைகளோடு இனிமையான உறவு வைத்துச் சுகித்திருக்கவே விரும்புவான். பிள்ளைகளும் அதையே விரும்புவார்கள். இருந்த போதிலும் சில வேளைகளில் பிள்ளைகள் தவறு செய்யும்போது தகப்பனுக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ தன் அதிகாரத்தைச் செலுத்தி அவர்களைக் கடிந்து கொள்ளவும், சிட்சிக்கவும் கடமைப்பட்டிருக்கிறான். பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான், அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான் ( நீதி. 13 : 24 ). நம் பரம தகப்பனும் நம்மை நேசித்து நமக்கு சிறந்தவைகளை கொடுக்கிறபடியால் நம்மை சிட்சிக்கிறார்.

அன்றியும் : என் மகனே,கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன் மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாயிருக்கும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் ( எபி. 12 : 5 – 11 ).

**சபையும் ஒழுங்குபடுத்துதலும் :**

புதிய எற்பாட்டு சபை ஒழுங்குபடுத்தப்படுவதைக் குறித்து மிகத் தெளிவாகப் பேசுகிறது. கர்த்தருடைய சபை இப்பொறுப்பிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள அல்லது இப்பொறுப்பைத் தட்டிக் கழிக்க எவ்வித விலக்கும் அளிக்கப் படவில்லை. எனவே, இன்று நாங்கள் வேதாகம சபைக்கு அடையாளமாக இருக்கிறோமென்று சொல்லிக்கொள்பவர்கள் தேவைப்படும்போது சபைக் கட்டு பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். உண்மையாகவே, சபையின் ஒழுங்கு

நடவடிக்கை என்பது சபையின் மற்ற பாகங்களான பெயர், ஆரம்பம், ஆளுகை அமைப்பு, ஆராதனை, உபதேசம் போன்றவைகளைப்போல அடையாளச் சின்னமாக இருக்கிறது. சபையின் ஒழுங்கு நடவடிக்கை பற்றிய வேதாகம உபதேசத்தை நடைமுறைப்படுத்தாத எந்த ஒரு சபையும் கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ, எந்த சபைக்கு அவர் தலைவராக இருக்கிறாரோ அந்த சபையாக அது இருக்கமுடியாது. இப்படி கிறிஸ்துவின் சபைகள் எத்தனை அடையாளப் பண்புகளை அலட்சியப்படுத்தமுடியும்? அப்படி அலட்சியப்படுத்திக்கொண்டு எப்படி உண்மையான ஒரு சபையாக இருக்க முடியும்?

பிராந்திய சபையில் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமாகப் பல்வேறு புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் சில முக்கிய காரணங்களை வலியுறுத்துகின்றன. ஆனால், அவைகளுள் மிக முக்கியமானது என்னவென்றால், சபையின் ஒழுங்கு நடவடிக்கை யார் மீது எடுக்கப்படுகிறதோ அவர்களுடைய ஆவிக்குரிய நலனுக்காகத்தான் என்பது. (I கொரி. 5:5).

சபை ஒழுங்கு நடவடிக்கையின் பிரதான நோக்கம். இது சபையின், பணி இதை ஆகவே, எப்படியாவது செய்யவேண்டுமென்பதாக இல்லாமல், வழிதவறிச் சென்ற சகோதரனை சீர்பொருந்தச் செய்கிறதாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு நெருக்கமான உறவு நிலவ வேண்டும். அப்போதுதான் சத்தயத்தின்படி நடக்கும் கிறிஸ்தவர்கள் சத்தியத்திற்குப் புறம் பான வாழ்க்கை வாழும் கிறிஸ்தவர்களைச் சீர்பொருந்தப் பண்ணமுடியும். மேலும், தவறு செய்யும் அல்லது சத்தியத்திற்குப் புறம்பாக நடக்கும் கிறிஸ்த வர்கள் தேவனுடைய ஐக்கியத்திற்குப் புறம்பாகவும் இருக்கிறார்கள் என்பது கவலைக்கிடமான ஒரு காரியமாகும். கிறிஸ்தவர்கள் தேவனோடு சரியான உறவு வைத்திருப்பவர்களுடன் தான் ஐக்கியம் வைத்துக்கொள்ள முடியும். ஆயினும், கிறிஸ்தவர்கள் சகோதர சிநேகத்தை மேம்படுத்தத் தவறும்போது, துரதிருஷ்டவசமாக சபை ஒழுங்கு நடவடிக்கையின் வேகம் மங்கிப் போகிறது (ரோமர் 12:10; I பேதுரு 2:17).

மேலும், ஒழுங்கு நடவடிக்கையின் ஒரு பகுதியாக சபை அங்கத்தினர்களிட மிருந்து ஐக்கியத்தை விலக்கிக்கொள்வது பிற அங்கத்தினர்கள் மாசுபடாதபடி தடுக்கிறது (1 கொரி. 5:6). ஏனென்றால், பாவம் பரவக்கடாது. இருந்த போதிலும் புத்திமதி, கடிந்துகொள்ளுதல் போன்ற முயற்சிகள் மனந்திரும்பு தலை உண்டாக்கத்தவறும்போது ஐக்கியத்தை விலக்குவது ஒரு கடைசிக்கட்ட கடுமையான நடவடிக்கையாக இருக்கிறது.

ஐக்கியத்தை விலக்கும் நடவடிக்கை எவ்வளவு வேகமாக எடுக்க வேண்டு மென்பது இரண்டு காரியங்களை அடிப்படையாகக் கொண்டது. 1.தவறு செய்யும் கிறிஸ்தவர்கள் கள்ளப்போதகரா? அவர் அப்படியிருந்தால் அவருடைய ஆத்துமா ஆபத்திலிருப்பது மட்டுமல்லாமல் மற்றவர்களுடைய ஆத்துமாக் களையும் அது ஆபத்துக்குள்ளாக்கி விடும். எனவே, அவர் கள்ளப்போதகரா இல்லையா என்பதைக் கண்டறியப்பட வேண்டும். 2.தவறு செய்த கிறிஸ்தவரை உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் சம்பந்தப்பட்டவரைச் சீர்பொருந்தச் செய்யும் முயற்சியில் முழுமையான ஒத்துழைப்புக் கொடுக்கிறார்களா?

நிச்சயமாகவே, பிறரிடத்தில் கள்ள உபதேசத்தைக் கிருமிபோல பரப்பு பவர்களையும், சகோதரர்கள் மத்தியில் பிரிவினையை உண்டாக்குபவர் களையும் நாம் தடுக்காமல் இருக்க முடியாது. ஆகையால், வேதவாக்கியங்கள் இத்தகைய காரியங்களைக் கட்டுப்படுத்த வேகமாக, செயல்படவேண்டுமென்று நமக்குக் கட்டளையிடுகின்றன. (ரோமர் 10 : 17, 18; தீத்து 3 : 10, 11). யாக்கோபு ஆசிரியர் போதகர்களுக்கு இருக்கும் பொறுப்புகளைக் குறித்தும், அவர்களுக்கி ருக்கும் கடுமையான ஆக்கினையைக் குறித்தும் எழுதியிருக்கிறார் (யாக். 3 : 1). மூப்பர்களுடைய பொறுப்புகளைக் குறித்தும், அவர்களுக்கிருக்கும் கடுமை யான ஆக்கினையைக் குறித்தும் எழுதியிருக்கிறார் (யாக். 3 : 1). மூப்பர்களுடைய பொறுப்புகள் மற்றும் தகுதியம்சங்களில் கள்ளப் போதகர்களைத் தடுக்கும் பணியும், திறமையும் பட்டியலிடப்பட்டிருக்கிறது (தீத்து 1 : 9 – 11). கள்ளப் போத கர்களும், பிரிவினைவாதிகளும் சபையின் நலனுக்கு அச்சுறுத்தலாயிருக்கிறப் படியால் அவர்களை உடனடியாக சபையிலிருந்து நீக்க வேண்டு ம்.

ஒழுங்கற்று நடக்கிறவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளும் படியாக கிறிஸ்தவர்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறபடியால் (II தெச.3 : 6) அது சிலருக்கு கசப்பை ஏற்படுத்தினாலும் கூட சபையின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் அல்லது எடுக்க வேண்டாம் என்பது போலல்லாமல் செய்தே தீரவேண்டியது கட்டளையாயிருக்கிறது. ஐக்கியத்தை விலக்குதல் எதிர்மறை யான விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஒருவர் வாக்குவாதம் பண்ணி னாலும்கூட தேவனோடு யாரும் வாக்குவாதம் பண்ண முடியாது. ஏனென்றால், எந்த ஒரு காரியத்திலும் ஒருவர் தேவனுடைய வார்த்தையை அலட்சியப்படுத்தும் போது அவர் தேவனோடு வாக்குவாதம் செய்கிறவராகிறார். தேவனோடு வாக்குவாதம் செய்து யாரும் ஜெயிக்க முடியாது.!

**முடிவுரை**

சபையின் ஒழுங்கு நடவடிக்கை என்பது தேவனால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு சபையின் அடையாளப் பண்புகளுள் ஒன்றாக இருக்கிறது. ஆகவே,

இது தெய்வீகப் பண்பாயிருக்கிறது. மேலும், சபையின் ஒழுங்கு நடவடிக்கையானது நோக்கத்தில் நேர்மறையானதும், நல்ல விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளதுமாயிருக்கிறது. வீட்டில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் போது யார் மீது அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ அவருடைய நலன் தான் நோக்கமாக இருக்கிறது. அதுபோல, சபையிலும் யார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ அவருடைய நலனுக்காகத்தான் அப்படி எடுக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.


விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் கர்த்தருடைய சபை, தேவனுடைய சட்டதிட்டங்கள் ஒழுங்காகக் கடைபிக்கப்படுகிறதா என்று கண்காணிக்கும் படியாகவும் அவசியப்படும்போது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியாகவும் கட்டளை பெற்றிருக்கிறது. ஐக்கியத்தை விலக்கிக்கொள்ளுவது தவறு செய்யும் சகோதரர்களை இரட்சிக்கும் ஒரு நடவடிக்கையாக இருந்தாலும் கூட அது கிறிஸ்துவின் சபை அல்லது மணவாட்டி மேலும் கறைபடாதபடி அதனால் பாதுகாக்கப்படுகிறது. ஐக்கியத்தை விலக்கிக்கொள்ளுதலின் வெற்றியானது சபை அங்கத்தினர்களோடு ஏற்கனவே கொண்டிருக்கும் நெருக்கமான உறவையும் ஏற்கனவே அவர்கள் மனதைத் திடப்படுத்தியதையும் அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்தவ அன்பு ஐக்கியத்துக்குள்ளும், ஐக்கியத்தை விலக்குவதுக்கும் இடையே வெற்றிகரமாக ஊடுருவிச் செல்லுகிறது.

## ஒரே தேவத்துவம்

அப். 17 : 29 ; ரோமர் 1 : 21 ; கொலோ 2 : 9

யோவான். 14 : 26 ; 15 : 16 ; அப். 2 : 33 ; ரோமர் 15 : 16, 30;

2 கொரி. 13 : 14 ; எபே. 4 : 4 – 6 ; எபி. 9 : 14




"... ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து ... " மத். 28 : 26 ; 19

# புதிய ஏற்பாடு சபை தேவத்துவத்தில் தெய்வீகத் தன்மையுள்ளது

சத்தியம் என்பது அங்கீகரிக்கப்பட்டாலும், அங்கீகரிக்கப்படாவிட்டாலும் சத்தியமாகத்தான் இருக்கிறது. அதுபோலவே, தேவத்துவமும் சரியாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் தேவத்துவமும் தேவத்து வமாகத்தான் இருக்கிறது. மத உலகம் தேவத்துவத்தைப் பற்றி முரண்பட்ட உபதேசங்களைக் கொண்டிருந்தாலும், அவர்கள் சில முக்கியமான உபதேசங் களில் தவறு செய்தாலும் கூட தேவத்துவத்தைப் பற்றிய சத்தியம் உறுதியாக நிலைத்திருக்கிறது. குறிப்பாக, தேவத்துவத்தைப் பற்றிய இரண்டு பிரதான காரணிகள் உண்மைகளாயிருக்கிறது. 1.வேதாகமம், தேவத்துவம் மூன்று நபர்களை உள்ளடக்கியது என்று தெளிவாகப் பேசுகிறது. 2. வேதாகமம், தேவத்துவம் மிகத் துல்லியமான தெய்வீகக் குணாதிசயங்களைப் பெற்றிருப்பதாகச் சொல்லுகிறது. தேவனுடைய தன்மை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**தேவத்துவம் விளக்கப்பட்டிருக்கிறது**

சமகால மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களில் குறைந்தபட்சம் இரண்டு பிரிவுகள், தேவத்துவம் மூன்று நபர்களை உள்ளடக்கியது என்பதை மறுக்கி றார்கள். யெகோவா சாட்சிகள் இயேசு கிறிஸ்து தேவன் என்பதை மறுக்கிறார்கள். ஐக்கிய பெந்தகொஸ்தே சபை தேவத்துவத்தில் ஒரே ஒரு நபரை அதாவது இயேசு கிறிஸ்துவை மாத்திரம் ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்விரு மார்க்கப் பிரினை சபைகளுமே தேவத்துவத்தில் மூவர் இருப்பதை ஒத்துக்கொள்வதில்லை.

தேவத்துவம் என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தை " Theos " என்னும் கிரேக்க வார்த்தையாகும். இதற்குச் சரியான பொருள் தெய்வீகம் என்பதாகும். ரோமர் 1:20, தேவத்துவம் என்னும் வார்த்தையை சிருஷ்டிகரின் தெய்வீகத் தன்மையைப் பறைசாற்றும் இயற்கையின் சாட்சியங்களை விளக்குவதற்காகப் பயன்படுத்தியிருக்கிறது. இப்பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமான வல்லமை நம் அறிவுக்கு எட்டாத ஒன்றாக

இருப்பதாலும், இயற்கை விதிக்கு எதிரான ஒன்றாக இருப்பதாலும் அது தெய்வீகத்தின் விளைவாகத்தான் இருக்க முடியும். அப்போஸ்தலர் 17:29 ல் அப்போஸ்தலனாகிய பவுல் அந்த மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் தெய்வம் என்னும் வார்த்தையைப் பயன்படுத்துயிருக்கிறார். அவ்வார்த்தை, ஒன்றான மெய் தேவனைத்தான் குறிக்கிறது. கொலோசெயர் 2:9 ல் அப்போஸ்தலனாகிய பவுல் தேவத்துவம் என்னும் வார்த்தையை கொலோசெயருக்குப் பயன்படுத்தி யிருக்கிறார். இதே நிருபத்தில் பவுல் தெய்வீகத் தன்மை, தெய்வீகத்தின் ஆள்த்துவம் தெய்வீகத்தின் நிலை போன்றவைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுலால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற வசனப்பகுதிகள் தேவத்துவத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தவில்லை. இது போன்ற வெளிப்பாடுகள் வேதாகமம் முழுவதும் வேறுசில இடங்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**ஒரே தேவத்துவம்: மூன்று நபர்**

தேவத்துவத்தின் பன்மைத் தன்மையைப் பற்றி ஏராளமான வசனப்பகுதிகள் பேசுகிறபடியால் அதைக்குறித்து யாராவது சந்தேகப்பட்டால் அது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. உதாரணமாக, பல வசனப்பகுதிகள் தேவனை பரலோகத்லிருப்பவராகவும், இயேசு கிறிஸ்துவை பூமியில் இருப்பவராகவும் காட்டுகின்றன (மத். 5 : 16, 45, 48 ; 6 : 1, 9, 14, 26, 32 ; 7 : 11, 21 ; 10 : 32,33; 12 : 50 ; 15 : 13 ; 16 : 17 ; 18 : 10, 14, 19, 35 ; 23 : 9 ; மாற்கு 11 : 25, 26 ; லூக்கா 11 : 2 ). இயேசு கிறிஸ்து இப்பூமிக்குரிய ஊழியத்தின்போது மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத் திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் என்று சொன்னார் ( மத். 10 : 32, 33 ).

மேலும், பரமப்பிதா ஒரு நபருடைய குணாதிசயங்களைப் பெற்றிருப்பதாக நாம் பார்க்கிறோம். அவர் சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுப்பித் தருகிறார் (மத். 5 : 45; எபே. 1 : 3). அவர் ஒழுக்க நெறிகளின் தன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளார் (மத். 5 : 48). அவர் பலனளிக்க வல்லவர் (மத். 6 : 1, 4). நம் பரம தகப்பனால் காண முடியும் (மத். 6 : 6, 8, 18 ; லூக்கா 12 : 30 ). அவர் மன்னிக்கிறார் ( மத். 6 : 15 ). அவரால் காரியங்களை மறைக்க முடியும் ( மத். 11 : 25 ). அவருக்கு தனி சித்தமும், அதிகாரமும் உண்டு (மத் 12 : 50; லூக்கா. 11 : 2; யோவான் 5 : 30). பிதாவாகிய தேவன் ராஜ்யத்தைப் பெற்றிருக்கிருக்கிறார் (மத். 13 : 43). அவருக்கு மகிமை யுண்டு ( மத் 16 : 27 ; மாற்கு. 8 : 38 ; யோவான் 1 : 14 ). அவர் ஜெபத்தைக் கேட்கிறவராக இருக்கிறார் (மத். 26 : 39, 42, 53 ; லூக்கா 11 : 2 ; 23 : 34, 46 ;

யோவான் 11 :41;12:28). அவர் இரக்கமுள்ளவராயிருக்கிறார் (லூக்கா 6 : 36). அவர் விடுவிக்கிறவராகவும், ஏற்படுத்துகிறவராகவும் இருக்கிறார் ( லூக்கா 6 : 36). ஆவியை ஏற்பவராகவும், வாக்குத்தத்தம் செய்கிறவராகவும் இருக்கிறார் ( லூக்கா 23 : 46 ; 24 ; 49; அப்.1: 4 ).

மேலும், பிதாவாகிய தேவன் மடியை உடையவராக குறிப்பிடப் பட்டிருக்கிறார் ( யோவான் 1 : 18). நேசிக்கிறார் (யோவான் 3 : 35 ; 5 : 20 ; 10 : 17 ; 14 : 23 ; 16 : 27). அவர் ஆராதிக்கப்படத்தக்கவர் ( யோவான் 4 : 23). அவர் கிரியை செய்கிறார் ( யோவான் 5:17,19,20,37 ). அவர் ஜீவனுடையவரா யிருக்கிறார் (யோவான் 5 : 26). அவர் கொடுக்கிறார் ( யோவான் 6 : 32, 37 ; 12 : 49 ; 18 : 11 ) அவர் போதிக்கிறார் (யோவான் 8 : 28). அவர் கைகளை உடைய வராக இருக்கிறார் அல்லது அப்படி விவரிக்கப்பட்டிருக்கிறார் (யோவான் 16 : 29 ). பிதாவுக்கு குமாரன் இருக்கிறார், குமாரர்களும் இருக்கிறார்கள் (மத் 8 : 29 ; லூக்கா 1 : 32 ; 4 : 41; 22 : 70 ; யோவான் 3 : 16 ; 10 : 36 ; அப். 3 : 13 ; ரோமர். 1: 3 ; வெளி. 1 : 6 ; 15 : 15 ; கிறிஸ்து பேசின வார்த்தைகளைக் கொடுத்தவர் தேவ னே (யோவான் 12 : 50 ; 15 : 15). மேற் சொல்லப்பட்டவைகளெல்லாம் பிதாவின் ஆள்த்துவத்தை உறுதி செய்கிறது.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபருடைய குணாதிசயங்களைப் பெற்றி ருக்கிறார். ஆவியானவர் இறங்குகிறார் (மத். 3 : 16). வழி நடத்துகிறார் (மத். 4 : 1 ; ரோமர் 8 : 14 ; கலா. 5 : 18) பேசுகிறார் (மத். 10 : 20; யோவான் 16 : 13; அப். 1: 16 ; 8 : 29 ; 10 : 19 ; 13 : 2 ; 21 : 11 ; I தீமோ. 4 : 1; எபிரெயர் 3 :7 ; வெளி. 2 : 11; 14 : 13 ; 22 : 17). பரிசுத்த ஆவியானவர் தூஷணத்திற்கு உட்பட்டவர் (மத். 12 : 31). அவர் காரியங்களை வெளிபடுத்துகிறார் ( லூக்கா. 2 : 26 ; I கொரி 2 : 10) பரிசுத்த ஆவியாவனவர் ரூபங்கொள்கிறார் (லூக்கா 3 : 22) அவர் போதிக்கி றார் (லூக்கா 12 : 12; யோவான் 14 : 26; I கொரி. 2 : 13) தேற்றுகிறார் (யோவான் 14 : 16 ; அப். 9 : 31). வாசம் செய்கிறார் ( யோவான் 14 : 17 ; ரோமர் 8 : 9,11 ; I கொரி. 3 : 16 ; 6 : 19 ; II தீமோ. 1 : 14). அவர் சாட்சி கொடுக்கிறார் (அப். 5 : 32). அவருக்கு எதிர்த்து நிற்க முடியும் (அப். 7 : 51 ). அவர் அனுப்புகிறார் (அப். 13 : 4) அவர் தடை செய்கிறார் (அப். 16 : 6, 7). அவர் நியமிக்கிறார் (அப். 20 : 28) அவர் பரிந்து பேசுகிறார் (ரோமர் 8 : 26). அவர் ஆராய்கிறார் (I கொரி 2 : 10). அவர் நீதிமானாக்குகிறார் (I கொரி. 6 : 11). அவர் ஈவுகளைக் கொடுக்கிறார் (I கொரி. 12 : 8, 9 ). அவர் எழுதுகிறார் ( II கொரி. 3 : 3 ) அவரைத் துக்கப் படுத்தமுடியும் (எபே. 4 : 30). அவரோடு ஐக்கியங்கொள்ள முடியும் (பிலி. 2 : 1). அவர் பரிசுத்தமாக்குகிறார் ( II தெச. 2 : 13 ). அவர் தெரியப்படுத்துகிறார் ( எபி. 9 : 8 ).

சிருஷ்டிப்பில், தேவத்துவத்திலுள்ள நபர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்திருப்பதை வேதவாக்கியங்கள் உறுதிசெய்கின்றன (எபே.3 : 9) பின்பு தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியும் மனுஷனை உண்டாக்கு வோமாக என்று சொன்னார் ( ஆதி. 1 : 26 ). வேறு சில வேத வாக்கியங்கள் தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்களும் சிருஷ்டிப்பில் பங்கெடுத்ததைக் குறிக் கின்றன ( லூக்கா 1 : 35 ; யோவான் 14 : 26 ; அப்.2 : 33; 10 : 38 ; ரோமர் 15 : 16, 30 ; II கொரி. 13 : 14; எபே. 4 : 4 - 6; எபி. 9 : 14; I பேதுரு 3 : 18 ; I யோவான் 5 : 7). ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து ( மத். 28 : 19 ) என்றுள்ளது. இவ்வசனத்தில் தேவத்துவத்தின் பன்மைத் தன்மை மாத்திரம் நிரூபிக்கபடவில்லை, மாறாக, எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, மூன்று பேர்களும் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள்.

இன்னும் பல வசனப்பகுதிகள் பிதாவை, குமாரனை மற்றும் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகின்றன ( லூக்கா 11 : 13 ; ரோமர் 15 : 30 ; I கொரி 12 : 3 ; எபே. 2 : 22 ). மேலும், சில வசனப் பகுதிகளில் பிதாவும், குமாரனும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (மாற்கு 5 : 7 ; யோவான் 5: 18, 22, 23 ; 6 : 46 ; 10 : 32 ; 11 : 41 ; 12 : 26 ; 28, 13 : 13 ; 14 : 21, 23 , 28 , 31 ; 15 : 1 ; 16 : 10, 28 ; 20 : 17 ; ரோமர் 15 : 16; I கொரி. 1 : 3 ; II கொரி. 1 : 2, 3; கலா. 1 : 3 ; எபே. 6 : 23 ; பிலிப். 1 : 2; கொலோ 1 : 2, 3 ; 2 : 2 ; 3 : 17; I பேதுரு 1 : 2, 3 ; I யோவான் 1 : 3 ; வெளி. 3 : 5 ). இவ்வசனப் பகுதிகள் தேவத்துவத்திலுள்ள நபர்களின் பன்மைத் தன்மைக்கு சாட்சி கொடுக்கின்றன.

பிதாவாகிய தேவன், இயேசு கிறிஸ்து உட்பட மரித்தோரை உயிரோடு எழுப்பினார் (யோவான் 5 : 21 ; அப். 2 : 24, 32 ; 4 : 10 ; 5 : 30 ; 10 : 40 ; 13 : 33 ; ரோமர் 6 : 4 ; 10 : 9 ; I கொரி. 15 : 15 ; கொலோ 2 : 12). இதுவும் கூட தேவத்து வத்திலுள்ள நபர்களின் பன்மைத் தன்மையை உறுதி செய்கின்றன. மேலும், பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை அனுப்பினார் என்று அறிவிக்கும் வேதவசனப் பகுதிகள் தேவத்துவத்தில் பன்மைத் தன்மையை வெளியரங்கப்படுத்து கின்றன. (யோவான் 15 : 36, 37 ; 6 : 44, 57 ; 8 : 16, 29, 42 ; 10 : 36 ; 12 : 49 ; 1 : 3 ; 17 : 3 ; 20 : 21; ரோமர் 8 : 3 ; கலா. 4 : 4 ; I யோவான் 4 : 9).

தேவத்துவத்தில் பிதா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறவர் தேவனாக இருக் கிறார். வேதத்தில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அவர், பிதாவாகிய தேவனாக அழைக்கப்படுகிறார் (யோவான் 6 : 27,45; கலா. 1 : 1, 3 ; எபே. 1 : 17 ; 6 : 23 ; பிலி. 1 : 2 ; I தெச. 1 : 1; II தெச. 1 : 1 - 2 ; I தீமோ. 1 : 2 ; II தீமோ. 1 : 2 ; தீத்து 1 : 4 ; II பேதுரு 1 : 17 ; II யோவான் 3 ; யூதா 1).

மேலும், வேதாகமம் இயேசு கிறிஸ்து தேவன் என்று போதிக்கிறது (மத். 1 : 23, I தீமோ 3 :16). தேவத்துவத்திலுள்ள நபர்களில் பன்மை காணப்படுவது மாத்திரமல்ல மூவருமே தெய்வீகத் தன்மை உடையவர்கள்.

இயேசு கிறிஸ்து மாத்திரமே தேவத்துவத்தில் ஒரு நபர் அல்ல என்று போதிக்கும் வசனப்பகுதிகள் உள்ளன (மத். 27 : 46 ; யோவான் 8 : 16, 18, 28 29, 38, 54 ; 14: 1, 28 ; 16 : 23, 27, 32 ; 17 : 3 ; 20 : 17 ; அப். 2 : 33; 7 : 55 ;10 : 38 – 40 ; ரோமர் 8 : 17, 34 ; I கொரி. 8 : 6 ; 15 : 24, 2 ; எபே. 4 : 4 – 6 ; பிலி. 2 : 6 ; கொலோ. 1 : 5 ; I தீமோ. 2 : 5 ; I பேதுரு 3 : 22 ; II யோவான் 9 – 11). உண்மையைச் சொல்லப்போனால் அல்லது நடைமுறையில் பார்த்தால் வேதாகமம் தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்களையும் ஆரவாரத்தோடு ஆமோதிக்கிறது.

இருந்தபோதிலும், தேவத்துவத்திலுள்ள நபர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமை அவர்களுடைய பன்மைத் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பதில்லை. இது ஒருவர், கிறிஸ்தவர்கள் தேவனில் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் கிறிஸ்தவர்களில் ஒன்றாயிருக்கிறார் என்பதைக் குறித்துச் சிந்திக்கும்போது வெளிப்படையாகத் தெரிகிறது. இருந்தபோதிலும், இச்சூழ்நிலைகளிலும் நம்மிடம் ஆள்தத்துவம் கேள்விகேட்கப்படுவதில்லை (யோவான் 14 : 20 ; 17 : 11, 21 –24 ; I கொரி. 8 : 6 ; வெளி. 3 : 22). கடைசியாக, தேவத்துவத்தின் நபர்களில் எண்ணிக்கை பன்மையில் இருக்கிறதென்பதை இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தில் காணமுடியும் ( மத். 27 : 46 ; யோவான் 15 : 16 ; ரோமர் 1 : 8 ; 7 : 25 ; எபே. 5 : 20 ; கொலோ. 3 : 17 ).

**தேவத்துவத்தின் தன்மை:**

எது தேவத்துவத்தின் தன்மை அல்ல? நாம் உணர்வுகளின் அடிப்படையில் முடிவெடுக்காமலும், பட்சபாதமில்லாமல் மத உலகை அலசி ஆராய்ந்தால், இவ்வுலகின் பல நாடுகளில் விக்கிரக ஆராதனை தலைவிரித்தாடுகிறது என்றே முடிவுக்கு வருவோம். மார்க்கப் பிரிவினைக் கூட்டமும் தேவனுக்கு வித்தியாசமான குணாதிசியங்களைக் கொடுத்து, அவர் எப்படியாக ஆராதிக்கப்படவேண்டுமென்பது உட்பட, பல வித்தியாசமான சட்டங்களை அவருக்காக இயற்றுகிறார்கள். பரலோகம், நரகம் போன்றவைகளைப்பற்றிய உபதேசம் கூட பிரிவுக்குப் பிரிவு மாறுபடுகிறது. மத சமுதாயம் முழுவதிலும் தேவத்துவத்தில் ஒட்டுமொத்த தன்மை விவாதிக்கப்படுகிறது. அடிப்படையாக ஒவ்வொரு மதகுழுவும் தனக்கென்று தனியாக, தேவனையும், பரலோகத்தையும், நரகத்தையும், தனித்தனியே கொள்கையையும் கொண்டிருக்கின்றன. இருந்த

போதிலும் இதில் ஆச்சரியம் என்னவென்றால், பல கடவுளைப் பின்பற்றுகிறவர்கள், தாங்களும் வேதாகமத்தின் தேவனாகிய மெய் தேவனைத்தான் தொழுதுகொள்கிறோம் என்று சொல்லும் தைரியம் அவர்களுக்கு இருப்பது தான்.

வேதத்தில் நாம் வாசிக்கிற விக்கிரகங்கள் எல்லாம் உயிரற்ற மரப்பலகை மற்றும் உருக்கிய உலோகங்களைக் கொண்டு மனிதனால் உண்டாக்கப் பட்டவைகளாகும் (ஏசாயா 44 : 9-20; ஆபகூக் 2 : 18, 19); தற்கால மனிதன் தன் கற்பனைத் திறனிலிருந்து விக்கிரகங்களை உருவாக்கியிருக்கிறான். இந்த விக்கிரக தெய்வங்களின் அதிகாரமும், ஆதிக்கமும் ஆலோசனைச் சங்கங்கள் மற்றும் சினாட்கள் போன்றவைகளைத் தழுவியிருக்கிற கொள்கைகளிலிருந்து ஊற்றெடுத்து வருகிறது. தேவனோடு நடக்க மறுக்கிறவர்களோடு தேவனும் நடக்க மறுக்கிறார் ( ஆமோஸ் 3 : 3 ). யூதாவும், இஸ்ரவேலும் விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டபோது தேவன் அவர்களோடு நடக்காததுபோல, இந்த நவீன விக்கிரக ஆராதனைக்காரர்களோடும் தேவன் நடக்கமாட்டார்.

வேதாகமத்தின் தேவன் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தின் தேவனல்ல! கிறிஸ்தவர்கள், தேவத்துவத்தின் தனித்தன்மையை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். ஒன்றான மெய் தேவனைப் பற்றிய ஒருவருடைய அறிவை மறைக்க எதையும் அனுமதிக்கக்கூடாது (எபே. 4 : 4 - 6). மார்க்கப் பிரிவினை என்பது மனித வரலாறு முழுவதிலும் தேவனுடைய பிள்ளைகளையும், புறஜாதி மக்களையும் அலைக்கழித்த விக்கரக ஆராதனைக்கு இணையானதாகும். தேவன் விக்கிரக ஆராதனையை, ஆவிக்குரிய வேசித்தனமாகத்தான் பார்க்கிறார் (எரே. 3 : 2, 6 ; எசே. 6 : 9). மனிதன் ஒருபோதும் மத வியாபார மையத்தின் வாடிக்கையாளராக உபதேசிக்கப்படவில்லை. சபை, நம்பிக்கை, இரட்சிப்பு ஆராதனை போன்றவைகள் தேவனால் கொடுக்கப்பட்ட மார்க்கத்தில் மனிதனுடைய தெரிந்து கொள்ளுதலாயிருக்கவில்லை.

நமக்கு ஒரே ஒரு தேவன் தான் உண்டு. அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அந்தத் தேவன் பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார் (அப். 17 : 28, 31). அப்போஸ்தலனாகிய பவுல் எப்படி மிகுந்த தைரியத் தோடே ஜீவனுள்ள மெய் தேவனை அந்த அத்தேனே பட்டணத்தாருக்கு அறிவித்தாரோ, நாமும், அதே தைரியத்தோடே அதே சர்வ வல்ல தேவனை இவ்வுலகிற்கு அறிவித்து வீணாண விக்கிரகங்களிடமிருந்து நம்மையும், அவர்களையும் விலக்கிக் காத்துக்கொள்வோம் ( I யோவான் 5 : 21 ).

### தேவத்துவத்தின் தன்மை: அப்படியென்றால் என்ன?

தேவத்துவம் என்னும் தலைப்பைக் குறித்து ஏராளமான விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. எனவே, அவ்விளக்க உரைகளை மிஞ்சி, ஒரு ஆய்வுக்கட்டுரையை எழுத வேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல. இருந்த போதிலும், விளக்க வரம்புக்குட்பட்டு புதிய ஏற்பாட்டு சபை தேவத்துவத்தின்தெய்வீகத் தன்மையைக் கொண்டுள்ளது என்பதை உறுதி செய்வதே எங்கள் நோக்கமாயிருக்கிறது. வேறு விதமாகச் சொன்னால், தேவனைப் பற்றியும், நித்தியத்தைப் பற்றியும் வேதாகமம் எவைகளைப் போதிக்கிறதோ அவைகளை மாத்திரமே கர்த்தருடைய சபை நம்பும். வேதாகமம் தேவனைப் பற்றி ஒரேவிதமான சத்தியங்களைத் தொடர்ந்து பேசி வருகிறது. எனவே, தேவத்துவம் துல்லியமான தெய்வீகக் குணாதிசயங்களைக் கொண்டுள்ளது.

தேவத்துவத்தின் பண்பு மாறாததாயிருக்கிறது (எபி. 13 : 8). "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில், யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" ( யாக். 1 : 17 ).இவ்வசனம் தேவத்துவத்தின் தன்மையை சுருக்கமாகச் சொல்லுகிறது. தேவத்துவம் முடி வில்லா நீதியை உடையதாயிருக்கிறது (சங். 145 : 17). ஆனால், இது எல்லை யில்லா அன்பு மற்றும் இரக்கத்தின் கலவையாயிருக்கிறது. (எபே - 2; 4 - 5) தேவன் அன்புள்ளவராகவும், பட்சபாதமில்லாதவராகவும் இருக்கிறார். (அப்.10 : 34 ; ரோமர் 2 : 11). அவர் எரிச்சலுள்ள தேவனும், கீழ்ப்படியாத ஆத்துமாக் களைத் தண்டிக்க ஆயத்தமாகவும் இருக்கிறார். (ரோமர் 1 : 8 ; எபே. 5 : 6). உண் மையுள்ளவர்கள் ஒருநாளில் பிரவேசிக்கத்தக்க பரலோகம் உண்டு (மத். 25 : 34 , 46 ). அதே நேரத்தில் துன்மார்க்கரெல்லாம் நரகத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் (மத். 24 : 41, 46). தேவத்துவம் மனிதனுக்கு தேவனுடைய சித்தத்தைக் கொடுத்திருக்கிறது (II தீமோ. 3 : 16, 17 ; II பேதுரு 1 : 3 ). அச்சித்தத்தின்படி நாம் நடக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் (மத். 7 : 21 - 23) தேவனுடைய சித்தத்தின்படிதான் ஒட்டுமொத்த மனித இனமும் ஒரு நாளில் நியாயந்தீர்க்கப்படுவோம் (வெளி. 20 : 12 - 15).

### முடிவுரை:

புதிய ஏற்பாட்டு சபை தேவத்துவத்தைப் பற்றியும், தேவனைப் பற்றியும் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற குணாதிசயங்களையும் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கிறது. எனவே தான், கர்த்தருடைய சபை தேவத்துவம் ஒரே துல்லியமான தெய்வீகப் பண்புகளை உடைய மூன்று தெய்வீக நபர்களை

உள்ளடக்கியது என்று போதிக்கிறது. தேவத்துவம் [ " Theos " ] என்னும் கிரேக்க வார்த்தைக்கு தெய்வீகத் தன்மை அல்லது தேவனாயிருப்பதற்கான பண்பு என்று பொருள். மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார் தேவனுடைய தன்மையைப் பற்றி மாறுபட்ட அல்லது முரண்பட்ட கோணத்தில் காட்டினாலும் கூட வேதாகமம், தேவன் மாறாதவர் என்றும், தனித்துவம் வாய்ந்த தெய்வீகக் குணாதிசயங்களை உடையவர் என்றும் தொடர்ந்து ஒரே மாதிரியாகப் பேசி வருகிறது. கடைசியாக, நாமெல்லாரும் ஒவ்வொரு நிமிடமும், நித்தியத்தை நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். நம்முடைய கடைசி வாசஸ்தலம் பரலோகமாயிருக்குமா? அல்லது நரகமாயிருக்குமா? என்னும் கேள்விதான் நமக்குள் கேட்கப்படவேண்டிய கேள்வியாயிருக்கிறது.

## தெய்வீக ஐக்கியம்




தேவனோடும்,
மனிதனோடும்
ஐக்கியம்
I யோ.1:3

தேவனுக்கும்,
கிறிஸ்தவர்களுக்கும்
வெளியே ஐக்கியம்
எபே.5:11




நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறேன், எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது (I யோவான் 1:3)

# புதிய ஏற்பாட்டு சபை ஐக்கியத்தில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது

**தே**வனுடைய ஜனங்கள் விரும்புகிற ஐக்கியம் வேதாகமத்தை அடிப்படை யாகக் கொண்ட ஐக்கியத்தை உடையாதாகத் தான் இருக்க வேண்டும். மேலும், வேதாகமத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய ஐக்கியத்தின் பொருள்தான் தேவனால் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு பொருளாக இருக்கிறது. இந்த ஐக்கியத்திற்கு மட்டுமே நீயாயத்தீர்ப்பில் பொருள் இருக்கும். எனவே, மனிதனை இப்போது தவறான பாதையில் வழிநடத்தி, நித்தியத்தில் நிச்சயமாக அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற போலியான ஐக்கிய விளக்கத்திற்கு நாம் ஆதரவு கொடுக்காமல் இருக்க வேண்டும். அதை நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டும். அப்படித்தானே?

வேதவசனங்கள் (புதிய ஏற்பாடு அல்லது சுவிசேஷம்) தெளிவாக வேதாகம ஐக்கியத்திற்கு விளக்கம் கொடுக்கிறதா? அப்படி வேதாகம விளக்கம் உண்டென்றால், அந்த ஐக்கியத்தை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப் படுத்துவது அவசியமா? ஒருவர் யாரோடு ஐக்கியம் கொள்ளலாம்? அது எந்த நிபந்தனையின் கீழ்? ( அல்லது ஏதாவது நிபந்தனைகள் இருக்கிறதா? ). தேவனுடைய பிள்ளைகள் யாரோடாவது ஐக்கியம் கொள்ளமாலிருக்கத் தடை செய்யப்பட்டிருக்கிறார்களா? ஐக்கியம் என்னும் வேதாகம உபதேசத்திற்கென்று ஏராளமான புத்தகங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. எனவே, கீழ்க்காணும் தகவல்கள் வெளிப்படையாகவே இது பற்றிய சுருக்கமான கருத்துக்கள்தான்.

வேதாகம ஐக்கியம் தேவனோடு ஏற்படுத்தப்பட்டு, அவரோடு நீடித்திருக்க வேண்டும். அதேபோலவே, தேவனோடு ஐக்கியங்கொள்ளுகிறவர்களிடத்திலும் வேதாகம ஐக்கியத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். நீங்களும் எங்க ளாடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவரு டைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது (I யோவான் 1: 3).

மேலும், வேதாகம அடிப்படையிலான ஐக்கியத்திற்கு மறுவிளக்கம் கொடுப்பதற்கோ அல்லது வேதாகம விளக்கத்திற்கு அப்பால் வெளியே நீட்டிப்பதற்கோ மனிதனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒருவர் தேவனோடு எந்த அளவுக்குப் பரிச்சயம் கொண்டிருக்கிறார் என்பதும், ஐக்கியம் கொண்டிருக்கிறார் என்பதும் தேவனுடைய எதிர்பார்ப்பை எந்த அளவுக்கு புரிந்துவைத்திருக்கிறார் என்பதும், அவர் எந்த அளவுக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்ளுகிறார் என்பதை அடிப்படையாக வைத்தே அமையும். ஆலோசனையைப் பின்தொடர்ந்து வருவதுதான் கைக்கொள்ளுதல். தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆலோசனைகளைப் பெற்று அதன்படி செய்யும் போது உண்மைத்தன்மை நிலைத்தோங்கி தேவனோடு என்றென்றும் வாசம் செய்ய வழிவகுக்கிறது. வேதாகம உபதேசத்தின்படி நடப்பது தேவனோடும், தேவனோடு ஐக்கியம் கொள்ளுகிறவர்களோடும் ஐக்கியம் கொள்ள வழிவகுக்கிறது. அது வேதாகம ஒற்றுமைக்கும் வழி வகுக்கிறது. வேதாகம உபதேசம், உண்மையான ஐக்கியம் மற்றும் உண்மையான ஒற்றுமை போன்றவைகள் பிரிக்க முடியாதவைகள்.

**வேதாகம ஐக்கியம் அவசியமாயிருக்கிறது**

தேவ ஆவியினால் ஏவப்பட்ட கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களால் வழி நடத்தப்பட்ட ஆதித்திருச்சபை தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசத்தைப் பின்பற்றி, தேவனோடும், மற்றவர்களோடும் ஐக்கியத்தை நடைமுறைப்படுத்தியது (அப். 2 : 42). ஆம், இது நாம் ஆசைப்படுகிற ஒன்றாக மாத்திரமல்லாமல், புதிய ஏற்பாட்டு சபை அது எந்த நூற்றாண்டில் இருந்தாலும் வேதாகம ஐக்கியத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதைச் செய்யலாம், செய்யாமலிருக்கலாம் போன்றதல்ல. மாறாக , இது செய்தே ஆக வேண்டிய கடமையாயிருக்கிறது. தேவன் தம்முடைய சிருஷ்டியிடமிருந்து எவைகளை எதிர்பார்க்கிறாரோ அவைகளெல்லாம் சாத்தியமானவைகளே. புதிய ஏற்பாடு வேதாகம ஐக்கியத்தை மிக விவரமாக விவரிக்கிறது. அதை நாம் புரிந்து கொள்ள முடியும். மேலும், இந்த ஐக்கியத்தை அப்படியே நடைமுறைப் படுத்தவும் முடியும்.

சுவிசேஷ உபதேசத்தை மாற்ற நினைக்கும் எந்த முயற்சியும் உண்மையான ஐக்கியத்திலிருந்து மாறும். தவறான செயல்பாடு தேவனுடனான ஐக்கியத்திலும், தேவனுடன் ஐக்கியம் வைத்திருப்பவர்களுடனான ஐக்கியத்திலும் விரிசல் ஏற்பட வழிவகுக்கிறது. (கலா. 1 : 6 - 9 ; I யோவான் 1 : 6, 7 ; II யோவான் 9 - 11). வேதாகம ஐக்கியத்திற்கு ஒரே ஆதாரம் வேதாகம உபதேசத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது தான். ஐக்கியம் என்பது வெறுமனே வேதாகமப் பாடங்களை

மனதில் பதியச் செய்வதல்ல. (4 : 4 – 6 ல் உள்ள ஏழுகள்) மாறாக, வேதாகமம் அவைகளைப் பற்றி என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்வதாயிருக்கிறது.

**ஐக்கியமும், சீஷத்துவமும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது.**

முதலாவது, ஐக்கியம் சீஷத்துவத்தின் நிபந்தனையாயிருக்கிறது. அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்ற சீஷர்களை நோக்கி: அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான் ( யோவான் 11 : 16 ). சுவிசேஷத்தின் ஐக்கியம் பிலிப்பி பட்டணத்து சபைக்கும், அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் இடையே பொதுவான சீஷத்துவத்துக்கு வழி வகுத்து (பிலி. 1 : 3 – 5). சீஷத்துவம் ஐக்கியத்தின் நிபந்தனையாயிருப்பதும் உண்மையாயிருக்கிறது. ஆகையால் தான், புறஜாதிகள் சீஷர்களானபோது அவர்கள் தேவனோடும், மற்ற சீஷர்களோடும் அருமையான ஐக்கியத்தை அனுபவித்தார்கள். ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து (எபே. 2:19) என்றுள்ளது. அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய் கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

ஒருவர் உண்மையான சீஷனாக அல்லது கிறிஸ்தவனாக இல்லையென்றால், தேவனோடும், தேவனோடு ஐக்கியம் கொள்ளுகிறவர்களோடும், ஐக்கியம் கொள்ள உற்சாகப்படுத்த முடியாது. இந்த ஐக்கியம் சுவிசேஷத்துடனான ஐக்கியத்தினால் விளைந்த ஐக்கியமாகும் ( பிலி.1 : 3 ). வேதாகம ஐக்கியம் முற்றிலுமாக சுவிசேஷ உபதேசத்தினால் உண்டானது தான்.

**தேவனுக்காக இணைந்து பிரயாசப்படுதல்**

இன்று ஐக்கியம் என்னும் பாடம் சகோதரர்கள் மத்தியில் இணைந்து புசிக்கும் பொதுவான போஜனம் போலாகிவிட்டது. இருந்தபோதிலும்,வேதாகம அடிப்படையில் பார்த்தால் இவ்வகையான ஐக்கியத்தைப் பற்றி சில வசனங்கள் தெளிவாகப் பேசுகின்றன. அநேகமாகப் பெரும்பாலான வசனங்கள் ஐக்கியம் என்பதை மற்றெந்தச் செயல்பாட்டையும் விட கர்த்தருக்காக இணைந்து செய்கின்ற செயலாகத்தான் காட்டுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் பவுல் தீமோத்தேயுவை தன் உடன் வேலையாள் என்று குறிப்பிடுகிறார் (ரோமர் 16 : 21) தீத்துவை உடன் வேலையாள் என்றும் குறிப்பிடுகிறார் (I தெச. 8 : 23). மேலும்,

அவர் கிலேமெந்தை தன்னோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்ட உடன் வேலையாள் என்று குறிப்பிடுகிறார் ( பிலிப். 4 : 3 ). இப்படிப்பட்ட அடை மொழியைப் பவுல் கீழ்க்கண்ட நபர்களுக்கும் பயன்படுத்தியிருக்கிறார். (I தெச. 3 : 2 ; பிலி. 1 : 1). அரிஸ்தர்க்கு, தேமா மற்றும் லூக்கா போன்றோரையும் உடன் வேலையாள் என்று பவுல் குறிப்பிடுகிறார் (பிலேமோன் 24) யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் உடன் வேலையாளாகச் சொல்லப்பட்டிருக்கிறார் (கொலோ. 4 : 11).

தேவனுக்காக இணைந்து வேலை செய்வது ஐக்கியத்தின் செயல்பாடாக இருந்தாலும் கூட அதில் ஈடுபடுபவர்கள் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாக அழைக்கப்படுகிறார்கள் ( III யோவா. 8 ). வேதவாக்கியங்கள் ஆதிக் கிறிஸ்தவர்களிடையே இருந்த ஐக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு அழைக்கிறது. எப்பாப்பிராவும், தீகிக்கும் உடன் வேலையாட்களாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ( கொலோ. 1 : 7 ; 4 : 7 ). எப்பாப்பிரோதீத்து உடன் வேலையாளாகவும் உடன் சேவகனாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறார் (பிலி. 2 : 25). சுவிசேஷ விஷயத்தில் கூட்டாகப் பிரயாசப்படும் ஒவ்வொருவருமே உத்தம கூட்டாளிகளாயிருக்கிறார்கள் (பிலி. 4 : 3).

**ஐக்கியமும், பாடுகளும்**

முதல் நூற்றாண்டில் சபைக்கெதிராக உருவான பகை உணர்வு சுவிசேஷத்தின் ஐக்கியத்தால் சிலரை உடன் காவலிருப்பவர்களாக்கியது (ரோமர் 16 : 7 ; கொலோ 4 : 10 ; பிலேமோன் 23). ஐக்கியப்பட்டவர்கள் அதை விரும்பாவிட்டாலும் கூட வேதாகம ஐக்கியத்தில் தங்களை ஈடுபடுத்தியுள்ள காரணத்தினால் பாடுகளிலும் அவர்கள் ஐக்கியப்பட்டார்கள் (பிலிப். 3 : 10).

**ஐக்கியமும், ஆராதனையும்**

வேதாகம ஐக்கியம் என்பது ஆராதனையோடு முடிந்து விடுவதில்லையென்றாலும் என்றாலும் கூட கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்போது அதை அனுபவிக்கிறார்கள். ஐக்கியம் என்பதற்கான கிரேக்க பதம் "koinonia" என்பதாகும். இவ்வார்த்தை கர்த்தருடைய பந்திக்கும் பொருந்துகிறது. நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? ( I கொரி. 10 : 16 ). நான்கு வசனங்கள் கழித்து "koinonia" என்னும் கிரேக்க வார்த்தை தேவனுக்கும் அவரை ஆராதிப்பவருக்கும் இடையேயான ஐக்கியத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ( I கொரி. 10:20).

கொடுத்தல் ஆராதனையின் மற்றொரு பங்காயிருக்கிறது. அதில் மனிதனுக்கும் தேவனுக்கும் சக கிறிஸ்தவர்களுக்குமிடையே ஐக்கியம்

நிலவுகிறது. பல வேதவாக்கியங்கள் ஐக்கியத்திற்கான கிரேக்க பதத்தை கொடுத்தலுக்காகப் பயன்படுத்துகின்றன (கலா. 6 : 6; பிலிப் 4 : 14,15; I தீமோ. 6 : 18 ; எபி.13 : 16 ) கொடுத்தல் என்பது II கொரி. 8:4 – ல் பங்காக அல்லது ஐக்கியமாக அழைக்கப்பட்டிருக்கிறது.

**ஐக்கியம் கொள்ளுதலும், ஐக்கியம் கொள்ளாமலிருத்தலும்**

தேவனுடைய பிள்ளைகள் சிலரோடு வேதாகம ரீதியான ஐக்கியம் கொள்ள தடைசெய்யப்பட்டிருக்கிறார்கள். இது இரண்டு வேத வசனப்பகுதிகளிலிருந்து தெளிவாகிறது. **அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்பீர்களாக; நீதிக்கும்,அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கிய மேது? கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?** ( II கொரி. 6 : 14 ) **கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்** (எபே. 5 :11).

II கொரி. 6 : 14 ல் இடம்பெற்றுள்ள " ஐக்கியம் " என்னும் பதம் பல ஆழமான கருத்துகளைக் கொண்டுவருகிறது. இவ்வசனத்தில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு பதில் இவ்வசனத்திலேயே உள்ளது. இக்கேள்விக்கான பதில் " ஒன்றுமில்லை " என்பதுதான். மேலும், இவ்வசனம் சத்தியத்தின்படி நடக்கிற வர்களுக்கும், சத்தியத்திற்க்கு எதிர்த்து நிற்கிறவர்களுக்குமிடையே உண்மை யான ஐக்கியம் இருக்க முடியாது என்று வலியுறுத்திக் கூறுகிறது. அது மாத்திர மல்ல, பாவிகளோடு இணக்கமான ஐக்கியம்கொள்ளும்போது அது பரிசுத்த வான்கள் கெட்டுப்போவற்கு வழிவகுத்துவிடும் (I கொரி. 15 : 33).


கிறிஸ்தவ ஐக்கியம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஐக்கியம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது (I கொரி. 1 : 9). மேலும், இது ஆவியின் ஐக்கியம் (பிலி. 2 : 1), பிதாவுடனான ஐக்கியம் ( I யோவான் 1 : 3 ). ஒருவரோடொருவர் கொண்டிருக்கும் ஐக்கியம் (I யோவான் 1 : 7) என்றும் விவரிக்கப்படிருக்கிறது. வேதாகம ஐக்கியம் சத்தியத்தின்படியும், ஒளியிலும் நடக்கிறவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது (I யோவான் 1 : 6 ,7). இந்த ஆத்துமாக்கள் தான் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் சுத்திகரிப்பின் வல்லமையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

**முடிவுரை:**

போலியான ஐக்கியம் நித்தியத்தில் எவ்வித ஆறுதலையும் கொடுக்கிறது. எனவே, வேதாகம ஐக்கியத்தைத் தெரிந்துகொள்வது நமக்கு ஏற்றதா யிருக்கிறது. வேதாகம ஐக்கியத்தைப் பற்றி நாம் குழப்பத்தில் விடப்படவில்லை.

ஏனென்றால், வேதாகமம் அதைப் பற்றி விவரமாக விளக்குகிறது. வேதாகம ஐக்கியத்தை தேவனோடும்,தேவனோடு ஐக்கியம் கொள்ளுகிறவர்களோடும் நாம் வெளிப்படுத்த வேண்டும். வேதாகம உபதேசம் உண்மையான ஐக்கியம் மற்றும் உண்மையான ஒற்றுமை இவை எல்லாம் பிரிக்க முடியாதவைகள். ஐக்கியத்திற்கான புதிய விளக்கங்களெல்லாம் வேதத்தில் சொல்லப்பட்டிருப் பவைகளை விட அதிகமானதும், அது கேடான உபதேமாகவும் இருந்து ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் கறைபடுத்துகிறது.

மேலும், தேவன் அங்கீகரிக்கும் ஐக்கியத்தை நாம் நடைமுறைப் படுத்தலாம், நடைமுறைப்படுத்தாமலும் இருக்கலாம் போன்றதல்ல. மாறாக, அதை நாம் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஐக்கியத்திற்கு, வேதாகமம் கொடுக்கும் விளக்கத்திற்கு அப்பால் வேறு எதையாவது சிந்திப்பது தேவ பிள்ளைகளுக்கத் தூரமாயிருப்பதாக. ஏனென்றால், அப்படி சிந்தித்தால் அது உண்மையான ஐக்கியத்தில் பிளவை ஏற்படுத்திவிடும். ஐக்கியத்தின் எல்லை தேவனோடு ஐக்கியங்கொள்ளுகி றவர்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவை உள்ளடக்கியதாக இருக்கிறது. மற்ற ஐக்கியமெல்லாம் இந்த அருமையான உறவிலிருந்து நீக்கப்படுகிறது. ஐக்கியம் என்பது சீஷத்துவத்தின் நிலையைப் போன்றது. ஏனென்றால், சீஷத்துவம் ஐக்கியத்தின் நிலையைப் போன்றது தான். உண்மையான ஐக்கியம் வேதாகம உபதேசத்தை நடைமுறைப்படுத்துவதில் வளர்ச்சி அடைவதாகும். உண்மையான ஐக்கியம் சுவிசேஷத்தில் பிரசங்கிக்கப்படுவதன் மூலமாகவும், தேவனுடைய பிள்ளைகளோடு பாடுபடுவதன் மூலமாகவும், ஆராதனையின் மூலமாகவும் உண்டாகிறது.




பரிசுத்த ஆவியானவரின் இடைப்பாட்டின் சுருக்கமான வரலாறு

# புதிய ஏற்பாட்டு சபை ஆவியில் தெய்வீகத் தன்மை கொண்டுள்ளது

இன்றைய நாட்களில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும், கிறிஸ்தவத்தில் அவருடைய பங்கு பற்றியும் சமகால மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களின் செய்தித் தொடர்பாளர்கள் வெளிப்படையாகவே தாங்கள் பரிசுத்த ஆவியானவராலே வழிநடத்தப்படுவதாகச் சொல்லிக்கொண்டு, பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வித்தியாசமான முரண்பட்ட உபதேசங்களைப் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிப்படையாகவே, தேவ ஆவியானவர் இந்த முரண்பாடுகளுக்கு காரணர் அல்ல. ஆயினும், வேதாகமம் குறிப்பாக புதிய ஏற்பாடு, பரிசுத்த ஆவியானவர் சம்பந்தமாகவும், கர்த்தருடைய சபைக்கும், அவருக்கும் உள்ள உறவு பற்றியும் என்ன பதிவு செய்திருக்கிறது? மேலும், முதல் நூற்றாண்டு சபையில் பரிசுத்த ஆவியானவரின் பங்குக்கும், இன்றைய நாட்களில் உள்ள சபையின் பரிசுத்த ஆவியானவரின் பங்குக்கும் உள்ள வித்தியாசம் என்ன? பரிசுத்த ஆவி ஞானஸ்நானத்தின் எல்லை என்ன? அப்போஸ்தலரல்லாதவர்கள் எப்படி அற்புதங்களைச் செய்தார்கள்? கடைசியாக, அற்புதங்களின் நோக்கமும் கால அளவும் என்ன? இக்கேள்விகள் பரிசுத்த ஆவியானவரின் பணிக்கும், அற்புதங்களுக்குமிடையே தொடர்பு இருப்பதைத் தெரிவிக்கின்றன.

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் ஆரம்ப வசனங்களிலேயே அறிமுகமாகிறார் (ஆதி. 1 : 2). ஆயினும், பரிசுத்த ஆவியானவர் எப்போதுமே மனிதன் உட்பட எந்த சிருஷ்டியோடும் நேரடியாக இடைபடவில்லை. பழைய ஏற்பாடு முடிந்து சில நூற்றாண்டுகள் வரை அதாவது, யோவான் ஸ்நானகன் மற்றும் மேசியாவாகிய கிறிஸ்துவின் பிறப்பு அறிவிக்கப்படும் வரை (லூக்கா 1 : 5 - 17, 26 - 33) பரிசுத்த ஆவியானவர் மௌனமாக இருந்தார். சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது என்று பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இக்கால கட்டத்தில் புதிய வெளிப்படையான வெளிப்பாடுகள் எதுவுமில்லை (லூக்கா. 2:25-29).

பரிசுத்த ஆவியானவர் எப்போதுமே மனிதனோடு அற்புதமாக இடைபட வில்லை என்பது வேதாகமத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இல்லையென்றால், பரிசுத்த ஆவியானவர் இப்போதும் அவனோடு வினோதமான விதத்தில் தான் பேசுவார் என்று நினைத்துக் கொள்வான். உண்மையாகவே, 6000 வருட மனித வரலாற்றில் ஆங்காங்கே சில இடங்களில் தான் பரிசுத்த ஆவியானவர் மனிதனோடு அற்புத அடையாளங்களினால் இடைப்பட்டார் என்று வேத வாங்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட விதியினால் ( அற்புதத்தினால் ) முதல் சிருஷ்டிக்குப் பிறகு, இயற்கை விதியின்படி பலுகிப் பெருகும் முறை தொடர்ந்து இப்பூமியில் இருந்து வருகிறது. பழைய ஏற்பாடு முழுவதும் தேவன் அடிக்கடி மனித இனத்தை தெய்வீக அழைப்பினாலும், புதிய வெளிப்பாடுகளினாலும் சந்திக்கவில்லை. அதாவது, புதிய வெளிப்பாடுகள், அற்புத அடையாளங்கள் அனுதின நிகழ்வாக இருக்கவில்லை.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, தெய்வீக மௌனம் பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்குமிடையே சில நூற்றாண்டுகளாகக் காக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் பணி, முதல் நூற்றாண்டில் வெளிப்படையாகத் தெரிந்தாலும், அற்புத அடையாளங்கள் மறுபடியும் ஒழிந்துபோகும் என்று முன்னறிவிக்கப்பட்டது (I கொரி. 13 : 8-13 ; எபே. 4 : 11 -14) எனவே, பரிசுத்த ஆவியானவர் இந்நாட்களில் அற்புத அடையாளங்கள் மூலமாக நம்மோடு இடைபடுவதில்லை என்பதை நம்புவது ஒரு வேதாகம மாணவனுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்: வரையறைக்குட்பட்ட வாக்குத்தத்தம்**

யோவான் சுவிசேஷப் புத்தகம் 14 - 16 அதிகாரங்களின்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவால் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. யோவான் 14 - 16 அதிகாரங்களில் உள்ள வசனப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள கர்த்தருடைய போதனைகள் ( உதாரணமாக இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து பரிசுத்தவான்களைச் சேர்த்துக் கொள்ளுதல் (14 : 1 - 3) உண்மையான அன்பு கீழ்ப்படிதலில் வெளிப்படுகிறது (14 : 15, 21, 23, 24 ) கிறிஸ்துவின் சீஷர்கள் கனிகொடுக்க வேண்டும் ( 15 : 1 - 6 ). பொதுவாக, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துகிறது என்பது உண்மையாக இருந்தாலும் கூட, இந்தக் காரியங்களெல்லாம் சுவிசேஷ புத்தகத்தின் மற்ற இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அப்போஸ்தலர்களுக்கு மட்டும்தான் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இதை அப் : 1:4,5 ம் வசனங்கள் உறுதி

செய்கின்றன. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தோடு தொடர்புடைய ஒன்று பரிசுத்த ஆவியினால் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமைக்கு (அப். 2:1-4) வசனங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே **வாக்குத்தத்தம்** செய்யப்பட்டது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம் அப்போஸ் தலர் மாத்திரம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றதற்கு சாட்சி கொடுக் கிறது. முதல் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபையில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப்பதாயிருந்தது. மேலும், வேதாகமம் எங்குமே பரிசுத்த ஆவியானவர் ஒருவரை இரசிப்பதற்கு பொறுப்பாக இருந்தார் என்று சொல்ல வில்லை. இதை எதிர்மறையாக நம்புகிறவர்கள் தவறாகக் காரியங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் சரியான பங்கைப் பகுத்தறிய யோவான் 14 - 16 ம் அதிகாரங்களை வாசியுங்கள்.

**வேறு அற்புத வல்லமை**

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் தான் என்பதை நாம் கற்றுக்கொண்டோம். ஆனால், ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால் " **வேறுசிலரும்** " அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றிருந்தார்கள். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அப்போஸ்தலரைத் தவிர விதிவிலக்காக கொர் நெலியுவின் குடும்பத்தார் பெற்றிருந்தார்கள் (அப். அதி. 10, 12). இது ஆரம் பத்தில் புறஜாதி உலகிற்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதையொட்டி விசேஷித்த சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும், அற்புத அடையாளங்களின் வல்லமையும், யோவேல் 2 : 28, 29 வசனங் களிலுள்ள வாக்குத்தத்தமும் இடம் பெற்றுள்ளது. அதற்குப்பின்பு நான் மாம்ச மான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனச் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன் (யோவேல் 2:28, 29) என்றுள்ளது.

இவ்வசனம் நிறைவேறினவிதமும், பரிசுத்த ஆவியினால் அற்புத அடை யாளங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றவர்கள் எந்த அளவுக்கு அதைச் செய்தார்கள் என்பதைப் பற்றிய விளக்கமும் புதிய ஏற்பாட்டில் காணப் படுகின்றன. அதில் நாம் பார்க்கும்போது மற்றவர்களைவிட அப்போஸ்தலர்கள் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை அதிகமாகப் பெற்றிருந்தனர்

(II கொரி. 12:12) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினாலே தீர்க்கதரிசனம் நிறைவேறியதை அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததன் மூலமாகத் தான் கண்டார்கள் (ஏற்கனவே குறிப்பிட்டபடி கொர்நேலியுவின் வீட்டாரைத் தவிர).

**அற்புதங்களின் நோக்கமும், முடிவும்**

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மூலமாகவும், வேறு சிலர் மூல மாகவும் அற்புத அடையாளங்கள் செய்வதற்கான நோக்கம் மாற்கு 16 : 20 ல் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து அவர் களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மாற்கு 16 : 20). அப்போதைய வெளிப்பாடான சுவிசேஷம் உறுதியாக்கப்பட்டு (எபி. 2 : 3) ஒட்டுமொத்த புதிய ஏற்பாடும் எழுத்து வடிவத்தில் தயாரானபோது ( யோவான் 20 : 30, 31 ) வாய்மொழியிலான பகுதி வெளிப்பாடுகளின்மேல் சார்ந்திருப்பது நின்றுபோய், பூரணமாக எழுதிக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின் மீது கவனம் திரும்பியது (I கொரி. 3 : 8 - 13 ; யாக். 1 : 25 ; எபே. 4 : 11 - 14). **எனவே, அற்புத அடையாளங்கள் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றின பிறகு, இப்பூமியில் வாழ்ந்த கிறிஸ்துவின் கடைசி அப்போஸ்தலன் மரித்தபிறகு அப்போஸ்தலர்கள் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப் பதற்காக யார்மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்தபிறகு**, அற்புத அடையாளங்கள் ஒழிந்து போயின. அதே நேரத்தில், சபைப் பணியில் பரிசுத்த ஆவியானவர் அற்புத அடையாளங்கள் மூலமாகக் கிரியை நடப்பித்தலும் நின்றுபோய் விட்டது.

அற்புத அடையாயங்களின் பிரதானமான நோக்கம் வியாதியுள் ளவர்களைச் சுகப்படுத்துவதாகவோ, முன்பு ஒருபோதும் கற்றிராத பாஷையில் பேசுகிறதாகவோ ஒருபோதும் இருக்கவில்லை. அல்லது வேறு ஏதாவது அற்புத அடையாள வெளிப்பாடகவோ இருக்கவில்லை. **அற்புதங்கள் ஒருபோதும் முடிவாயிராது**. கொரிந்து பட்டணத்து சபை அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றிருந்தது, அச்சபை அற்புத அடையாளங்களின்மீது அதிக சிந்தை வைத்து, அற்புத அடையாங்களின் உண்மையான நோக்கத்தை லேசாக எடுத்துக் கொண்டனர். இதற்காக அவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலால் கடுமையாகக் கடிந்து கொள்ளப்பட்டார்கள் (I கொரி. 12 - 14) அற்புத அடையா ளங்கள் தெய்வீக நோக்கத்திற்காக இல்லாமல் மனித விருப்பத்தின்படி செய்யப் பட்டிருந்தால், வியாதிப்பட்ட பரிசுத்தவான்களை சுகப்படுத்தாமலிந் ததற்காக எந்த விளக்கமும் கொடுக்க முடியாது (அப். 12 : 2 ). வேதாகம அற்புதங்கள் இன்று இருந்திருந்தால் மருத்துவமனைகளைக் கட்டுவதற்குப்

பதிலாக வியாதிப்பட்டவர்களை சுகமாக்காமலிருப்பதற்கான என்ன சாத்தியமான காரணங்களை மனிதர்கள் கொடுப்பார்கள்? ஈமச்சடங்கில் பிரசங்கிப்பதற்குப் பதிலாக, மரித்தோரை எழுப்பாமலிருப்பதற்கான என்ன சாத்தியமான காரணத்தை மனிதர்கள் கொடுப்பார்கள்?

நம்முடைய நாட்களில் பல மத அமைப்புகள் தங்களுக்கு அற்புத அடையாங்கள் வல்லமை இருப்பதாக சொல்லிக்கொண்டாலும் கூட நமக்கு தக்க ஆதாரங்கள் இருந்தால் தான் நாம் அதை நம்ப முடியும். இவர்கள் தங்களால் முடியாததை எப்படிச் செய்ய முடியும்? அவர்கள் சொல்லும் காரியங்கள் ஆச்சரியமாகவும், வினோதமாகவும் இருக்கிறது. அற்புத அடையாளங்கள் ஓய்ந்துபோன பிறகும் கூட இன்று பலர் அந்தக் கொரிந்து பட்டணத்து சபையர் சதா அதையே சிந்தித்துக் கொண்டிருந்ததுபோல, பலர் அற்புத அடையாளங்களைக் குறித்தே சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

**முடிவுரை:**


பரிசுத்த ஆவியானவர் இன்றைய நாட்களில் மனித இனத்தோடு அற்புத அடையாளங்களைக்கொண்டு இடைப்படுவதில்லை. தேவத்துவத்தில் அங்கம் வகிக்கும் பரிசுத்த ஆவியானவர் மனித இனத்தோடு எப்போதுமே புதிய வெளிப்பாடுகள் அல்லது வேறுவகையான அற்புதங்கள் மூலமாகவே இடைப்படவில்லை. மேலும், அற்புத அடையாளங்கள் அனுதின நிகழ்வாகவும் இருக்கவில்லை.

பரிசுத்த ஆவியானவர் இன்றைய நாட்களில் மனிதர்களுக்கு அற்புத அடையாங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப்பதில்லை என்பது வேதாகம மாணாக்கர்களுக்கு ஆச்சரியமாக இருக்காது. அற்புதங்களின் முடிவு சுவிசேஷத்தில் முன்னறிவிக்கப்பட்டது. முதல் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபை சுவிசேஷம் அற்புதவிதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதியாக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டு போதித்தபோது அது ஆவியில் தெய்வீகத் தன்மை உடையதாக இருந்தது. முதல் நூற்றாண்டைப் போலவே அடுத்தடுத்த நூற்றாண்டுகளிலிருந்து இந்நாள் வரை இயங்கிவரும் புதிய ஏற்பாட்டுச் சபை சுவிசேஷம் அற்புதவிதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உறுதியாக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டு போதிக்கும்போது அது ஆவியில் தெய்வீகத் தன்மை உடையதாக இருக்கிறது. இதில் வித்தியாசம் என்னவென்றால் அன்று பரிசுத்த ஆவியானவர் அற்புத விதமாச் செயல்பட்டார்; இன்று அவர் அப்படிச் செய்வதில்லை.

யோவேல் 2 : 28, 29 போன்ற தீர்க்கதரிசனங்கள் அப்போஸ்தலர்கள்

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டபோதே நிறைவேறியது. அடுத்ததாக, அப்போஸ்தலர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் அற்புத அடையாளங்கள் செய்தபோது தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறியது. அற்புத அடையாளங்களின் தலையாய நோக்கம் புதிய வெளிப்பாடாகிய சுவிசேஷத்தை உறுதி செய்வதாயிருந்தது. சுவிசேஷம் உறுதிசெய்யப்பட்ட பிறகு, அற்புத அடையாளங்களுக்கு அவசியமே இல்லை. மேலும், அப்போஸ்தலர்கள் மரித்துவிட்டபடியால், அவர்கள் யார்மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்தவிட்டபடியால், அற்புதங்களும் ஓய்ந்து போயின.

## தெய்வீக அன்பு


ரோமர் 5:8
I யோவான் 4:9-10,19
தேவனுடைய அன்பு
கிறிஸ்தவர்களில்லாதவர்கள் மற்றும் சத்துருக்கள்
மத்தேயு 5:43-44
பல திசைகளையுடைய அன்பு
மத். 22:37-40
I யோவான் 4:20-21
யோவான் 13:34-35
ரோமர் 12:10
கிறிஸ்தவ அன்பு
கிறிஸ்தவ அன்பு
மற்ற எஜமான்கள்
மத்தேயு 6:24
குடும்பம் மத்தேயு 10:37
பணம், I தீமோத்தேயு 6:10
உலகத்தன்மை
I யோவான் 2:15-17
சந்தோஷம் எபி 11:25
ஜீவன், யோவான் 12:25

அதிகாரம் - 13

# புதிய ஏற்பாட்டு சபை அன்பில் தெய்வீகத்தன்மை கொண்டுள்ளது

அன்பு என்னும் பாடத்தை விவாதிக்கச் சரியான கண்ணோட்டத்தில் பல கருத்துக்கள் உள்ளன. இருந்தபோதிலும், இது இப்பாடத்தின் நோக்கமல்ல. மாறாக, புதிய ஏற்பாட்டு சபையின் அன்பு யாரை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும் என்பது தான் கேள்வியாயிருக்கிறது. எந்த ரூபத்தில் இந்த அன்பு வெளிப்படுத்தப்படவேண்டும்? மேலும், இத்தகைய அன்பை வெளிப்படுத்த எவைகள் உந்தும் சக்திகளாக இருக்க வேண்டும்? இந்த அன்புக்கு தேவனால் பதிலளிக்கப்படுமா? அன்பின் சிறப்புத் தன்மைகள் யாவை? கடைசியாக. புதிய ஏற்பாட்டு சபை தேவனால் விவரிக்கப்பட்டிருக்கிற அன்பை செயல்படுத்து வதினால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**யாரில் அன்புகூர வேண்டும்?**

கர்த்தருடைய சபை யாரில் அன்புகூர வேண்டும் என்பதற்கு இயேசு கிறிஸ்து தாமே சுருக்கமாகப் பதிலளித்திருக்கிறார். இயேசு அவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்து மாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால். உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். (மத். 22:37-40).

தேவன் தம்முடைய ஜனங்களின் அன்பு பரிசுத்ததன்மை கொண்டதாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். இந்த விதி, தேவன் தம்முடைய பிள்ளைகள் ஆராதனையிலும், தனிப்பட்ட கிறிஸ்தவ ஜீவியத்துலும் எதிர்பார்க்கின்ற காரியங்களை உறுதிசெய்கிறது. நாம் இப்பரிசுத்த தன்மை கொண்ட அன்பைப் பெற்றிருக்கவில்லையென்றால் தேவனைப் பிரியப் படுத்தவோ அல்லது கர்த்தருடைய கட்டளையை திருப்திகரமாக எவ்வகையிலும் நிறைவேற்றவோ முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

முதலாவது, ஒருவர் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனில் அன்பு கூர வேண்டும். நாம் தேவனை நேசிக்கும் அளவுக்கு வேறு யாரையும் நேசிக்கக் கூடாது. அந்த அளவு அன்பை நாம் யாரோடும் பகிர்ந்துகொள்ள முடியாது, ஏனென்றால், அந்த உயரிய அன்பு தேவனுடையது (மத். 6 : 24). கிறிஸ்தவர்கள் இந்தக் காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எனவே, நாம் நம் பெற்றோர்களை அல்லது பிள்ளைகளை (மத். 10 : 37); பணத்தை (I தீமோ. 6 : 10); உலகத்தன்மையை (I யோவான் 2 : 15 – 17); உலக சந்தோஷத்தை (யோவான் 3 : 19; எபி. 11 : 25) : ஏன் நம் ஜீவனைக் கூட தேவனை விட அதிகமாக நேசிக்கக் கூடாது. நாமே அனுமதிக்கும் வரை தேவனுடைய அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது என்று நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8 : 35 – 39). தேவனுடைய அன்பு வளர்க்கப்பட வேண்டிய, காக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது (யூதா. 21) மேலும், தேவன் தம்மை யார் நேசிக்கிறார்கள் என்பதை அறிந்திருக்கிறார் (I கொரி.8:3). தேவனிடத்தில் அன்பு கூராதிருக்கிறவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் (I கொரி. 16 : 22).

நாம் இருதயத்திலிருந்து ஆராதிக்காவிட்டால் அது எதையும் சாதிக்காது. அது வெறும் பொழுதுபோக்காகத்தான் இருக்கும், இருதயத்திலிருந்து ஆராதனை ஊற்றெடுத்து வராவிட்டால் அது வெறுமையானதும் மதிப்பற்ற ஒன்றாகவும் தான் இருக்கும். தேவன் ஒருபோதும் பொய்யான ஆராதனையை விரும்புவதில்லை. அவர் எப்போதும் உண்மையான ஆராதனையத் தான் விரும்புகிறார். அதற்கு அவர் பாத்திரராயிருக்கிறார். மனிதன் தேவனிடத்தில் அன்புகூரும்போது அந்த அன்பு இயற்கையாகவே சக மனிதர்களிடத்தில் வெளிப்படுத்தப்படும். தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலேயே பெற்றிருக்கிறோம் ( I யோவான் 4:20,21 ). கிறிஸ்தவர்கள் மத்தியில் பகையுணர்வு, பட்சபாதம் போன்றவைகள் காணப்படும்போது அங்கே தேவனுக்கான அன்பு குறைவுபடுகிறது. மனிதன் தேவனிடத்தில் அன்புகூர கற்றுக்கொள்ளும்வரை அவனால் தேவனிடத்தில் அன்புகூர முடியாது. ஆகையால், அவன் தான் அயலகத்தாரை நேசிக்க வில்லையென்றால் தேவன்மீது போதுமான அன்பை வெளிப்படுத்த முடியாது.

இருந்தபோதிலும், ஒருவர் தேவனை உண்மையாக நேசிக்கும்போது சக மனிதர்களை நேசிப்பது இனிதாயிருக்கும். அயலகத்தாரிடத்தில் அன்பு கூருவது காணாத தேவனிடத்தில் அன்புகூருவதற்கு ஒத்திகையாக இருக்கிறது. இது முரண்பட்டது போலிருந்தாலும் உண்மையான கூற்றாயிருக்கிறது. தேவனி

டத்திலும், மனிதனிடத்திலும் அன்புகூருவது பரிசுத்த தன்மைகொண்ட அன்புக்கு மேலும் வலுவூட்டுகிறது. தேவனிடத்தில் அன்புகூருவது நாம் சக மனிதர்களிடத்தில் அன்பு காட்டுவதை மேம்படுத்துகிறது.

நாம் பிறரிடத்தில் அன்புகூர வேண்டுமென்று பலவசனங்கள் போதிக்கின்றன (மத். 19 : 19 ; ரோமர் 13 : 9, 10; கலா. 5 : 14; யாக். 2 : 8). நாம் எல்லோரிடத்திலும் அன்புகூர வேண்டுமென்றும் வேதவசனம் போதிக்கிறது (I தெச. 3 : 12). இருந்தபோதிலும், சில அயலகத்தாரிடத்தில் நம்மால் அன்புகூர முடியாது. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் சத்துருக்களையும் சிநேகிக்கும் படியாக கடமைப்பட்டிருக்கிறோம் (மத். 5 : 43, 44). நம்மிடத்தில் அன்புகூராத வர்களிடத்தில் அன்புகூருவது தேவனுடைய பிள்ளைகளுக்கும் இவ்வுலகத்தின் பிள்ளைகளுக்கும் இடையே காணப்படும் மிகப்பெரிய வித்தியாசமாகும் (மத் 5 : 46 ; லூக்கா 6 : 32). அன்பு என்பது சீஷத்துவத்தின் அடையாளமாயிருக்கிறது. அது உலகிற்கும், சகோதரர்களுக்கும் வெளிப்படையாகத் தெரிய வேண்டும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயி ருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள் (யோவான் 13 : 34,35).

பல புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் நாம் தேவனிடத்திலோ, இழந்து போனவர்களிடத்திலோ அன்பு கூருவதைவிட முதலாவது நாம் ஒருவரி லொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று அறிவிக்கின்றன. நாம் எல்லா வற்றுக்கும் மேலாக தேவனிடத்தில் அன்புகூர வேண்டும். அப்போது தான் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியும் என்பது உண்மையாக இருந்தாலும் கூட சகோதரர்கள் மத்தியில் காணப்படவேண்டிய சகோதர சிநேகத்தைக் குறித்து வசனங்களில் வலியுறுத்தப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று சுவிசேஷமானது மீண்டும் மீண்டும்வலியுறுத்துகிறது (யோவான் 15:12,17; ரோமர் 13 : 8 ; I தெச. 3 : 12 ; 4 : 9 ; I பேதுரு 1 : 22; I யோவான் 3 : 11, 23 ; 4 : 7). சகோதரர்கள் சகோதர சிநேகத்தை நடைமுறைப்படுத்தும்படி உற்சாகப்படுத்தப் படுகிறார்கள் (ரோமர் 12:10; I தெச. 4 : 9; எபி. 13 : 1). சகோதரிடத்தில் அன்பு கூருங்கள் (I பேதுரு 2 : 17), சகோதர சிநேகமுள்ளவர்களாயிருங்கள் (I பேதுரு 3 : 8). சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள் (I யோவான் 3:14) என்று வேதவசனங்கள் மீண்டும் மீண்டும் சொல்லுகின்றன.

நிச்சயமாகவே, சகோதரர்களுக்குள்ளே அன்பை வெளிப்படுத்துகிற காரியமாக இருந்தாலும் சரி அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே இருப்ப

வர்களிடத்தில் அன்பு காட்டுகிற காரியமாக இருந்தாலும் சரி, நாம் நம் குடும்பங்களை நேசிப்பது போல நேசிக்க வேண்டும். நாம் அன்பு செலுத்த வேண்டிய குடும்ப அங்கத்தினர்களில் தாயும், தகப்பனும் முதலிடத்தைப் பிடிக்கிறார்கள் ( மத். 19 : 19). நம் குடும்ப அங்கத்தினர்களில் எல்லோரையும் விட நம் வாழ்க்கைத் துணையிடத்தில் அதிகமாக அன்புகூர வேண்டுமென்று சுவிசேஷம் கூறுகிறது ( எபே. 5 : 25 - 35; கொலோ. 3 : 19 ; தீத்து 2 : 14). தேவன் விவாகம் என்னும் தெய்வீக அமைப்பை உயர்வாகப் பார்த்து, அதற்கு அன்பு எவ்வளவு அவசியம் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார். சமுதாயத்திற்கும், சபைக்கும் குடும்பமே அடிப்படையாக இருக்கிறது.

**சபை எப்படி அன்பு செலுத்த வேண்டும்?**

அப்போஸ்தலனாகிய யோவான் தேவ ஆவியினால் ஏவப்பட்டு, குறிப்பாக தன்னுடைய எழுத்துக்களில் அன்புக்கும், கீழ்ப்படிதலுக்கும் இடையே காணப்படும் பிரிக்கமுடியாத உறவைக் குறிப்பிடுகிறார். ஒருவர் தேவனுடைய பிரமாணங்களை அலட்சியப்படுத்திக்கொண்டு, தான் தேவனை நேசிக்கிறதாகச் சொல்ல முடியாது. நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் ( யோவான் 14 : 15 ). என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் ( யோவான் 14:21). இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம் ( யோவான் 14:23 ). நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்கனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் ( யோவான் 15:18 ). " நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (I யோவான் 5:3).

சபை எப்படி அதன் அன்பைக் காட்ட வேண்டும்? வேதாகம அறிவுரைக்கு மாற்றாக ஏதாவது இருக்கிறதா? கிறிஸ்தவர்கள் அன்பை நடைமுறைப்படுத்துவதோடுகூட சுவிசேஷ புத்தகத்தில் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமையைச் செய்யும்படியாகவும் வலியுறுத்தப்படுகிறார்கள். உதாரணமாக, நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து

கொள்ளுகிறோம்" ( I யோவான் 5:2 ). " அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளும்போது தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" ( I யோவான் 2:5).

**சபை ஏன் அன்பு கூரவேண்டும்?**

கர்த்தருடைய சபை ஏன் அன்பு கூர வேண்டுமென்று வேதவாக்கியங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. " அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம் " ( யோவான் 4 : 14 ) வேதத்தில் எனக்குப் பிடித்த வசனப்பகுதி ரோமர் 5:8. இவ்வசனம் இவ்வுண்மையை இவ்வாறு விளக்கமாகச் சொல்லுகிறது. " நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" என்று. மனித இனம் பாவத்தின் ஆழத்திலும், உளையான சேற்றிலும் உழன்று நம்பிக்கையின்மை என்னும் படுகுழியில் விழுந்து கிடந்தது. மானிடம் தன் நித்தியத்தைப் பற்றி கவலைப்படாமல், உல்லாசத்தைத் தேடியபோதும் தேவன் நம்மீது அக்கறை கொண்டு பாவமற்ற தமது குமாரனை பாவிகளாகிய நமக்காக இப்பூமிக்கு அனுப்பினார். விழுந்துபோன, அருவருக்கத்தக்க என்னைப் போன்ற மனித னிடத்தில் தேவன் காட்டிய தெய்வீக ஈடுஇணையற்ற அன்பையும், அந்த அன்பின் அளவையும் இன்னும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது " (I யோவான் 4:9,10).

**அன்புக்கு பலன் அளிக்கப்படுமா?**

ஆம். இவ்வுலகத்திலும், உண்மையுள்ளவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் நித்திய வாழ்விலும் அன்புக்கு பலன் அளிக்கப்படும். தேவனுடைய பராமரிப்பு அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்காக கிரியை செய்கிறது. " அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" ( ரோமர் 8 : 2). கடைசியாக, ஜீவகிரீடம் அல்லது நித்திய ராஜ்யம் என்பது தேவனில் அன்புகூர்ந்தமைக்காகப் பலனாகக் கொடுக்கப்படும். " சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் " (யாக். 1: 12). என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தில் தரித்தரை விசுவாசத்தில்

ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும், தெரிந்து கொள்ளவில்லையா? (யாக். 2 : 5).

**அன்பின் தரம்**

மனிதன் நாடுகிற எல்லாவற்றைப் பார்க்கிலும் அன்பை உயர்வாக பார்க்கச் செய்வது எது? அன்பு பாசாங்கு செய்யாது, அது வெளிப்படையானதும் உண்மையானதும் அழியாததுமாயிருக்கிறது ( எபே. 6 : 24). அன்பு மாயமற்றதாயிருக்கிறது (ரோமர் 12 : 9 ; I பேதுரு 1 : 22 ). இந்த அன்பு யாருக்குள் வெளிப்பட இருக்கிறதோ அவர்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்புகளைத் தேடுகிறது. ( கலா. 5:13 ). அன்பு விசுவாசத்திற்கு மிகச்சிறந்த கூட்டாளியாயிருக்கிறது (எபே. 6 : 23; I தீமோ. 1 : 13). பிறரை உயர்வாகப் பார்ப்பதும், அன்பும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்லுகிறது ( I தெச.5 : 13 ). கிறிஸ்தவ அன்பு அடையப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது (I தீமோ.6 : 11; கலா. 5 : 22 , 23). தேவன் அன்பைப் பற்றி விரிவாகப் பேசியிருக்கிறார். அதனால் தான் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அன்பின் ஆவியைக் கொடுத்திருக்கிறார் ( II தீமோ. 1 : 7 ).

உண்மையான அன்பு உதட்டளவில் இருக்கக்கூடாது. மாறாக, செயல்களில் அதாவது, உள்ளத்தில் இருக்க வேண்டும். மேலும், இவ்வன்பு கிரியைகளினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (I தெச. 1 : 3; எபி. 6 : 10). அன்பு மற்ற பண்புகளைப் போலவே. கிறிஸ்தவனுக்குள் நிலைத்திருக்க வேண்டிய பண்பாயிருக்கிறது (யோவான் 3 : 17). அன்பு சத்தியத்தைப் பேசத் தூண்டுகிறது ( எபே. 4 : 15 ). மேலும், அன்பு நம் வாழ்க்கை முறையாயிருக்கிறது. நாம் அன்பில் நடக்க வேண்டும் ( எபே. 2 ). நாம் அன்பில. பெருகுகிறவர்களாக இருக்கிறோம் (பிலி. 1 : 9). நாம் அன்பினால் இணைக்கப்படுகிறோம் (கொலோ. 2 : 2 ). ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் உண்மையாகவே அன்பு காணப்படும்போது, அதற்குப் போதுமான ஆதாரங்கள் காணப்படும். அது வெளிப்படையாகவும் தெரியும் (II கொரி. 8 : 24).

I கொரி. 13 : 4 - 7 வசனப்பகுதி வேதாகமத்தில் மிகச் சிறந்த அன்பு பற்றி உள்ளடக்கியிருக்கிறது. " அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிருக்காது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் ".

**அன்பின் விளைவுகள்**

அநேமாக அன்பின் மிக முக்கிய விளைவுகள் 1. அது தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தாக்கத்தையும் 2. அதன் தொடர்ச்சியாக, நாம் பரலோகத்தில் வெற்றிகரமாகப் பிரவேசிப்பதில் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. "நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல ( I யோவான் 4:17,18 ). மனிதன் தான் உத்தேசித்திருக்கிற குறிக்கோளை அடைய அன்பு பேருதவியாயிருக்கும். அன்பில்லையென்றால் அவன் தன் இலக்கை அடைய முடியாது. நம்முடைய அன்பு பெருகத்தக்கதாக நாம் அன்புசெய்ய ஒருவரையொருவர் ஏவவேண்டும் ( எபி. 10:24 ). உண்மையாகவே, அன்பானது இவ்வுலகத்திற்கும், இனிவரும் உலகத்திற்கும் அவசியமான நன்மையான ஒன்றாக இருக்கிறது.

**முடிவுரை**

நாம் இவ்வுலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூருவதைவிட பிரதானமாக தேவனிடத்திலும், அதைத் தொடர்ந்து சக மனிதர்களிடத்திலும் அன்புகூருவது அவசியமாயிருக்கிறது. சக கிறிஸ்தவர்களிடத்தில் அன்பு கூருவது மிகவும் முக்கியமாகும். சபையும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களிடத்தில் அன்புகூருவது மிகவும் முக்கியமாகும். சபையும், தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் அன்பான சூழ்நிலையில்தான் செழித்தோங்கி வளரமுடியும்.

தேவனால் ஏற்கனவே மனிதனுக்கு பொழிந்தருளப்பட்டிருக்கிற அன்புக்கு மனிதனுடைய சரியான பதில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது தான். தேவன் தம்முடைய அன்பைப் பிரதிபலிக்கும் பிள்ளைகளுக்கு நிச்சயமாகப் பதிலளிப்பார்.

வேதாகம அன்பைப் பின் தொடர்ந்தால், நாம் எப்படியாயிருக்கும்படியாக தேவன் விரும்புகிறாரோ அப்படி நம்மை அவர் இருக்கச் செய்கிறார். நம்மில் அன்பு காணப்படுமானால், நாம் அவ்வன்பை நடைமுறைப்படுத்தினால் எப்போதும் வாழ்க்கை இனிமையாக இருக்கும். அதுமாத்திரமல்ல, தேவனோடு நித்தியத்தைக் கழிக்கும் ஆசீர்வாதமும் பொழிந்தருளப்படும். அன்பு மரண பயத்தை நீக்கி, நியாயத்தீர்ப்புக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. மனிதனுக்கு இவ்வளவு நன்மைகளை இப்போதும், நித்தியத்திலும் செய்ய வல்லமையுள்ள இந்த அன்பை மனிதன் ஏன் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளக்கூடாது?